# ஆண்டறிக்கை 2016

## கை.அ.ச.

இலங்கைக் கைத்தொழில் அபிவிருத்திச் சபை

# *எமது தொலைநோக்கு*

*“இலங்கையில் நாடளாவிய ரீதியில் உள்ள அனைத்துக் கைத்தொழில்களையும் அபிவிருத்தி செய்தல்”*

# *எமது பணிநோக்கு*

“இலங்கையில் நாடளாவிய ரீதியில் உள்ள அனைத்துக் கைத்தொழில்களையும் ஊக்குவித்தல், மேம்படுத்துதல், அபிவிருத்தி செய்தல் ஆகியவற்றிற்குத் தேவையான மூலோபாயத் தொழில்நுட்ப மற்றும் வர்த்தக அடிப்படையினை வழங்குதல்”

## இலங்கைக் கைத்தொழில் அபிவிருத்திச் சபையின் பணிப்பாளர் சபை

2016 ஜனவரி முதல் டிசம்பர் வரை

| | | |
|---|---|---|
| திரு. மகிந்த ஜினசேன | - | தலைவர் |
| திரு.ரீ.டீ.எஸ்.பீ. பெரேரா | - | பணிப்பாளர் சபை உறுப்பினர் |
| திரு. தர்சன் விஜயசிறிவர்த்தன | - | பணிப்பாளர் சபை உறுப்பினர் – (திறைசேரியின் பிரதிநிதி) |
| திரு.கலீல் றஹுமதுல்லா | - | பணிப்பாளர் சபை உறுப்பினர் |
| திருமதி. மாலிகா சமரவீர | - | பணிப்பாளர் சபை உறுப்பினர் |
| திரு. நிசாத கமகே | - | பணிப்பாளர் சபை உறுப்பினர் |
| திரு. சமீன் பெரேரா | - | பணிப்பாளர் சபை உறுப்பினர் |
| திரு. றோய் ஜெயசிங்க | - | சபையின் அவதானிப்பாளர் |

2016 மே மாதம் 10ஆம் திகதி முதல்

| | | |
|---|---|---|
| திரு.பீ.டபிள்யு.பீ. மெண்டிஸ் | - | பணிப்பாளர் சபை உறுப்பினர் |

# தலைவரின் செய்தி



இலங்கைக் கைத்தொழில் அபிவிருத்திச் சபையின் 2016ஆம் ஆண்டிற்கான ஆண்டறிக்கைக்கு எனது செய்தியினை வழங்குவதற்குச் சந்தர்ப்பம் கிடைத்தமையிட்டு நான் பெரும் மகிழ்வடைகின்றேன். நான்கு தசாப்தங்களுக்கு மேற்பட்ட காலமாக இலங்கைக் கைத்தொழில் அபிவிருத்திச் சபை இலங்கையிலுள்ள வர்த்தக சமூகத்திற்குப் பல்வேறு துறைகளினூடாக அபிவிருத்திக்கான ஒத்துழைப்புகளை வழங்கியுள்ளது. தொழில் முயற்சி அபிவிருத்தி, ஆற்றல் விருத்தி, தொழில்நுட்பத்தை மேம்படுத்துதல் உள்ளிட்ட தொழில்நுட்ப அறிவினை வழங்குதல், சந்தைப்படுத்தல் உதவி, கழிவுப் பொருட்களை வழங்குதல் போன்றவை கைத்தொழில் அபிவிருத்திச் சபை தனது சேவைகளை வழங்கியுள்ள பிரதான துறைகளாக இனங்காண முடியும். இன்று நாங்கள் இந்நாட்டின் பொருளாதாரத்தின் பரிமாற்றத்திற்கானதொரு கட்டத்திற்கு வருகை தந்துள்ளதுடன் அரசாங்கம் நாட்டினை அபிவிருத்தி செய்வதற்காகப் பல்வேறு நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளது.

2016ஆம் ஆண்டில் கைத்தொழில் அபிவிருத்திச் சபை கைத்தொழிற் பேட்டைகளை நவீன மயப்படுத்துதல், தொழில் வாய்ப்புக்களை உருவாக்குதல் மற்றும் “ஆயிரம் கிராமங்களை அபிவிருத்தி செய்யும் நிகழ்ச்சித் திட்டத்தின்” கீழ்க் கிராமங்களை அபிவிருத்தி செய்தல் போன்றவை உள்ளிட்ட பல்வேறு அபிவிருத்திச் செயற்பாடுகளை நாடு முழுவதும் நடைமுறைப்படுத்தித் தேசிய முன்னுரிமைகளுக்கு ஏற்ப சிறிய மற்றும் நடுத்தர அளவிலான கைத்தொழில் துறையினை அபிவிருத்தி செய்வதற்கு விசேட கவனத்தைச் செலுத்தியுள்ளது. இந்நிகழ்ச்சித் திட்டங்களின் முதன்மையான நோக்கம் இந்நாட்டில் காணப்படுகின்ற பாரம்பரிய கிராமங்களைக் கட்டியெழுப்புவதாகும். பாதணித் துறை சார்ந்த உற்பத்தியாளர்களுக்கு நலன்களைப் பெற்றுக் கொடுக்கும் பொருட்டுக் கைத்தொழில் அபிவிருத்திச் சபை 2016ஆம் ஆண்டில் இலங்கை ஏற்றுமதி அபிவிருத்திச் சபையுடன் இணைந்து கொழும்பு சிறீமாவோ பண்டாரநாயக்க ஞாபகார்த்தக் கண்காட்சி நிலையத்தில் பாதணி மற்றும் தோற் பொருட்கள் சார்ந்த வர்த்தகக் கண்காட்சியொன்றை நடாத்தியது. இதற்கு மேலதிகமாக் கைத்தொழில் அபிவிருத்திச் சபை நெதர்லாந்து நாட்டினைச் சேர்ந்த தொம் றிச்சன் எனும் நிபுணரின் பங்கேற்புடன் பால் உற்பத்தியின் தரத்தினை மேம்படுத்துவதற்கு மிகவும் வெற்றிகரமான ஒரு செயலமர்வினையும் நடாத்தியது.

மேலும், இவ்வருடத்தில் கைத்தொழில் அபிவிருத்திச் சபை அச்சபையின் வளவில் றோபோவினை ஈடுபடுத்தும் சிறப்பு நிலையம் ஒன்றையும் தாபிக்க உள்ளது என்பதை மிகவும் மகிழ்ச்சியுடன் குறிப்பிட விரும்புகின்றேன். சிறிய மற்றும் நடுத்தர அளவிலான கைத்தொழில்களுக்கு றோபோ தொழில்நுட்பத்தை அறிமுகப்படுத்துதல் இந்நிலையத்தைத் தாபிப்பதன் முக்கியமான நோக்கமாகும். 2019 ஆம் ஆண்டின் முதல் அரையாண்டில் இந்நிலையத்தினைத் திறந்து வைப்பதற்குத் தற்போது நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

2016ஆம் ஆண்டில் கைத்தொழில் அபிவிருத்திச் சபை நடைமுறைப்படுத்திய மிகவும் பயனுறுதி மிக்க நிகழ்ச்சித் திட்டங்களைப் பற்றிய விபரங்களை உள்ளடக்கிய வெற்றிகரமான அபிவிருத்திச் செயன்முறைகள் தொடர்பான முக்கியமான விடயங்களை இவ்வறிக்கை உள்ளடக்கியுள்ளது. கைத்தொழில் அபிவிருத்திச் சபையினால் நடைமுறைப்படுத்தப்பட்ட இப்பிரதான நிகழ்ச்சித் திட்டங்களை உருவாக்குவதற்காக வழங்கிய ஒத்துழைப்பிற்கும் வழிகாட்டுதல்களுக்கும் கைத்தொழில் மற்றும் வாணிப அலுவல்கள் அமைச்சர் கௌரவ றிசாட் பதியுதீன் அவர்களுக்கும் இராஜாங்க அமைச்சர் கௌரவ சம்பிக பிரேமதாச அவர்களுக்கும் கைத்தொழில் மற்றும் வாணிப அலுவல்கள் அமைச்சின் செயலாளர் அவர்களுக்கும் எனது நன்றியினை இச்சந்தர்ப்பத்தில் தெரிவித்துக் கொள்ள விரும்புகின்றேன். மேலும், கைத்தொழில் அபிவிருத்திச் சபையின் பணிப்பாளர் சபை உறுப்பினர்கள், பிரிவுத் தலைவர்கள் மற்றும் அனைத்துப் பணியார்களினாலும் வழங்கப்பட்ட ஒத்துழைப்பிற்கு எனது மனமார்ந்த நன்றியினை இச்சந்தர்ப்பத்தில் தொிவிக்கின்றேன்.

**மகிந்த ஜினசேன**
**தலைவர்**

# பணிப்பாளர் நாயகத்தின் மீளாய்வு



2016ஆம் ஆண்டு, அமைச்சு மற்றும் தேசிய மட்டத்திலான அபிவிருத்திச் செயற்பாடுகளுடன் ஒருங்கிணைந்த பல விசேட நிகழ்ச்சித் திட்டங்களுக்கும் கருத்திட்டங்களுக்குமான பல்வேறு திட்டங்களைக் கொண்டதொரு ஆண்டாக அமைந்தது. ஆண்டின் நிதியறிக்கையில் முக்கியமான சில கருத்துக்களை உள்ளடக்கும் வகையில் சபையின் முன்னேற்றத்தைப் பற்றிக் கலந்துரையாடுவதற்கு இச்சந்தர்ப்பம் கிடைத்ததையிட்டு நான் பெரும் மகிழ்வடைவதுடன் எதிர்வரும் ஆண்டில் மிகவும் வெற்றிகரமான மூலோபாய ரீதியிலான செயற்றிட்டம் ஒன்றை வகுத்துக் கொள்வதற்கு அது நிச்சயமாக உதவியளிப்பதாக அமையுமென நான் நம்புகின்றேன்.

2016ஆம் ஆண்டு பிராந்திய மட்டத்தில் நடைமுறைப்படுத்தப்பட்ட பல அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டங்களுடன் ஆரம்பமாயிற்று. கைத்தொழில் அபிவிருத்திச் சபை அனைத்து மாவட்டங்களிலும் அமைந்துள்ள உள்நாட்டுச் சிறிய மற்றும் நடுத்தர அளவிலான கைத்தொழில்கள் சம்பந்தமாக அதிக கவனத்தைச் செலுத்திச் சபையின் அனைத்துப் பிரிவுகளினதும் பங்களிப்புடன் விசேட சேவைப் பொதியொன்றினை வழங்கி அக்கைத்தொழில்களைப் பதிவு செய்து கொண்டது. மேலும், கைத்தொழில் அபிவிருத்திச் சபை பிராந்திய மட்டத்தில் கைத்தொழிலாளர்களுக்கு மிகவும் உயர்ந்த சேவையினை வழங்கும் பொருட்டு மாவட்ட மட்டத்திலான தமது தொழிற்பாடுகளை நவீன மயப்படுத்துவதற்காக அதிக கவனத்தைச் செலுத்தியதுடன் அதன் கீழ் 3 மாவட்டங்களிலும் மாவட்ட அலுவலகங்களினது தரம் தேசிய ஆக்க விளைவுச் செயலகத்தினால் நடாத்தப்பட்ட விசேட பாராட்டு நிகழ்ச்சிகள் பாராட்டினைப் பெற்றுக்கொள்ளும் அளவிற்கு உயர்ந்த மட்டத்திற்கு முன்னேற்றப்பட்டது.

மீளாய்வு ஆண்டில் கைத்தொழில் அபிவிருத்திச் சபை கைத்தொழிற் பேட்டைகளின் உட்கட்டமைப்பு வசதிகளையும் ஏனைய வசதிகளையும் பெருமளவு முன்னேற்றுவதற்காக நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளது. அக்கால கட்டத்தில் அமைச்சின் நிதியத்தைப் பயன்படுத்தி உள்வாரியான வீதிகள், மதகுகள், எல்லைச் சுவர்கள், ஏனைய கட்டிடங்கள், ஆகியவற்றின் வசதிகளைப் பெருமளவு விருத்தி செய்தது. இதன்படி கைத்தொழிற் பேட்டைகளின் உட்கட்டமைப்பு வசதிகள் சர்வதேச தரங்களுக்கு இசைந்தொழுகும் வகையில் உயர்த்தப்பட்டு, உலகளாவிய போட்டிக்கு முகங்கொடுக்கக் கூடிய வகையில் கைத்தொழிற் பேட்டைகளை அமைத்துக் கைத்தொழில்களுக்குக் காணப்படும் ஆற்றலை முன்னேற்றுவதற்கு விசேட கவனம் செலுத்தப்பட்டது.

மேலும், மீளாய்வாண்டில் சபையின் தொழில்நுட்ப சேவைப் பிரிவு சர்வதேச வளப் பகிர்வாளர்களின் பங்களிப்புடன் நிகழ்ச்சித் திட்டங்களை நடைமுறைப்படுத்தித் தொழில்நுட்பத்தை வழங்குவதற்கான நீண்டகாலச் சான்றிதழ்ப் பாடநெறிகளை அறிமுகப்படுத்தி அப்பிரிவினால் வழங்கப்படும் சேவைப் பொதிகளை மேலும் விரிவாக்கியுள்ளது. இது கைத்தொழிலாளர்களுக்குத் தங்களது சம்பந்தப்பட்ட விடயத் துறை சம்பந்தமாக முழுமையான ஒரு விழிப்புணர்வை வழங்குவது மாத்திரமன்றி, அவர்களின் செயற்பாடுகளிலுள்ள பிரச்சினைகளை இனங்கண்டு, அவர்களுக்குப் பொருத்தமான தீர்வுகளை வழங்குவதற்கு உதவியளிக்கின்றது.

இறப்பர் உற்பத்தி அபிவிருத்தி நிலையம் நவீன இயந்திரமொன்றைப் பயன்படுத்தி அத்துறைக்கான இறப்பர் இன்ஜக்சன் மோல்டிங் செயன்முறை ஊடாக இறப்பர் உற்பத்தியை மேற்கொள்வதற்குத் தேவையான நவீன தொழில்நுட்பத்தை அறிமுகப்படுத்துவதற்கு நடவடிக்கை மேற்கொண்டுள்ளது. உள்நாட்டுச் சிறிய மற்றும் நடுத்தர அளவிலான கைத்தொழிலாளர்களுக்கு உற்பத்தியினைப் பரிசோதனை செய்வதற்கான வசதிகள் மற்றம் கைத்தொழிலாளர்களின் தேவைக்கு ஏற்ற வகையில் தயாரிக்கப்பட்ட இயற்கை மற்றும் செயற்கை இறப்பர் கலவை தயாரிக்கும் வசதிகளை வழங்கி அத்துறைக்கு இடையறாமல் ஒத்துழைப்பினை வழங்குவதற்கு மேலதிகமாக உயர்ந்த மட்டத்திலான அளவைச் செம்மையுடன் கூடிய உற்பத்தித் தரத்திற்குச் சம்பந்தப்பட்ட போட்டிமிகு உற்பத்தி முறைமைகளை இசைவாக்கம் செய்து கொள்வதற்கு உள்நாட்டுக் கைத்தொழிலாளர்களுக்கு ஒத்துழைப்பினை வழங்குகின்றது.

கைத்தொழில் அபிவிருத்திச் சபையின் மீளாய்வாண்டின் இலக்குகளை ஈடேற்றிக் கொள்வதற்கு கைத்தொழில் அபிவிருத்திச் சபைக்கும் அதன் பணியாளர்களுக்கும் தேவையான வழிகாட்டல்களையும் ஊக்குவிப்பினையும் ஒத்துழைப்பினையும் வழங்குதல் தொடர்பாகக் கௌரவ அமைச்சர் அவர்களுக்கும் அமைச்சின் செயலாளருக்கும் பணியாளர்களுக்கும் கைத்தொழில் அபிவிருத்திச் சபையின் சார்பில் எனது மனமார்ந்த நன்றியினைத் தொிவித்துக்கொள்ள இதனைச் சந்தர்ப்பமாகப் பயன்படுத்திக் கொள்கின்றேன். மேலும், பணியாளர்களின் பெருமளவு ஒத்துழைப்புடன் மூலோபாய ரீதியான செயன்முறைகளைப் பின்பற்றுவதனூடாகக் கைத்தொழில் அபிவிருத்திச் சபைக்கு அடைந்துகொள்ளுதலுக்கு ஆற்றல் கிட்டிய உயர்ந்த மட்டத்திலான வெற்றியின் பால் சபையின் தலைவர் உள்ளிட்ட பணிப்பாளர் சபை உறுப்பினர்களும் முகாமைத்துவமும் பணியாளர்களும் வழங்கிய அர்ப்பணிப்பு மற்றும் ஒத்துழைப்பிற்கு எனது நன்றியினைத் தொிவித்துக் கொள்ள விரும்புகின்றேன்.

**பீ.எல்.யூ. ரத்னமலல**
**பணிப்பாளர் நாயகம்**

# உள்ளடக்கம்


**1.0 நிறுவனம்** 01-04

1.1 பின்னணி
1.2 சபையின் குறிக்கோள்கள்
1.3 சபையின் பிரிவுகள் மற்றும் வழங்கப்படும் சேவைகள்
1.4 பிரதான சேவைகளும் வசதிகளும்
1.5 தாபனக் கட்டமைப்பு

**2.0 செயலாற்றுகை மீளாய்வு** 05-14

2.1 சபையின் பல்வேறு துறைகளினால் வழங்கப்படுகின்ற சேவைகள்
2.2 தொழில்நுட்பத்தை வழங்குதல், உற்பத்தி அபிவிருத்தி மற்றுத் தொழில்நுட்பச் செய்முறை விளக்க நிகழ்ச்சித் திட்டங்கள்
2.3 ஒவ்வொரு பிரிவினாலும் 2016ஆம் ஆண்டு செயற்றிட்டத்தை நடைமுறைப்படுத்தியதில் முன்னேற்றம்

**3.0 2016ஆம் ஆண்டு நடைமுறைப்படுத்தப்பட்ட விசேட செயற்பாடுகள்** 15-19

3.1 உணவுத் தயாரிப்புக் கைத்தொழிற் துறை அபிவிருத்தி - மேற்கு மாகாணம்
3.2 பால் சார்ந்த உற்பத்திகளின் தரத்தினை மேம்படுத்துவதற்கான செயலமர்வு
3.3 தொழில்நுட்பத்தை வழங்கும் செயலமர்வு
3.4 கண்காட்சி
- பாதணி மற்றும் தோற் பொருள் விற்பனைக் கண்காட்சி - 2016

3.5 ஏற்றுமதி மேம்படுத்தல மாநாடு
3.6 சந்தையினை வெற்றி கொள்வதற்கான எதிர்கால நடவடிக்கைகள் – சிறிய, நடுத்தரக் கைத்தொழில்களுக்கான சந்தைப்படுத்தல் நிகழ்ச்சித் திட்டம்

**4.0 செயலாற்றுகை வெற்றிகள்** 20

- நிர்வாக் பிரிவு (AD) 21-22
- பிராந்திய அபிவிருத்திப் பிரிவு (RDD) 23-28
- திட்டமிடல் பிரிவு (PD) 29-30
- சந்தைப்படுத்தல் பிரிவி (MD) 31-34
- கைத்தொழிற் பேட்டைப் பிரிவு (IED) 35-40
- இறப்பர் உற்பத்தி அபிவிருத்தி மற்றும் சேவைகள் நிலையம்(RPD&SC) 41-43
- பொறியியல் பிரிவு (ED) 44-46
- தொழில் முயற்சி அபிவிருத்தி மற்றும் ஆலோசனை சேவைகள் நிலையம்(CEDACS) 47-48
- தொழில்நுட்பச் சேவைப் பிரிவு (TSD) 49-52
- தோற் பொருள் உற்பத்தி மற்றும் பாதணி அபிவிருத்தி நிலையம்(CDLPF) 53-56

**5.0 நிதிக் கூற்றுக்கள்** 57

- விரிவான நிதிநிலைக் கூற்று 58
- விரிவான வருமானக் கூற்று 59
- உரிமைப் பங்கிலான மாற்றங்கள் பற்றிய கூற்று 60
- காசுப் பாய்வுக் கூற்று 61
- முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளும் ஏனைய தெளிவுபடுத்தற் தகவல்களும் 62-84

**6.0 சபையின் தெளிவுபடுத்தலுக்கான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை** 85-96

# 1.0 நிறுவனம்

## 1.1 பின்னணி

இலங்கைக் கைத்தொழில் அபிவிருத்திச் சபை 1957ஆம் அண்டின் 49ஆம் இலக்க அரச கைத்தொழில் கூட்டுத்தாபனச் சட்டத்தின் கீழ் முதலாவதாக 1966ஆம் ஆண்டில் தாபிக்கப்பட்டது. பின்னர் 1969ஆம் ஆண்டின் 36ஆம் இலக்கக் கைத்தொழில் அபிவிருத்திச் சட்டத்தின் கீழ்க் கைத்தொழில் அபிவிருத்திச் சபை அதன் தற்போதைய வடிவத்தில் கூட்டிணைக்கப்பட்டது. இந்தச் சட்டத்தின் பிரகாரம் கைத்தொழில் அபிவிருத்திச் சபைக்கு இலங்கையின் கைத்தொழில் பிரிவினை அபிவிருத்தி செய்யும் பொறுப்புச் சாட்டப்பட்டுள்ளது.

## 1.2 சபையின் குறிக்கோள்கள்

1969ஆம் ஆண்டின் 36ஆம் இலக்கக் கைத்தொழில் அபிவிருத்திச் சட்டத்தில் நிச்சயிக்கப்பட்டுள்ளவாறு கைத்தொழில் அபிவிருத்திச் சபையின் குறிக்கோள்கள் பின்வருமாறு,

- இலங்கையின் கைத்தொழில்களை ஊக்குவித்தல், மேம்படுத்துதல், முன்னேற்றுதல் போன்றவற்றுக்கு ஒத்துழைப்பு வழங்குதல்
- இந்நாட்டின் பொருளாதாரத்தில் தனியார் மற்றும் அரச துறைகளுக்குச் சொந்தமான அனைத்துக் கைத்தொழில் முயற்சிகளுக்கும் உரிய ஒருங்கிணைப்பும் மற்றும் ஒன்றோடொன்று தொடர்புடைய வளர்ச்சிகளுக்கு ஒத்துழைப்பும் வழங்குதல்
- இலங்கையின் இயற்கை வளங்களைப் பயன்படுத்துதல், கைத்தொழில்களில் பயன்படுத்தப்படுகின்ற தொழில்நுட்பச் செயன்முறைகள் மற்றும் நடைமுறைகளை மேம்படுத்துதல் அத்துடன் உள்நாட்டுக் கைத்தொழிலுக்குப் பொருத்தமான தொழில்நுட்பம் மற்றும் உபகரணங்களை விருத்தி செய்தல், உருவாகும் கழிவுகளை மிகச் சிறந்த முறையில் பயன்படுத்துவதற்கான செயன்முறைகளையும் நடைமுறைகளையும் தயாரித்தல் ஆகிய குறிக்கோள்களுடன் கைத்தொழில் ஆராய்ச்சியினை ஊக்குவித்தல்
- உள்நாட்டுக் கைத்தொழில் உற்பத்தியினை வெளிநாட்டுச் சந்தைக்கு எற்றுமதி செய்வதனை மேம்படுத்துதல்
- கைத்தொழில் அபிவிருத்திக்குத் தேவையான அல்லது சாதகமானவாறு சர்வதேச சந்தை மற்றும் வலய ஒத்துழைப்பு ஆகிய துறைகளில் மேற்கொள்ளப்படுகின்ற நடவடிக்கைகளுக்கு உதவி வழங்குதல்
- மூலதனம் மற்றும் கடன், சந்தைப்படுத்தல், முகாமைத்துவம் அத்துடன் தொழில்நுட்ப வசதிகள், சட்ட ஆலோசனைகள் வழங்குதல் உள்ளிட்ட இலங்கையிலுள்ள எந்தவொரு கைத்தொழில் முயற்சிக்கும் அல்லது கைத்தொழில் நிறுவனத்திற்கும் அவற்றிற்கு ஏதுவாகத் தேவையாக இருக்கின்ற அனைத்து வகைகளிலுமான வசதிகளையும் சேவைகளையும் வழங்குதல்

### 1.3 சபையின் பிரிவுகளும் சேவைகளும்

சிறிய மற்றும் நடுத்தர அளவிலான துறைகளுக்குச் சேவைப் பொதியினை வழங்குவதற்கு இச்சபை பின்வரும் 10 பிரதான பிரிவுகளையும் நிறுவனங்களையும் கொண்டுள்ளது.

1. நிர்வாகப் பிரிவு (AD)
2. தொழில் முயற்சி அபிவிருத்தி மற்றும் ஆலோசனை சேவைகள் நிலையம் (CEDACS)
3. பொறியியல் பிரிவு(ED)
4. கைத்தொழிற் பேட்டைப் பிரிவு (IED)
5. சந்தைப்படுத்தற் பிரிவு (MD)
6. திட்டமிடற் பிரிவு (PD)
7. பிராந்திய அபிவிருத்திப் பிரிவு (RDD)
8. தொழில்நுட்ப சேவைகள் பிரிவு (TSD)
9. தோற் பொருள் உற்பத்தி மற்றும் பாதணி அபிவிருத்திப் பிரிவு (CDLPF)
10. இறப்பர் உற்பத்தி அபிவிருத்தி மற்றும் சேவைகள் பிரிவு (RPD&SC)

25 அலுவலகங்களைக் கொண்ட மாவட்ட அலுவலக வலையமைப்பு பிராந்திய அபிவிருத்திப் பிரிவின் கீழ் தொழிற்படுவதுடன் 19 தொழிற் பேட்டைகள் கைத்தொழிற் பேட்டைப் பிரிவின் கீழ் செயற்படுகின்றன. பொறியியல் பிரிவின் கீழ்ச் செயற்படுகின்ற 2 சேவை நிலையங்கள் உள்ளன. தொழில்நுட்ப சேவைப் பிரிவு, பொறியியல் பிரிவு, தோற் பொருள் அபிவிருத்தி நிலையம் மற்றும் இறப்பர் உற்பத்தி அபிவிருத்தி நிலையம் உள்நாட்டுக் கைத்தொழிலாளர்களுக்கு வசதிகளை வழங்கும் பொருட்டு தேவையான தொழில்நுட்பம் மற்றும் சம்பந்தப்பட்ட ஏனைய சேவைகளை வழங்குதல் இவற்றின் மூலமாக மேற்கொள்ளப்படுகின்றது.

கைத்தொழில் அபிவிருத்திச் சேவையின் அங்கீகரிக்கப்பட்ட பணியாளர்களின் எண்ணிக்கை 700 ஆக இருப்பதுடன் அது 11 பணியாளர் பிரிவு மட்டத்துடன் வகைப்படுத்தப்பட்டுள்ளது.

## 1.4 பிரதான வசதிகளும் சேவைகளும்



## 1.5 தாபனக் கட்டமைப்பு



# 2.0 செயலாற்றுகை மீளாய்வு

இலங்கையிலுள்ள சிறிய மற்றும் நடுத்தர அளவிலான கைத்தொழில்களை ஊக்குவித்தல், மேம்படுத்துதல் மற்றும் அபிவிருத்தி செய்தல் ஆகியவற்றிற்கு கைத்தொழில் அபிவிருத்தி சபை பரந்த அளவிலான சேவைகளையும் செயற்பாடுகளையும் மேற்கொண்டுள்ளது. மேலும், தொழில் முயற்சிக் கிராமங்கள், பெண்கள் தொழில் முயற்சியினை அபிவிருத்தி செய்தல், கைத்தொழில் கிராமங்களை அபிவிருத்தி செய்தல், மேற்கு மாகாணத்தில் உணவு சார்ந்த கைத்தொழில்களை அபிவிருத்தி செய்தல், வெட்டுமரம் சார்ந்த கைத்தொழில்களை அபிவிருத்தி செய்தல் போன்ற பிரதான செயற்பாடுகளுக்குச் சமாந்தரமாக அமைச்சினால் நடைமுறைப்படுத்தப்படுகின்ற ஏனைய துறைசார்ந்த அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டங்களையும் கருத்திட்டங்களையும் மேம்படுத்துவதற்கு ஏதுவான சேவைகளும் வழங்கப்பட்டுள்ளன.

## 2.1 சபையின் பல்வேறு துறைகளினால் வழங்கப்படுகின்ற சேவைகள்

கைத்தொழில் அபிவிருத்தி சபையின் ஒவ்வொரு பிரிவினாலும் நடைமுறைப்படுத்தப்பட்ட பிரதான நிகழ்ச்சித் திட்டங்களுக்கு மேலதிகமாக மூலப் பொருட்களை வழங்குதல், கைத்தொழில் சார்ந்த தகவல்களை வழங்குதல், இறப்பர் கலவையினைத் தயாரிக்கும் வசதியினை வழங்குதல் மற்றும் அதனுடன் தொடர்புடைய ஏனைய நிகழ்ச்சித் திட்டங்கள் ள்ளிட்டதாக இக்கால கட்டத்திற்குள் அப்பிரிவினால் நடைமுறைப்படுத்தப்பட்ட ஏனைய சேவைகள் பின்வருமாறு.




இவ்வாண்டில் கைத்தொழில் அபிவிருத்திச் சபையினால் நடாத்தப்பட்ட பயிற்சி நிகிழ்ச்சித் திட்டங்களில் 38 முகாமைத்துவப் பயிற்சி நிகழ்ச்சித் திட்டங்களும் 18 தொழில் முயற்சி அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டங்களும் உள்ளடங்கியிருந்ததுடன் இதன் மூலம் எதிர் காலத்தில் தொழில் முயற்சியாளர்களாக உருவெடுக்கக் கூடிய 900 பேர் நன்மையடைந்தனர். மேலும், தொழில் முயற்சியாளர்களின் வேண்டுகோளுக்கிணங்க 64 கருத்திட்ட சாத்தியவள அறிக்கைகளும் 83 இயந்திரோபகரண மதிப்பீட்டு அறிக்கைகளும் தயாரித்தளிக்கப்பட்டிருக்கின்றன. மேலும், கைத்தொழில்களை ஆரம்பிப்பதற்கு எதிர்பார்க்கின்ற தொழில் முயற்சியாளர்களின் வேண்டுகோளுக்கிணங்க சேவை வழங்கும்

விடயங்கள் 272உம் 117 வேலைகளுக்கான கோரிக்கைகளும் பூர்த்தி செய்யப்பட்டுள்ளன. இதற்கு மேலதிகமாகக் கைத்தொழிலாளர்களின் தேவைக்கேற்றவாறு 264 இயந்திரோபகரணங்களும் உபகரணங்களும் உற்பத்தி செய்யப்பட்டுச் சந்தைப்படுத்தப்பட்டது. கைத்தொழில் அபிவிருத்திச் சபையின் சந்தைப்படுத்தல் நிலையங்களூடாக 40 புதிய கைத்தொழிலாளர்களுக்கு சந்தைப்படுத்தலுக்கான உதவிகள் வழங்கப்பட்டதுடன் 34 கைத்தொழிலாளர்களுக்குக் கடன் வசதிகளைப் பெற்றுக்கொள்வதற்கான உதவிகளும் வழங்கப்பட்டன.

### 2.2 தொழில்நுட்பத்தை வழங்குதல், உற்பத்தி அபிவிருத்தி மற்றும் தொழில்நுட்பச் செய்முறை விளக்க நிகழ்ச்சித் திட்டங்கள்.

இவ்வாண்டிற்குள் 146 தொழில் நுட்பத்தை வழங்குதல், உற்பத்தி விருத்தி மற்றும் செய்முறை விளக்க நிகழ்ச்சித் திட்டங்கள் நடாத்தப்பட்டுள்ளதுடன், இதன் மூலமாக 2310 கைத்தொழிலாளர்கள் நன்மையடைந்தனர். இரண்டு வெளிநாட்டுத் தொழில்நுட்ப முறைகளைப் பெற்றுக்கொண்டு அவற்றைச் சிறிய மற்றும் நடுத்தர அளவிலான 8 கைத்தொழிலாளர்களுக்கு வழங்குவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன.

### 2.3 ஒவ்வொரு பிரிவினாலும் 2016ஆம் ஆண்டு செயற்றிட்டத்தினை நடைமுறைப்படுத்தியதன் முன்னேற்றம்.

| தொ. இல | செயற்பாடு | அளவைச் சுட்டி | பௌதிக முன்னேற்றம் | |
|---|---|---|---|---|
| | | | இலக்கு | அடைவு |
| *பிரதேச அபிவிருத்திப் பிரிவு* | | | | |
| 1 | வெளிநாட்டுக் கொள்வனவாளர்கள்/ இறக்குமதியாளர்கள்/ வழங்குனர்கள் ஆகியோரை இனங்காணுதல். | வெளிநாட்டுக் கொள்வனவாளர்கள்/ இறக்குமதியாளர்கள்/ வழங்குனர்கள் ஆகியோரின் எண்ணிக்கைகள். | 20 | 3 |
| 2 | இலங்கையின் எதிர்கால சிறிய மற்றும் நடுத்தர அளவிலான கைத்தொழில் உற்பத்தி ஏற்றுமதியாளர்கள் மற்றும் அவர்களின் உற்பத்திகளை இனங்காணுதல். | எதிர்கால சிறிய மற்றும் நடுத்தர அளவிலான கைத்தொழில் உற்பத்தி ஏற்றுமதியாளர்களின் எண்ணிக்கை. | 50 | 72 |
| 3 | எதிர்கால ஏற்றுமதியாளர்களுக்கான மாகாண, தேசிய மட்டத்திலான அமைப்புகளை உருவாக்குவதற்கான வசதிகளை வழங்குதல். | அமைப்புகளின் எண்ணிக்கை | 4 | 2 |
| 4 | வர்த்தகக் கண்காட்சிக் கூடங்கள் மற்றும் கண்காட்சிகள் ஊடாகச் சர்வதேச சந்தையில் பங்கேற்பதற்கு உதவி வழங்குதல். | பங்கேற்ற சிறிய, நடுத்தர அளவிலான கைத்தொழிலாளர்களின் எண்ணிக்கை. | 35 | 9 |

| தொ. இல | செயற்பாடு | அளவைச் சுட்டி | பௌதிக முன்னேற்றம் | |
|---|---|---|---|---|
| | | | இலக்கு | அடைவு |
| 5 | பிரதேச மட்டத்தில் சிறிய மற்றும் நடுத்தர அளவிலான கைத்தொழிலாளர்களுக்குப் புதிய தொழில்நுட்பத்தை வழங்குதல். | புதிய தொழில்நுட்பங்களின் எண்ணிக்கை | 25 | 24 |
| 6 | சிறிய மற்றும் நடுத்தர அளவிலான கைத்தொழிலாளர்களுக்குப் பொருத்தமான கடன் மற்றும் மானியங்களைப் பெற்றுக்கொள்வதற்கு வசதிகளை உருவாக்குதல். | சிறிய மற்றும் நடுத்தர அளவிலான கைத்தொழிலாளர்களின் எண்ணிக்கை | 30 | 8 |
| 7 | பயிற்சி நிகழ்ச்சித் திட்டங்களை நடாத்துதல். | பயிற்சி நிகழ்ச்சித் திட்டங்களின் எண்ணிக்கை. | | |
| | 2.1.4.1 தொழில்நுட்பம் | | 50 | 41 |
| | 2.1.4.2 முகாமைத்துவம் | | 25 | 16 |
| | 2.1.4.4 வேறு | | 10 | 18 |
| 8 | கருத்திட்ட சாத்தியவள அறிக்கைகள் | மதிப்பீட்டு அறிக்கைகளின் எண்ணிக்கை | 20 | 3 |
| 9 | கருத்திட்ட சாத்தியவள அறிக்கைகள் | சிறிய மற்றும் நடுத்தர அளவிலான கைத்தொழிலாளர்களின் எண்ணிக்கை | 125 | 19 |
| 10 | வளங்களின் உற்பத்தித் திறனை அதிகரிப்பதற்கு சிறிய மற்றும் நடுத்தர அளவிலான கைத்தொழில்களுக்கு உதவி வழங்குதல். (உற்பத்தித் திறன் முறைமைகள்/ கருவிகள் மற்றும் சுற்றாடல் நேயமிக்க தொழில்நுட்பத்தினை நடைமுறைப்படுத்துதல்.) | சிறிய மற்றும் நடுத்தர அளவிலான கைத்தொழிலாளர்களின் எண்ணிக்கை | 75 | 19 |
| 11 | தொகுதிகளைச் சான்றுப்படுத்துதல் மற்றும் உற்பத்தித் தரங்களைப் பெற்றுக் கொள்வதற்கு ஒத்தாசை வழங்குதல். | | | - |
| | GMP | சிறிய மற்றும் நடுத்தர அளவிலான கைத்தொழிலாளர்களின் எண்ணிக்கை | 25 | 7 |
| 12 | BHC (வர்த்தக சுகாதாரச் சான்றிதழ்) | சான்றளிக்கப்பட்டவைகளின் எண்ணிக்கை | 25 | 1 |
| 13 | 2.4 சிறிய, நடுத்தரக் கைத்தொழில் உற்பத்திகள் மற்றும் சேவைகளின் வர்த்தகக் குறியீட்டினை மேம்படுத்துவதற்கு உதவி வழங்குதல். (சுட்டுத் துண்டுகள், பொதியிடல், புலமைச் சொத்துக்கள் போன்ற) | சிறிய மற்றும் நடுத்தர அளவிலான கைத்தொழிலாளர்களின் எண்ணிக்கை | 150 | 23 |

| தொ.இல | செயற்பாடு | அளவைச் சுட்டி | பௌதிக முன்னேற்றம் | |
|---|---|---|---|---|
| | | | இலக்கு | அடைவு |
| 14 | கழிவுப் பொருட்களை வழங்குதல் (அலுமினியம், பித்தளை, செப்பு) | அளவு மெற்றிக் தொன்களில் | 600 | 393 |
| 15 | கஸ்பர் வழங்கதல் | போத்தல்களின் எண்ணிக்கை | 4,000 | 2,884 |
| 16 | எதிர்காலத் தொழில் முயற்சியாளர்களை இனங்காணுதல் | எதிர்காலத் தொழில் முயற்சியாளர்களின் எண்ணிக்கை | 125 | 92 |
| 17 | நிதி உதவிகளைப் பெற்றுக் கொள்வதற்கு ஒத்துழைப்பு வழங்குதல் | வழங்கப்பட்ட ஒத்துழைப்புக்களின் எண்ணிக்கை | 125 | 13 |
| *பொறியியல் பிரிவு* | | | | |
| 18 | தொழிற்கூடங்கள் மற்றும் இயந்திரோபகரணங்களுக்கான மதிப்பீட்டு அறிக்கைகளை வழங்குதல் | அறிக்கைகளின் எண்ணிக்கை | 60 | 80 |
| 19 | வழங்கப்பட்ட பட்டறை சேவைகள் எந்திரம், உற்பத்தி, வெப்ப பதனிடல் | வேலைகளின் எண்ணிக்கை | 60 | 117 |
| 20 | இயந்திரோபகரணங்கள், சாதனங்கள் ஆகியவற்றை உற்பத்தி செய்தல் மற்றும் வினியோகித்தல்/ விற்றல் | இயந்திரங்களின் எண்ணிக்கை | 40 | 242 |
| 21 | வார்ப்பு சேவைகளை வழங்குதல் (உலோகம் மற்றும் உலோகம் அல்லாத) | சிறிய மற்றும் நடுத்தர அளவிலான கைத்தொழிலாளர்களின் எண்ணிக்கை | 60 | 68 |
| 22 | பித்தளை, நிக்கல், குரோமியம் மற்றும் வன் குரோமியம் மென் முலாம் பூசும் சேவைகளை வழங்குதல் | சிறிய மற்றும் நடுத்தர அளவிலான கைத்தொழிலாளர்களின் எண்ணிக்கை | 40 | 204 |
| 23 | கைத்தொழில்களுக்குப் பொருத்தமான மூலப் பொருட்களை வழங்குதல் | சேவைகளின் எண்ணிக்கை | 6 | 100 |
| 24 | சிறிய மற்றும் நடுத்தர அளவிலான கைத்தொழில்களுக்குத் தேவையான மூலப் பொருட்கள், இரசாயனப் பொருட்கள் மற்றும் ஏனைய வசதிகளை வழங்குதல் | சிறிய மற்றும் நடுத்தர அளவிலான கைத்தொழிலாளர்களின் எண்ணிக்கை | 80 | 305 |
| 25 | ஆலோசனை/ மதியுரை சேவைகளை வழங்குதல் | சேவைகளின் எண்ணிக்கை | 40 | 6 |
| 26 | இயந்திரோபகரணங்கள் மற்றும் எனைய உற்பத்தித் திட்டமிடல் மற்றும் மேம்படுத்தல் விடயங்கள் | புதிதாக/ மீள் தயாரிக்கப்படுகின்ற உற்பத்திகளின் எண்ணிக்கை | 6 | 2 |

| தொ.இல | செயற்பாடு | அளவைச் சுட்டி | பௌதிக முன்னேற்றம் | |
|---|---|---|---|---|
| | | | இலக்கு | அடைவு |
| 27 | இரசாயனக் கூடப் பரிசோதனை அறிக்கைகளை வழங்குதல் | வழங்கப்பட்ட பரிசோதனை அறிக்கைகளின் எண்ணிக்கை | 12 | 7 |
| 28 | கைத்தொழிலாளர்கள் மற்றும் தொழில்வாண்மையாளர்களுக்கான பயிற்சிகளை வழங்குதல் | ஆட்களின் எண்ணிக்கை | 30 | 15 |
| 28 | தொழில்நுட்பத்தை வழங்குதல் (செயலமர்வு மற்றும் பயிற்சி நிகழ்ச்சித் திட்டங்கள்) | நிகழ்ச்சித் திட்டங்களின் எண்ணிக்கை | 3 | 4 |
| 29 | பட்டப் படிப்பினை மேற்கொள்பவர்களுக்கான பயிற்சி நிகழ்ச்சித் திட்டங்களை நடாத்துதல் (இயந்திரோபகரணப் பயிற்சி) | பயனாளிகளின் எண்ணிக்கை | 20 | 5 |
| *தொழில்நுட்ப சேவைப் பிரிவு* | | | | |
| 30 | செயல்முறைகளை மேம்படுத்துவதற்கான ஒத்துழைப்பினை வழங்குதல் | மேம்படுத்தப்பட்ட செயல்முறைகளில் ஈடுபடுகின்ற சிறிய மற்றும் நடுத்தர அளவிலான கைத்தொழிலாளர்களின் எண்ணிக்கை | 5 | 5 |
| 31 | தொழில் முயற்சியாளர்கள்/ கைத்தொழிலாளர்கள்/ அரச மற்றும் பாதியளவு அரச அமைப்புகள் மற்றும் பிரதேச மட்டத்திலுள்ள ஆட்கள் ஆகியோரின் தேவைகளுக்கேற்ப திட்டமிடப்பட்ட பயிற்சி நிகழ்ச்சித் திட்டங்களை நடாத்துதல் | நிகழ்ச்சித் திட்டங்களின் எண்ணிக்கை | 4 | 4 |
| | | பங்கேற்றவர்களின் எண்ணிக்கை | - | - |
| 32 | கைத்தொழில் சான்றிதழ் பயிற்சி நெறிகளுக்கான பயிற்சி நிகழ்சித் திட்டங்களை நடாத்துதல் | நிகழ்ச்சித் திட்டங்களின் எண்ணிக்கை | 2 | 4 |
| | | பங்கேற்றவர்களின் எண்ணிக்கை | - | 46 |
| 33 | பொருத்தமான வெளிநாட்டு மற்றும் உள்நாட்டுத் தொழில்நுட்பத்தை வழங்குதல் | சிறிய மற்றும் நடுத்தர அளவிலான கைத்தொழிலாளர்களின் எண்ணிக்கை | 2 | 8 |
| 34 | தொழில்நுட்பத்தை வழங்கும் நிகழ்ச்சித் திட்டங்களை நடாத்துதல் | நிகழ்ச்சித் திட்டங்களின் எண்ணிக்கை | 72 | 49 |
| 35 | உற்பத்தி அபிவிருத்தி பற்றிய ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி நடவடிக்கைகளை மேற்கொள்ளுதல் | விருத்தியாக்கப்பட்ட புதிய உற்பத்திகளின் எண்ணிக்கை | 4 | 3 |

| தொ.இல | செயற்பாடு | அளவைச் சுட்டி | பௌதிக முன்னேற்றம் | |
|---|---|---|---|---|
| | | | இலக்கு | அடைவு |
| 36 | பொருத்தமான உள்நாட்டு மற்றும் வெளிநாட்டுத் தொழில்நுட்பத்தைப் பெற்றுக் கொள்ளுதல் | பெற்றுக்கொள்ளப்பட்ட உள்நாட்டு/ வெளிநாட்டுத் தொழில்நுட்பத்தின் எண்ணிக்கை | 3 | 2 |
| ***தொழில் முயற்சி அபிவிருத்தி மற்றும் மதியுரை சேவைகள் நிலையம்*** | | | | |
| 37 | GMP, ISO, BHC (தொழில் முயற்சி சுகாதாரச் சான்றிதழ்) தேசிய விளைத்திறன் விருது போன்ற முறைமைகளின் ஊடாகச் சான்றிதழ்களைப் பெற்றுக் கொள்வதற்கு ஒத்துழைப்பு வழங்குதல் | சிறிய மற்றும் நடுத்தர அளவிலான கைத்தொழிலாளர்களின் எண்ணிக்கை | 5 | 3 |
| 38 | விளைத்திறனை மேம்படுத்துவதற்கான நிகழ்ச்சித் திட்டங்களை நடைமுறைப்படுத்துதல் | நிகழ்ச்சித் திட்டங்களின் எண்ணிக்கை | 3 | 4 |
| 39 | சிறிய மற்றும் நடுத்தர அளவிலான கைத்தொழில் பிரிவுக்குத் தேவையான திறன்களை இனங்காணுதல் | பிரிவுகள்/ விடயங்கள்/ துறைகள் எண்ணிக்கை | 10 | 4 |
| 40 | பாட நெறியினை விருத்தி செய்தல் மற்றும் தயாரித்து நிறைவு செய்தல் | பாட நெறிகளின் எண்ணிக்கை | 10 | 7 |
| 41 | எதிர்காலத் தொழில் முயற்சியாளர்களை இனங்காணுதல் | எதிர்காலத் தொழில் முயற்சியாளர்களின் எண்ணிக்கை | 180 | 440 |
| 42 | புதிய கருத்திட்ட முன்மொழிவுகளைத் தயாரித்தல் | கருத்திட்ட முன்மொழிவுகளின் எண்ணிக்கை | 1 | 1 |
| 43 | தகவல்களைப் பரப்புதல் | ஆவணங்களின் எண்ணிக்கை | 600 | 302 |
| 44 | பத்திரிகைகள், சஞ்சிகைகள் போன்றவற்றை வெளியிடுதல் | பத்திரிகைகள், சஞ்சிகைகளின் எண்ணிக்கை | 4 | 4 |
| 45 | தொழில் முயற்சி அபிவிருத்தி, சந்தைப்படுத்தல் மற்றும் நிதி முகாமைத்துவப் பயிற்சி நிகழ்ச்சித் திட்டங்களை நடாத்துதல் | நிகழ்ச்சித் திட்டங்களின் எண்ணிக்கை | 9 | 18 |
| 46 | விளைத்திறன், கையேடுகள், வழிகாட்டல்கள், கைநூல்கள், செயல்முறைக் கைநூல்கள் போன்றவற்றைத் தயாரித்தல் | கைநூல் அறிக்கைகள்/ எண்ணிக்கை | 9 | 12 |

| தொ. இல | செயற்பாடு | அளவைச் சுட்டி | பௌதிக முன்னேற்றம் | |
|---|---|---|---|---|
| | | | இலக்கு | அடைவு |
| 47 | நூலக வளங்களைச் செயல்முறைக்கு உட்படுத்துதல் | வகைப்படுத்துவதற்கும் பெயர்ப் பட்டியல் வரிசை தயாரிப்பதற்கும் உள்ள வெளியீடுகளின் எண்ணிக்கை | 600 | 847 |
| | | தயாரிக்கப்பட்ட வெளியீடுகளின் எண்ணிக்கை (கைத்தொழில் அபிவிருத்தி சபைக் கையேடுகள், கைநூல்கள் போன்ற) | 24 | 252 |
| 48 | சேவை பெறுனர்களிடமிருந்து கிடைத்த வினவுதல்களுக்கு ஏதுவான விடயங்களை ஈடேற்றுதல் | வினவுதல்களின் எண்ணிக்கை | 600 | 1322 |
| ***கைத்தொழிற் பேட்டைப் பிரிவு*** | | | | |
| 49 | தற்போதுள்ள கைத்தொழிற் பேட்டைகளை நவீனமயப்படுத்துதல் மற்றும் கட்டியெழுப்புதல் | கைத்தொழிற் பேட்டைகளின் எண்ணிக்கை | 4 | 4 |
| 50 | தற்போதுள்ள கைத்தொழிற் பேட்டைகளைக் கட்டியெழுப்பும் பொருட்டு எதிர்வரும் ஆண்டிற்குத் தேவையான ஒதுக்கீடுகளைப் பெற்றுக் கொள்வதற்குக் கருத்திட்ட முன்மொழிவுகளைத் தயாரித்தல் | முன்மொழிவுகளின் எண்ணிக்கை | 1 | 1 |
| 51 | கைத்தொழிற் பேட்டைகளுக்கான கைத்தொழிலாளர்களைத் தொிவு செய்தல் | கைத்தொழிலாளர்களின் எண்ணிக்கை | 30 | 29 |
| 52 | தொிவு செய்யப்பட்ட கைத்தொழிலாளர்களுக்கு அபிவிருத்தி செய்யப்பட்ட காணித் துண்டுகளையும் கட்டிடங்களையும் ஒதுக்கிக் கொடுத்தல் | காணித் துண்டுகளின் எண்ணிக்கை | 20 | 24 |
| 53 | புதிய கைத்தொழில்களை உருவாக்குவதற்கு ஒத்துழைப்பு வழங்குதல் | கைத்தொழில்களின் எண்ணிக்கை | 19 | 15 |
| | | தொழில் வாய்ப்புகளின் எண்ணிக்கை | 200 | 344 |
| 54 | குத்தகை ஒப்பந்தங்களைக் கைச்சாத்திடுதல் | ஒப்பந்தங்களின் எண்ணிக்கை | 20 | 19 |
| 55 | புதிய நில அளவை வரைபடங்களைத் தயாரித்தல் | வரைபடங்களின் எண்ணிக்கை | 1 | 1 |

| தொ. இல | செயற்பாடு | அளவைச் சுட்டி | பௌதிக முன்னேற்றம் | |
|---|---|---|---|---|
| | | | இலக்கு | அடைவு |
| 56 | ஒவ்வொரு கைத்தொழிற் பேட்டைகளுக்குமான பெயர்ப் பட்டியலை (கைத்தொழிற் தோற்றப்பாடு) தயாரித்து அதனைக் கைத்தொழில் அபிவிருத்தி சபையின் இணையத் தளத்தில் வெளியிடுதல் | தோற்றப்பாடுகளின் எண்ணிக்கை | 1 | 1 |
| 57 | மூடப்பட்டுள்ள கைத்தொழிற்சாலைக் கட்டிடங்களைக் கைத்தொழில் அபிவிருத்தி சபைக்குச் சுவீகரித்துக் கொள்ளுதல் | கட்டிடங்களின் எண்ணிக்கை | 8 | 5 |
| 58 | அவ்வாறு சுவீகரித்துக் கொள்ளப்பட்ட கைத்தொழிற்சாலைகளைப் புதிய கைத்தொழிலாளர்களுக்கு வழங்குதல் | சுவீகரித்துக் கொள்ளப்பட்ட காணித் துண்டுகளின் எண்ணிக்கை | 8 | 2 |
| ***இறப்பர் அபிவிருத்திப் பிரிவு*** | | | | |
| 59 | துணை ஒப்பந்தச் சந்தர்ப்பங்களை வழங்குவதற்கான வசதிகளை வழங்குதல் | வேலைக் கோரிக்கைகளின் எண்ணிக்கை | 8 | 12 |
| 60 | இறப்பர் உற்பத்தி அபிவிருத்திக்காக ஒத்துழைப்பு வழங்குதல் | வேலைகளின் எண்ணிக்கை | 23 | 15 |
| | | கைத்தொழில்களின் எண்ணிக்கை | 11 | 5 |
| 61 | உற்பத்தித் தரப் பரிசோதனை மற்றும் சான்றளித்தல் | வினியோகிக்கப்பட்ட சான்றிதழ்களின் எண்ணிக்கை | 69 | 104 |
| | | உற்பத்தி மாதிரிகளின் எண்ணிக்கை | 2,459 | 1,053 |
| 62 | சிறிய மற்றும் நடுத்தர அளவிலான கைத்தொழில்களுக்காக இறப்பர் உற்பத்திகளை விருத்தி செய்தல் | கைத்தொழில்களின் எண்ணிக்கை | 20 | 12 |
| 63 | தொழில்நுட்பத்தை வழங்கும் நிகழ்ச்சித் திட்டங்களை நடாத்துதல் | நிகழ்ச்சித் திட்டங்களின் எண்ணிக்கை | 27 | 23 |
| 64 | தொழில்நுட்ப ஆலோசனைச் சேவைகளை வழங்குவதற்கான வசதிகளை வழங்குதல் | கைத்தொழில்களின் எண்ணிக்கை | 82 | 46 |
| 65 | மையநீக்கப்பட்ட இறப்பர் பால் வழங்குதல் | அளவு லீற்றர்களில் | 12,330 | 10,938 |
| | | கைத்தொழில்களின் எண்ணிக்கை | 694 | 531 |
| 66 | இறப்பர் கலவை மற்றும் ஏனைய இரசாயனப் பொருட்களை வழங்குதல் | அளவு கிலோ கிராம்களில் | 54,791 | 29,486 |
| | | கைத்தொழில்களின் எண்ணிக்கை | 1,232 | 230 |

| தொ. இல | செயற்பாடு | அளவைச் சுட்டி | பௌதிக முன்னேற்றம் | |
|---|---|---|---|---|
| | | | இலக்கு | அடைவு |
| 67 | அரைக்கப்பட்ட இறப்பர் கலவைகளை வழங்குதல் | அளவு கிலோ கிராம்களில் | 32,958 | 15,535 |
| | | கைத்தொழில்களின் எண்ணிக்கை | 55 | 31 |
| 68 | இறப்பர் உற்பத்திகளை உள்நாட்டில் உற்பத்தி செய்தல் | வேலைகளின் எண்ணிக்கை | 3 | 8 |
| ***தோற் பொருட்களின் உற்பத்தி மற்றும் பாதணி விருத்தி நிலையங்கள்*** | | | | |
| 69 | தரத்தை மேம்படுத்துவதற்கான மேம்படுத்தல் நிகழ்ச்சித் திட்டங்களை நடாத்துதல் | நிகழ்ச்சித் திட்டங்களின் எண்ணிக்கை | 3 | 5 |
| | | பயனாளிகளின் எண்ணிக்கை | 45 | 62 |
| 70 | விதாரந்தெனிய, இமியங்கொட மற்றும் தலைமை அலுவலகத்தில் உற்பத்தி செய்யப்படுகின்ற பாதணிகள் மற்றும் தோற்பொருள் உற்பத்திகளுக்குப் பதனிடல் வசதிகளை வழங்குதல் | கைத்தொழிலாளர்களின் எண்ணிக்கை | 180 | 153 |
| 71 | வாழ்வாதாரத்தை நிலைபேறானதாக்குவதற்காக செயற்பாடுகளை ஒழுங்கு செய்து நடைமுறைப்படுத்துதல் | செயற்பாடுகளின் எண்ணிக்கை | 3 | 3 |
| | | பயனாளிகளின் எண்ணிக்கை | 60 | 60 |
| 72 | வருடாந்தப் பாதணி மற்றும் தோற்பொருள் சந்தைக் கண்காட்சிகளை ஒழுங்கு செய்தல் மற்றும் நடாத்துதல் | செயற்பாடுகளின் எண்ணிக்கை | 1 | 1 |
| 73 | சேவை பெறுனர்களின் தேவைகளுக்கேற்ப ஒழுங்கு செய்யப்பட்ட பயிற்சி நிகழ்ச்சித் திட்டங்களை நடாத்துதல் | நிகழ்ச்சித் திட்டங்களின் எண்ணிக்கை | 3 | 2 |
| | | பயனாளிகளின் எண்ணிக்கை | 45 | 32 |
| 74 | தொழில்நுட்பத்தை வழங்கும் நிகழ்ச்சித் திட்டங்களை வழங்குதல் (பாதணிகள், தோற்பொருட்கள்) கட்டுபத்த | நிகழ்ச்சித் திட்டங்களின் எண்ணிக்கை | 9 | 10 |
| | | பயனாளிகளின் எண்ணிக்கை | 90 | 85 |
| 75 | தொழில்நுட்பத்தை வழங்கும் நிகழ்ச்சித் திட்டங்களை நடாத்துதல் (பாதணிகள், தோற்பொருட்கள்) பிராந்திய | நிகழ்ச்சித் திட்டங்களின் எண்ணிக்கை | 6 | 15 |
| | | பயனாளிகளின் எண்ணிக்கை | 90 | 311 |
| 76 | பாதணி உற்பத்திக்கான இயந்திரோபகரணங்களைப் பராமரிக்கும் பயிற்சி நிகழ்ச்சித் திட்டங்களை நடாத்துதல் | நிகழ்ச்சித் திட்டங்களின் எண்ணிக்கை | 2 | 4 |
| | | பயனாளிகளின் எண்ணிக்கை | 20 | 27 |

| தொ. இல | செயற்பாடு | அளவைச் சுட்டி | பௌதிக முன்னேற்றம் | |
|---|---|---|---|---|
| | | | இலக்கு | அடைவு |
| **77** | புதிய மற்றும் தற்போதுள்ள கைத்தொழிலாளர்களுக்கு விழிப்புணர்வூட்டும் நிகழ்ச்சித் திட்டங்களை நடாத்துதல் | நிகழ்ச்சித் திட்டங்களின் எண்ணிக்கை | 8 | 7 |
| | | பயனாளிகளின் எண்ணிக்கை | 100 | 72 |
| ***சந்தைப்படுத்தற் பிரிவு*** | | | | |
| 78 | கொள்வனவாளர், விற்பனையாளர் சந்திப்புக்களை நடாத்துவதற்குத் தேவையான வசதிகளை வழங்குதல் (ஏற்றுமதி அரங்கம்) | சந்திப்புக்களின் எண்ணிக்கை | 3 | 2 |
| | | கைத்தொழிலாளர்களின் எண்ணிக்கை | 150 | 35 |
| 79 | சிறிய மற்றும் நடுத்தர அளவிலான கைத்தொழிலாளர்களின் உற்பத்தி மற்றும் சேவைகளைக் காட்சிப்படுத்துவதற்குத் தேவையான வசதிகளை இனங்கண்டு கைத்தொழிலாளர்களுக்கு அவ்வசதிகளை வழங்குதல் | புதிய கைத்தொழிலாளர்களின் எண்ணிக்கை | 50 | 21 |
| | | விற்பனைகளின் பெறுமதி (ரூ.மில்.) | 11 | 10.70 |
| 80 | கைத்தொழிலாளர்களுக்குத் தேவையான துணை ஒப்பந்த வசதிகளை இனங்கண்டு அவ்வசதிகளை வழங்குதல் | கோரிக்கைகளின் பெறுமதி (ரூ.மில்.) | 15 | 7.86 |
| | | கோரிக்கைகளின் எண்ணிக்கை | 30 | 30 |
| 81 | கழிவுப் பொருட்களை வினியோகித்தல் | அளவு (மெ.தொ) | 900 | 758 |
| | | அளவு (மெ.தொ) | 900 | 706 |
| | | கைத்தொழிலாளர்களின் எண்ணிக்கை | 250 | 723 |
| | | உலோகக் கழிவு விற்பனை (ரூ.மில்.) | 100 | 43.16 |

# 3.0 2016 ஆம் ஆண்டு நடைமுறைப்படுத்தப்பட்ட விசேட செயற்பாடுகள்

## 3.1 உணவு பதப்படுத்தல் கைத்தொழில் அபிவிருத்தி – மேற்கு மாகாணம்

கைத்தொழில் அபிவிருத்திச் சபையின் தொழில்நுட்ப சேவைப் பிரிவ கைத்தொழில் மற்றும் வாணிப அலுவல்கள் அமைச்சுடன் இணைந்து முன்னோடிக் கருத்திட்டமாக உணவுப் பதனிடல் கைத்தொழில் அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டத்தினை மேற்கு மாகாணத்தில் நடைமுறைப்படுத்தியது. உள்நாட்டு உணவுக் கைத்தொழில்களின் விளைத்திறனை மேம்படுத்துதல் இக்கருத்திட்டத்தின் குறிக்கோளாக அமைந்தது. தெரிவு செய்யப்பட்ட கைத்தொழிலாளர்களுக்கு ஐந்து இலட்சம் ரூபாய் ஆகக் கூடிய தொகை எனும் வரையறையின் கீழ் தேவையான இயந்திரோபகரணங்களையும் சாதனங்களையும் கொள்வனவு செய்வதற்குத் தேவையான அபிவிருத்திக் கிரயத்தில் ஐம்பது வீதமான பங்களிப்பு வழங்கப்பட்டது.

இதற்குத் தெரிவு செய்யப்பட்ட கம்பனிகள் மற்றும் கைத்தொழில் அபிவிருத்திச் சபை ஆகியவற்றுக்கிடையில் ஒப்பந்தத்தைக் கைச்சாத்திடும் விசேட நிகழ்வு 2016 ஜூலை 26ஆம் திகதி கைத்தொழில் மற்றும் வாணிப அலுவல்கள் அமைச்சில் நடாத்தப்பட்டது. குறிப்பிட்ட கால வரம்பிற்குள் கருத்திட்டத்தைப் பூர்த்தி செய்யக்கூடிய ஆற்றல் கிட்டிய தெரிவு செய்யப்பட்ட 5 கைத்தொழிலாளர்களுக்கு 2.4 மில்லியன் ரூபாய் பெறுமதியான நிதிப் பொதியொன்று வழங்கப்பட்டது.





**படம் - 3.1.1 கைத்தொழிலாளர்களுடன் புரிந்துணர்வு ஒப்பந்தத்தைக் கைச்சாத்திடுதல்**

இயந்திரோபகரணங்கள் பொருத்தப்பட்ட பின்வரும் கம்பனிகள் வர்த்தக ரீதியிலான உற்பத்திகளை ஆரம்பித்தன.

| இல. | கம்பனி | உற்பத்திகள் | இயந்திரங்கள் | பயன் |
|---|---|---|---|---|
| 1 | கிரீன் வேய் ஏசியா தனியார் கம்பனி | மரமுந்திரிகை உற்பத்தி | மரமுந்திரிகைத் தோலை அகற்றும் கருவி | உற்பத்தியினை அதிகரித்து ஏற்றுமதிச் சந்தைக்கு அனுப்புதல். |
| 2 | ஹடிகல்ல ரீ பக்டரி தனியார் கம்பனி | தேயிலை | நான்கு சில்லுகளைக் கொண்ட உயரமான வெளியின் வழியாக அங்கும் இங்கும் கொண்டு செல்லப்படக் கூடிய இயந்திரம் (மொனோரெயில்) | கைகளினால் செயற்படுத்தும் போது தேவையான ஊழியம் அத்துடன் அதன்போது ஏற்படுகின்றதான நட்டம் போன்றவற்றைக் குறைத்து இறுதி உற்பத்தியின் தரத்தினை அதிகரிப்பதற்கும் உணவுப் பாதுகாப்பினை மேம்படுத்துவதற்குமானது. |
| 3 | போர்கொன்ஸ் கனரீஸ், பேருவளை. | மீன்/ இறைச்சி சார்ந்த உற்பத்திகள் | அதிக வெப்ப எண்ணெயில் உணவினைப் பொரிக்கும் இரண்டு இயந்திரங்கள், இறைச்சியைத் துண்டு துண்டாக வெட்டும் இரண்டு கருவிகள் மற்றும் மரக்கறிகளை வெட்டும் கருவி. | உற்பத்தி மற்றும் ஏற்றுமதிச் சந்தையில் தமது பங்கினை அதிகரித்துக் கொள்வதற்கும் உற்பத்திகளின் தரத்தினை மேம்படுத்துவதற்கும் (உதாரணம்: வெட்டப்படுகின்ற வெங்காயத் துண்டுகள் ஒன்றுக்கொன்று சமமான அளவில் இருத்தல் ) ஊழிய வினைத்திறனை மேம்படுத்துதல், கைத்தொழிற் சாலைகளின் சுகாதார நிலைகளை மேம்படுத்துதல் |
| 4 | கழனி வெலி கனரீஸ், கங்வெல்ல. | பழம் சார்ந்த உற்பத்தி | தன்னியக்கப் பழப்பாகுக் கலன்களை நிரப்புகின்ற, முத்திரையிடுகின்ற இயந்திரம் | உற்பத்திச் செயல்முறையின் வினைத்திறனை மேம்படுத்துதல் ( ஒரு மணித்தியாலத்திற்குள் 1000 கலன்களை அடைக்கும் திறன் ) சுகாதாரத் தன்மையினை மேம்படுத்துதல், உற்பத்தியின் பாதுகாப்பான தன்மையினை மேம்படுத்துதல் மற்றும் உற்பத்தியின் வெளிவாரியான கவர்ச்சியினை மேம்படுத்துதல். |

### 3.2 பால் சாந்த உற்பத்திகளின் தரத்தை மேம்படுத்துவதற்கான செயலமர்வு

பாலாடைக் கட்டி உற்பத்தி தொடர்பான விசேட செயலமர்வு ஒன்று 2016.02.29 ஆம் திகதி கொழும்பு கிங்ஸ்பரி ஹோட்டலில் நடாத்தப்பட்டதுடன் அந்நிகழ்ச்சித் திட்டத்திற்கு வளவாளராக நெதர்லாந்தைச் சேர்ந்த தொம் ரிஜென் எனும் நிபுணரின் உதவி பெற்றுக் கொள்ளப்பட்டது.





படம் 3.2.1 - பாலாடைக் கட்டி உற்பத்தி செய்யும் தொழில்நுட்பத்தை வழங்கும் செயலமர்வு

## 3.3 தொழில்நுட்பத்தைப் பெற்றுத்தரும் செயலமர்வு

கைத்தொழில் அபிவிருத்திச் சபை நெதர்லாந்தின் PUM கம்பனியின் ஒத்துழைப்புடன் நுகரக்கூடிய எண்ணெய் சார்ந்த உற்பத்தி பற்றிய தொழில்நுட்பத்தை வழங்கும் ஒரு நாள் செயலமர்வு ஒன்றை 2016 மார்ச் 09ஆம் திகதி கொழும்பு கிங்ஸ்பரி ஹோட்டலில் நடாத்தியது.

நுகரக் கூடிய எண்ணெய் சார்ந்த உள்நாட்டுக் கைத்தொழிற் துறையின் நிதி மற்றும் தொழில்நுட்பப் பகுப்பாய்வு பற்றி கவனத்தைச் செலுத்தி நுகரக் கூடிய எண்ணெய்க் கைத்தொழிலில் ஈடுபட்டுள்ள தொிவு செய்யப்பட்ட 51 கைத்தொழிலாளர்களுக்கு நெதர்லாந்தைச் சேர்ந்த திரு. ஜான் றிற்செமா எனும் நிபுணரினால் இச்செயலமர்வு நடாத்தப்பட்டது.

### 3.4 கண்காட்சி

## பாதணிகள் மற்றும் தோற் பொருட்கள் வர்த்தகக் கண்காட்சி - 2016

- இணை ஒழுங்கமைப்பாளராக கைத்தொழில் அபிவிருத்திச் சபையின் தோற் பொருள் பிரிவு 2016 பெப்ரவரி மாதம் 05ஆம் திகதி முதல் 07ஆம் திகதி வரை கொழும்பு சிறீமாவோ பண்டார நாயக்க ஞாபகார்த்தக் கண்காட்சி நிலையத்தில் எட்டாவது பாதணி மற்றும் தோற் பொருள் வர்த்தகக் கண்காட்சியை நடாத்தியதுடன் கைத்தொழில் அபிவிருத்திச் சபை அந்நிகழ்ச்சியின் இணை ஒழுங்கமைப்பாளராகச் செயலாற்றியது. இந்நிகழ்ச்சித் திட்டத்தின் பிரதான குறிக்கோள் இக்கைத்தொழிற் துறையின் நன்மதிப்பினைக் கட்டியெழுப்புவதாகும்.
- 225 வர்த்தகக் கூடங்களைக் கொண்ட இவ்வர்த்தகக் கண்காட்சியில் பாதணி சார்ந்த உற்பத்திகள், பயணிகளுக்கான பொருட்கள், மூலப் பொருட்கள், இயந்திரோபகரணங்கள் மற்றும் ஏனைய துணைப் பொருட்கள் காட்சிப்படுத்தப்பட்டன. மேலும், ஆசிய வலயத்தைப் பிரதிநிதித்துவப்படுத்தும் வகையில் ஆசிய வலயத்தில் உள்ள மூலப் பொருட்கள், துணைப் பொருட்கள் மற்றும் ஏனைய உபகரணங்களின் வழங்குனர்களும் இக்கண்காட்சியில் கலந்து கொண்டனர்.

- இக்கண்காட்சியில் விசேட ஒரு சந்தர்ப்பமாக வடிவமைப்புக் கலைக் கண்காட்சி ஒன்றும் படைப்பாற்றல் போட்டி ஒன்றும் சிறந்த வர்த்தகக் கூடத்தைத் தொிவு செய்வதற்கான போட்டி ஒன்றும் நடாத்தப்பட்டது.






படம் 3.4.1 - **பாதணி மற்றும் தோற் பொருள் வர்த்தகக் கண்காட்சி - 2016**

## 3.5 ஏற்றுமதி மேம்படுத்தல் மாநாடு

ஏற்றுமதி அபிவிருத்திச் சபையின் ஒத்துழைப்புடன் கைத்தொழில் அபிவிருத்திச் சபையின் பிராந்திய அபிவிருத்திப் பிரிவு உள்நாட்டக் கைத்தொழிலாளர்களுக்கான உலகளாவிய வர்த்தகச் சந்தை உள்ளார்ந்த திறன்களை அறிமுகப்படுத்தும் நோக்கில் 2016 நவம்பர் 24ஆம் திகதி கொழும்பு - 01இல் அமைந்துள்ள மிலோடா நிதியியல் கற்கைக் கல்வியியல் கல்லூரியில் ஏற்றுமதி உற்பத்தி மாநாட்டினை நடாத்தியது. பிராந்திய மட்டத்தில் ஏற்றுமதிக்கான பொருட்களைத் தயாரிக்கும் 34 உற்பத்தியாளர்கள் இந்நிகழ்ச்சித் திட்டத்தில் கலந்துகொண்டனர். ஏற்றுமதி அபிவிருத்திச் சபை இந்நிகழ்ச்சித் திட்டத்தினை நடாத்துவதற்கு முக்கியமான 4 பணிகளை ஈடேற்றியதுடன் தேசிய ஏற்றமதியாளர்களின் சபை, கைத்தொழில் தொழில்நுட்ப நிறுவனம், தென்னை அபிவிருத்தி அதிகார சபை, இலங்கை தர நிறுவகம், தேசியப் பொதியிடல் நிலையம், இலங்கை வங்கி மற்றும் இலங்கையின் சில ஏற்றுமதிசார் பிரசித்தி பெற்ற கம்பனிகள் ஆகியவை இந்நிகழ்ச்சித் திட்டத்தில் கலந்துகொண்டன.



## 3.6 சந்தையினைப் பெற்றுக் கொள்வதற்கான எதிர்கால வழிமுறைகள் – சிறிய, நடுத்தர அளவுக் கைத்தொழில்களுக்கான சந்தைப்படுத்தல் நிகழ்ச்சித் திட்டம்

சந்தைப்படுத்தலை மேம்படுத்துவதை நோக்காகக் கொண்டு வவுனியா, கிளிநொச்சி, மன்னார், முல்லைத்தீவு ஆகிய மாவட்டங்களைத் தவிர்ந்த ஏனைய 22 மாவட்டங்களிலும் “சந்தையை வெற்றி கொள்வதற்கான எதிர்கால நடவடிக்கை” எனும் தலைப்பில் பல சந்தைப்படுத்தல் நிகழ்ச்சித் திட்டங்கள் நடாத்தப்பட்டன. 750 எதிர்காலத் தொழில் முயற்சியாளர்கள் இந்நிகழ்ச்சித் திட்டங்களில் பங்கேற்றனர்.

இந்நிகழ்ச்சியில் பங்கேற்றவர்களுக்குப் பின்வரும் விடயங்கள் சம்பந்தமாக விழிப்புணர்வினை வழங்குதல் இந்நிகழ்ச்சித் திட்டத்தின் நோக்கமாக அமைந்தது.

- “வர்த்தகப் பெயர் குறித்தல்” மற்றும் “நுகர்வோர் திருப்தி” ஆகியவற்றின் முக்கித்துவம்
- சமமான உற்பத்திகளுடன் போட்டியிடுவதற்கு உற்பத்திகளை அபிவிருத்தி செய்வதன் முக்கியத்துவம்
- கிரயத்தைக் குறைத்துக் கொள்வதற்குத் தொழில்நுட்பத்தைப் பயன்படுத்துவது எப்படி மற்றும்
- நிதிசார் பிரச்சினைகளைத் தீர்த்துக் கொள்ளும் முறைமை

**இலங்கை வங்கியுடன் புரிந்துணர்வு ஒப்பந்தமொன்றைக் கைச்சாத்திடுதல்**

ஏற்றுமதி, இறக்குமதிப் பதிலீடு, உள்நாட்டுப் பெறுமதி சேர்த்தல் மற்றும் தொழில் வாய்ப்பினை உருவாக்குதல் போன்றவற்றுக்குக் காணப்படும் உள்ளார்ந்த ஆற்றல்களை மேம்படுத்தும் வகையில் கைத்தொழிற் பிரிவின் உயர்ந்தளவிலான வளர்ச்சி வேகத்தினை அடைந்துகொள்ளும் பொருட்டு மேற்கொள்ளக் கூடிய முயற்சிகளை ஒன்றிணைப்பதை நோக்காகக் கொண்டு கைத்தொழில் அபிவிருத்திச் சபை 2016.12.01ஆம் திகதி இலங்கை வங்கியுடன் புரிந்துணர்வு ஒப்பந்தமொன்றைக் கைச்சாத்திட்டது.

இப்புரிந்துணர்வு ஒப்பந்தத்தினூடாக வெற்றிகரமான தொழில் முயற்சிகளில் முதலீடு செய்து, ஏற்கெனவே உள்ள கைத்தொழில்களை விருத்தி செய்து விரிவாக்குவதற்கு எதிர்காலத் தொழில் முயற்சியாளர்களுக்கு வலுவூட்டி, அவர்களுக்குத் தேவையான வசதிகள் வழங்கப்படும்.

# 4.0 செயலாற்றுகை வெற்றிகள்

4.1 நிருவாகப் பிரிவு (AD)

4.2 பிராந்திய அபிவிருத்திப் பிரிவு (RDD)

4.3 திட்டமிடல் பிரிவு (PD)

4.4 சந்தைப்படுத்தல் பிரிவு (MD)

4.5 கைத்தொழிற் பேட்டைப் பிரிவு (IED)

4.6 இறப்பர் உற்பத்தி அபிவிருத்தி மற்றும் சேவை நிலையம் (RPD&SC)

4.7 பொறியியல் பிரிவு (ED)

4.8 தொழில் முயற்சி அபிவிருத்தி மற்றும் மதியுரை சேவைகள் நிலையம் (CEDACS)

4.9 தொழில்நுட்ப சேவைப் பிரிவு (TSD)

4.10 தோற் பொருள் உற்பத்தி மற்றும் பாதணி விருத்தி நிலையம் (CDLPF)

## 4.1 நிர்வாகப் பிரிவு (AD)

கைத்தொழில் அபிவிருத்திச் சபையின் அனைத்து மனிதவள முகாமைத்துவமும் மனிதவள அபிவிருத்திச் செயற்பாடுகளும் பெறுகைகள் செயற்பாடுகளும் பாதுகாப்பு மற்றும் போக்குவரத்துப் பணிகளை ஏற்பாடு செய்தல், நடைமுறைப்படுத்துதல், மேற்பார்வை செய்தல் மற்றும் மதிப்பீடு செய்தல் சபையின் நிர்வாகப் பிரிவின் பொறுப்பாகும்.

**இப்பிரிவிற்குச் சாட்டப்பட்டுள்ள பணிகள்:**

- முகாமைத்துவச் சுற்று நிருப இலக்கம் 30இற்கு அமைவாகத் தாபன மற்றும் மீள்கட்டமைப்பு நிகழ்ச்சித் திட்டங்களை நடைமுறைப்படுத்துதல்
- சம்பள முரண்பாடுகளைத் தீர்த்தல்
- கைத்தொழில் அபிவிருத்திச் சபையின் ஆளணியை வலுவூட்டும் பொருட்டு 30ஆம் இலக்க முகாமைத்துவச் சுற்று நிருபத்திற்கு ஏற்ப பணியாளர்களை ஆட்சேர்ப்புச் செய்யும் நடைமுறை மற்றும் பதவியுயர்வுக்கான நடைமுறையினைத் தயாரித்தல்
- பொது ஆட்சேர்ப்பு, பதவியுயர்வு, செயலாற்றுகை மதிப்பீடுகள், இடமாற்றம், ஓய்வு பெறுதல் போன்றவை தொடர்பான பணிகளை ஈடேற்றுதல்
- ஒழுக்காற்று விசாரணைகளை நடாத்துதல்
- எதிர்பார்க்கப்பட்ட மட்டத்திற்குப் பொருத்தமான வகையில் கைத்தொழில் அபிவிருத்திச் சபையின் பணியாளர்களின் அறிவினை மேம்படுத்துவதற்காக வெளிநாட்டுப் புலமைப் பரிசில்/ பயிற்சி நிகழ்ச்சித் திட்டங்களை ஒருங்கிணைத்தல்
- உள்நாட்டுப் பயிற்சி நிகழ்ச்சித் திட்டங்களை ஏற்பாடு செய்தல் மற்றும் வழங்குதல்
- பணியாளர்களின் நலனோம்புகை மற்றும் பணியாளர்களுக்கான நட்ட ஈட்டுத் திட்டங்களை முகாமைத்துவம் செய்தல்
- மனக்குறைகள் சம்பந்தமாக நடவடிக்கைகளை மேற்கொள்ளல்
- உள்வாரியான பாதுகாப்புச் சேவை மற்றும் பாதுகாப்புப் பணிகளை முகாமைத்துவம் செய்தல்
- சபையின் பெறுகைகள் பணிகளை முகாமைத்துவம் செய்தல்
- சபையின் போக்குவரத்துச் சேவையினை முகாமைத்துவம் செய்தல்
- சட்ட நடவடிக்கைகளும் அதனுடன் சம்பந்தப்பட்ட பிரச்சினைகள் தொடர்பாகவும் இடையீடு செய்தல்

| பிரிவு | பணியாளர்களின் எண்ணிக்கை | | மொத்தம் மற்றும் % |
|---|---|---|---|
| | ஆண்கள் | பெண்கள் | |
| **சிரேஷ்ட மட்டம்** | 05 | 01 | 6 (1.29%) |
| **மூன்றாம் நிலை** | 108 | 43 | 151 (31.52%) |
| **இரண்டாம் நிலை** | 60 | 77 | 137 (28.60%) |
| **ஆரம்ப நிலை** | 179 | 6 | 185 (38.62%) |
| **மொத்தம்** | **352 (73.48%)** | **127(26.52%)** | **479 (100%)** |

***அட்டவணை 4.1.1 – 2016 டிசம்பர் 31ஆம் திகதியில் கைத்தொழில் அபிவிருத்திச் சபையின் பணியாளர்களின் எண்ணிக்கை***




### அட்டவணை 4.1.2 – 2016 நிதியாண்டில் நிர்வாகப் பிரிவின் செயலாற்றுகை வெற்றிகள்

| நோக்கம் | செயற்பாடு | | எண்ணிக்கை | ரூபாய் |
|---|---|---|---|---|
| கைத்தொழில் அபிவிருத்திச் சபை ஊழியர் படையினை வலுட்டுதல் | **1.** | **பின்வரும் பொது மனிதவள முகாமைத்துவச் செயற்பாடுகளை நிறைவேற்றுதல்** | | |
| | (i) | ஆட்சேர்ப்பு (பணியாளர்கள்) | 23 | |
| | (ii) | இராஜினாமாச் செய்தல் | 06 | |
| | (iii) | ஓய்வு பெறுதல் | 17 | |
| | (iv) | தொழிலைக் கைவிட்டுச் செல்லுதல் | - | |
| சட்ட ரீதியான பிரச்சினைகளை இயன்றளவு குறைத்தல் | **2** | **ஒழுக்காற்று முகாமைத்துவம்** | | |
| | (i) | ஒழுக்காற்று விசாரணைகளை நடாத்துதல் | 03 | |
| | (ii) | தொழில் ஆணையாளர் ஊடாக நடவடிக்கை மேற்கொள்ளப்பட்ட தொழில் வழக்குகள் | 12 | |
| விளைத்திறனைக் குறைத்தல் | **3** | **மனித வள அபிவிருத்தி - பயிற்சி** | | |
| | (i) | உள்நாட்டுப் பயிற்சி | 395 | |
| | (ii) | வெளிநாட்டுப் பயிற்சி | 01 | |
| | **4** | **மனித வள முகாமைத்துவம் – இழப்பீடு** | | |
| | (i) | 2016ஆம் ஆண்டில் 22 பேருக்குப் பணிக்கொடை செலுத்தப்பட்டமை | | 10,692,520.50 |
| | **5** | **மனித வள முகாமைத்துவம் – பணியாளர்களின் நலனோம்புகை** | | |

| | | | | |
|---|---|---|---|---|
| | (i) | துவிச்சக்கரவண்டிக் கடன் | 15 | |
| | (ii) | இடர் கடன் | 110 | |
| | (iii) | மருத்துவம் | 637 | |
| **பாதுகாப்பு நடைமுறைகளைத் தாபித்தல்** | **6** | **பாதுகாப்பு முகாமைத்துவம்** | | |
| | (i) | பாதுகாப்புக் கிரயம் | | 13,333,584.65 |
| | **7** | **விற்றொழித்தல்** | | |
| | (i) | நடாத்தப்பட்ட பண்ட மதிப்பாய்வுகள் | 01 | |
| | **8** | **பொது வைபவங்கள்** | | |
| | (i) | வைபங்களின் எண்ணிக்கை | 04 | |
| | **9** | **அஞ்சல் மற்றும் தொலைத்தொடர்புக் கட்டணங்கள்** | | |
| | (i) | அஞ்சல் கட்டணம் | | 491,878.00 |
| | (ii) | தொலைத் தொடர்புக் கட்டணம் | | 1,543,680.92 |
| | **10** | **போக்குவரத்து முகாமைத்துவம்** | | |
| | (i) | எரிபொருட் செலவினம் | | 5,482,440.80 |
| | (ii) | வாகனப் பராமரிப்புச் செலவினம் | | 3,734,465.31 |
| **பெறுகைகள் பணிகளை நடைமுறைப் படுத்துதல்** | **11** | **பெறுகைகள் முகாமைத்துவம்** | | |
| | (i) | சமர்ப்பிக்கப்பட்ட அனுப்பற் கட்டளைகளின் எண்ணிக்கை | 555 | |
| | (ii) | மூலதனக் கொள்வனவு | | 36,623,697.73 |
| | (iii) | மீண்டெழும் கொள்வனவு | | 77,413,601.38 |

## 4.2 *பிராந்திய அபிவிருத்திப் பிரிவு* (RDD)

**பொது**

கைத்தொழில் அபிவிருத்திச் சபையின் பிராந்திய அபிவிருத்திப் பிரிவு நாட்டில் ஒட்டுமொத்தமாக 25 மாவட்டங்களையும் உள்வாங்கும் வகையில் அதன் பிராந்திய வலையமைப்பின் ஊடாகச் சிறிய மற்றும் நடுத்தர அளவிலான கைத்தொழில்களை அபிவிருத்தி செய்வதற்கான விசேட பணிகளை மேற்கொள்கின்றது.

பிரதி/ உதவிப் பணிப்பாளர்கள் 25 பேரையும் 62 தொழில் முயற்சி மேம்படுத்தல் முகாமையாளர்களையும் பிராந்தியக் காரியாலயங்களில் கடமைக்காக ஈடுபடுத்தியுள்ளது.

முக்கியமான 4 நோக்கங்களை அடிப்படையாகக் கொண்டு சிறிய மற்றும் நடுத்தர அளவிலான கைத்தொழில்களை முன்னேற்றுவதற்காகப் பணியாற்றும் பொருட்டு பிரதேச அபிவிருத்திப் பிரிவிற்கான புதிய செயற்றிட்டமொன்று தயாரிக்கப்பட்டுள்ளது.

**இலக்கு வைக்கப்பட்டுள்ள பிரதான குறிக்கோள்கள் பின்வருமாறு:**

1. உள்நாட்டுச் சிறிய மற்றும் நடுத்தர அளவிலான கைத்தொழில்களை உலகளாவிய சந்தைக்குப் பொருத்தமான வகையில் முன்னேற்றுதல்
2. சிறிய மற்றும் நடுத்தர அளவிலான கைத்தொழில்களின் வருமானத்தைப் பெருக்குதல்
3. சிறிய மற்றும் நடுத்தர அளவிலான கைத்தொழிற் பிரிவுகளுக்காகக் கைத்தொழில்களை இலக்காகக் கொண்ட ஆற்றல் விருத்தியினை மேம்படுத்துதல்
4. பிராந்திய ரீதியில் காணப்படும் பொருளாதாரச் சமனிலையற்ற தன்மைகளைத் தீர்த்துக் கொள்வதற்கு உதவுதல்

தொழில் முயற்சி அபிவிருத்தி, திறன் அபிவிருத்தி, மதியுரைச் சேவைகள், புதிய, சிறிய மற்றும் நடுத்தர அளவிலான கைத்தொழில்களை ஆரம்பித்தல் போன்றவற்றுக்கு உதவி வழங்குதல், சாத்தியவள ஆய்வுகள், கைத்தொழில்கள் தொடர்பிலான தகவல்களை வழங்குதல் என்பன பிராந்திய அபிவிருத்திப் பிரிவுக்கும் மாவட்ட அலுவலகங்களுக்கும் சாட்டப்பட்டுள்ள பிரதான பணிகளாகும்.

## மீளாய்வு ஆண்டுக்குள் செயற்படுத்தப்பட்ட விசேட நிகழ்ச்சித் திட்டங்கள்

### வெட்டு மரம் சார்ந்த பொருட்களை உற்பத்தி செய்வதற்கான விசேட நிகழ்ச்சித் திட்டம்

வெட்டுமரம் சார்ந்த பொருட்களை உற்பத்தி செய்வதற்குப் பின்வரும் நோக்கங்களின் அடிப்படையில் 2016.07.21ஆம் திகதி லக்கம் கேட்போர் கூடத்தில் விசேட விழிப்புணர்வூட்டும் நிகழ்ச்சியொன்று நடாத்தப்பட்டது.

- தளபாட உற்பத்தித் துறையில் காணப்படும் பிரச்சினைகளை இனங்காணுதல்
- கிரயத்தைக் குறைத்துக் கொள்ளும் முறைமைகளை அறிமுகப்படுத்துதல்
- விருத்தியாக்கப்பட்ட இயந்திரோபரகணங்கள், சாதனங்கள், கருவிகள் போன்றவற்றை அறிமுகப்படுத்துதல்
- உற்பத்தி அபிவிருத்தி மூலோபாயங்களை அறிமுகப்படுத்துதல் மற்றும்
- இலங்கை வங்கியூடாக நிதியுதவிகளை வழங்குதல்

முன்னிலையிலுள்ள வெட்டுமரம் சார்ந்த உற்பத்திக் கைத்தொழில்களில் ஈடுபட்டுள்ள 25 பேர் இந்நிகழ்ச்சியில் கலந்துகொண்டனர். இலங்கை வங்கியின் உத்தியோகத்தர்கள் மற்றும் லீமா கியேசன்ஸ் தனியார் கம்பனியின் உத்தியோகத்தர்கள் வளவாளர்களாக இந்நிகழ்ச்சியில் கலந்துகொண்டனர்.

பிராந்திய அபிவிருத்திப் பிரிவிற்கான பதிய வலையமைப்பிற்கு உட்படுத்தப்பட்ட மேற்பார்வை மற்றும் மதிப்பீடு முறைமைகள் அறிமுகப்படுத்தப்பட்டன.

ஒவ்வொரு உத்தியோகத்தர்களினதும் முன்னேற்றத்தை மேற்பார்வை செய்வதற்காகவும் மதிப்பீடு செய்வதற்காகவும் எதிர்பார்க்கப்பட்ட குறிக்கோள்களை அடைந்து கொள்கின்ற மட்டத்தினை அளவிடுவதற்கான வலையமைப்புக்குட்படுத்தப்பட்ட புதிய பின்னாய்வு முறைமைகள் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளன.

**பிராந்திய அபிவிருத்திப் பிரிவின் மேற்பார்வை மற்றும் மதிப்பீட்டு நடைமுறை**



**அம்பாறை மாவட்டத்தில் சம்மாந்துறையில் நடாத்தப்பட்ட விசேட சிறிய மற்றும் நடுத்தர அளவிலான கைத்தொழில் அபிவிருத்தி மற்றும் மேம்படுத்தல் நிகழ்ச்சித் திட்டம்**

கைத்தொழில் மற்றம் வாணிப அமைச்சின் பங்களிப்புடன் அம்பாறை மாவட்டத்தின் சம்மாந்துறை, அம்பாறை, அக்கரைப்பற்று, சாய்ந்தமருது மற்றும் தெகியத்தகண்டிய ஆகிய பிரதேச செயலகப் பிரிவுகளில் 2010 ஆகஸ்ட் மாதம் முதல் ஒக்டோபர் மாதம் வரையில் விசேட சிறிய மற்றும் நடுத்தர அளவிலான கைத்தொழில்களை அபிவிருத்தி செய்யும் நிகழ்ச்சித் திட்டங்கள் ஒழுங்கு செய்யப்பட்டு, நடைமுறைப்படுத்தப்பட்டன.

600 கைத்தொழிலாளர்களுக்கு மேற்பட்டவர்களுக்கு பாதணி உற்பத்தி, தச்சுத் தொழில், வீடுகளில் வயரிங் செய்தல், மேசன் கைத்தொழில், தொழிற் பயிற்சிகளை வடிவமைத்தல், உடைகளைத் தைத்தல், கையினாலான பாதுகாப்புக் கையுறைகள் உற்பத்தி தொடர்பான தொழில்நுட்பத்தை வழங்கும் பயிற்சி நிகழ்ச்சிகள், தொழில்சார் பயிற்சி நிகழ்ச்சிகள் மற்றும் முகாமைத்துவத் திறன் அபிவிருத்திப் பயிற்சி நிகழ்ச்சிகள் நடாத்தப்பட்டதுடன் அந்நிகழ்ச்சிகளுக்கு ஒருங்கமைந்த வகையில் அரிசி ஆலை உரிமையாளர்கள் முகங்கொடுக்கும் கைத்தொழில்சார் பிரச்சினைகளையும் சவால்களையும் இனங்காண்பதற்காக நிகழ்ச்சித் திட்டங்களும் நடாத்தப்பட்டன.





**படம் 4.2.1 – தோல்களின் மூலம் பாதுகாப்புக் கையுறை உற்பத்தி**

***கைத்தொழிற் கிராமங்களை அபிவிருத்தி செய்வதற்கான தேசிய நிகழ்ச்சித் திட்டம்***

கொல்லன் பட்டறை வேலை, தும்புசார் உற்பத்திகள் மற்றும் களிமண் சார்ந்த உற்பத்திகள் போன்ற பாரம்பரிய கைத்தொழில்களைக் கட்டியெழுப்பும் நோக்குடன் 2005ஆம் ஆண்டில் "ஆயிரம் கைத்தொழிற் கிராமங்களை அபிவிருத்தி செய்வதற்கான நிகழ்ச்சித் திட்டம்" எனும் பெயரில் இந்நிகழ்ச்சித் திட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டது. அதனையடுத்துக் கைகளினால் தயாரிக்கப்படும் கடதாசிகள், மரமுந்திரிகை மற்றும் கருவாடு போன்ற பாரம்பரியமற்ற

கைத்தொழில்கள் நிகழ்ச்சித் திட்டதின் கீழ் அறிமுகப்படுத்தப்பட்டன. இந்நிகழ்ச்சியின் கீழ் இயந்திரோபகரணங்கள் மற்றும் உற்பத்திச் செயல்முறைகளை அறிமுகப்படுத்துவதற்கும் புதிய உற்பத்தி நுணுக்க முறைகளுடன் கூடியதாகப் பயனாளிகளின் ஆற்றலை மேம்படுத்துவதற்கும் சந்தைப்படுத்தல் வசதிகளை வழங்குவதற்கும் விசேட கவனம் செலுத்தப்பட்டது. 2016ஆம் ஆண்டில் பிராந்திய அபிவிருத்திப் பிரிவினால் இந்நிகழ்ச்சித் திட்டங்கள் கீழே காட்டப்பட்டுள்ளவாறு தனித்தனியாக இரண்டு கருத்திட்டங்களின் கீழ் நடைமுறைப்படுத்தப்பட்டன.

1. கைத்தொழில் உற்பத்திக் கிராமங்களை அபிவிருத்தி செய்தல்
2. தொழில் முயற்சிக் கிராமங்கள் மற்றும் பெண் தொழில் முயற்சியாளர்கள் அபிவிருத்திக் கிராமங்கள்

கிராமங்களை அபிவிருத்தி செய்யும் நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் ஒதுக்கப்பட்ட ரூபாய் 3.02 மில்லியன் நியத்தை ஈடுபடுத்திக் கேகாலை மாவட்டத்தில் மெனிக்களவர மரமுந்திரிகைப் பதனிடல் கிராமத்தின் 20 பெண்களுக்குப் பயிற்சி வழங்குதல் மற்றும் 40 உபகரணத் தொகுதிகளையும் மூலப் பொருட்களையும் கொள்வனவு செய்தல், மரமுந்திரிகை சார்ந்த 50 கைத்தொழிலாளர்களுக்குப் பயிற்சி வழங்குதல், மரமுந்திரிகைத் தோல் அகற்றும் கருவிகள் மற்றும் மரமுந்திரிகை வகைப்படுத்தும் கருவிகளைக் கொள்வனவு செய்தல், மன்னார் தாராபுரம் மரமுந்திரிகைப் பதனிடல் கிராமத்தின் 104 தொழில் முயற்சியாளர்களுக்குப் பயிற்சி வழங்குதல் மற்றும் உபகரணத் தொகுதிகளை வழங்குதல் போன்றன மேற்கொள்ளப்பட்டன.

தொழில் முயற்சிக் கிராமங்கள் மற்றும் மகளிர் தொழில் முயற்சி அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் தங்க ஆபரணம் சார்ந்த உற்பத்தியாளர்கள் 56 பேருக்குத் தங்க ஆபரணக் கைத்தொழிலில் உயர் தொழில்நுட்பப் பயிற்சி நிகழ்ச்சித் திட்டங்கள் நடத்தப்பட்டதுடன் மட்டக்களப்பு மாவட்டத்தில் 5 ஆபரணக் கிராமங்களுக்கு (போரதீவுப்பற்று, முனைதீவு, கல்லாறு, ஒந்தாச்சிமடம், பட்டபுரம்) 200 பென்ரன் மோட்டார்கள் வழங்கப்பட்டன. கண்டி மாவட்டத்தில் பிட்டிவெல களிமண் கைத்தொழில் கிராமத்திற்கு களிமண் கிளறும் இயந்திரம் ஒன்றும் 25 மின்னியக்க வனைதல் இயந்திரங்களும் 170 கூரைத்தகடுகளும் வழங்கப்பட்டன. 20 கைத்தொழிலாளர்களுக்குத் தொழில்நுட்பத்தை வழங்கும் நிகழ்ச்சித் திட்டமும் முகாமைத்துவப் பயிற்சி நிகழ்ச்சித் திட்டமும் நடத்தப்பட்டது. குருநாகல் மாவட்டத்தில் பஹலகம களிமண் கைத்தொழில் கிராமத்தில் கைத்தொழிலாளர்களுக்கு 10 மின்னியக்க வனைதல் இயந்திரங்கள் வழங்கப்பட்டன. முல்லைத்தீவு மாவட்டத்தில் முள்ளியவளை மரமுந்திரிகைப் பதனிடல் கிராமத்திற்கு மரமுந்திரிகைத் தோல் அகற்றும் இயந்திரமும் மரமுந்திரிகை வகைப்படுத்தும் இயந்திரமும் 64 உபகரணத் தொகுதிகளும் வழங்கப்பட்டன. மேலும், களுத்துறை மாவட்டத்தில் இலிம்ப தும்புக் கிராமத்திற்குத் தும்பு அரைக்கும்

இயந்திரக் கருவியொன்றும் வழங்கப்பட்டது. மேற்படி நிகழ்ச்சித் திட்டங்களுக்கு ஒதுக்கப்பட்ட மொத்தப் பணத்தொகை 8.7 மில்லியன் ஆகும்.

## விசேட வெற்றிகள்

தேசிய விளைத்திறன் செயலகத்தினால் நடத்தப்பட்ட தேசிய விளைத்திறன் விருதுகள் 2016 நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் கைத்தொழில் அபிவிருத்திச் சபையின் கம்பஹா, கேகாலை மற்றும் கொழும்பு மாவட்ட அலுவலகங்களுக்கு உற்பத்தி மற்றும் சேவைப் பிரிவுகளுக்கான விசேட விருதுகள் வழங்கப்பட்டன.







**பணியாளர்களுக்கான பயிற்சி**

பிராந்திய உத்தியோகத்தர்களுக்குச் சம்பந்தப்பட்ட துறைகளில் அவர்களின் அறிவினை மேம்படுத்தும் பொருட்டு, பொதியிடல் பற்றிய பயிற்றுவிப்பாளர்களுக்குப் பயிற்சி வழங்கும் நிகழ்ச்சித் திட்டமும் விளைத்திறன் அடிப்படைச் சாதனங்கள் மற்றும் செயல் நுணுக்கங்கள் பற்றியும் பயிற்றுவிப்பாளர்களைப் பயிற்றுவிக்கும் இரண்டு நிகழ்ச்சித் திட்டங்கள் ஒழுங்கு செய்யப்பட்டன.

## 4.3 திட்டமிடல் பிரிவு (PD)

***பொது***

உலகளாவிய சந்தையில் நடைபெறும் துரித மாற்றம் காரணமாகத் தொழில் முயற்சி அபிவிருத்திச் சேவைகளில் இடம்பெற்றுள்ள போட்டிமிகு தன்மையின் காரணமாக சிறிய மற்றும் நடுத்தர அளவிலான தொழில் முயற்சியாளர்களுக்கு மிகவும் அர்த்தபுஸ்டியுள்ள சேவையினை வழங்குவதற்கு வழி சமைக்கும் வகையில் கைத்தொழில் அபிவிருத்திச் சபைக்கான மூலோபாயங்களை மீள் தயாரித்தல் மற்றும் மீள் பொருள்கோடல் செய்யும் பொறுப்பு திட்டமிடல் பிரிவுக்குச் சாட்டப்பட்டுள்ளது.

***திட்டமிடல் பிரிவின் மீது சாட்டப்பட்டுள்ள பணிகள்***

கைத்தொழில் அபிவிருத்திச் சபையின் ஒவ்வொரு பிரிவுடனும் தொடர்புடைய அபிவிருத்திச் செயற்பாடுகளை மூலோபாய ரீதியில் திட்டமிடுதல், மேற்பார்வை செய்தல் மதிப்பீட்டுத் துறைக்குச் (மூலப்பிரதியுடன் ஒப்பிட்டுப் பார்க்கவும்) சாட்டப்பட்டுள்ள பிரதான பணிகளாகும். மேலும், அனைத்து ஆண்டுகளிலும் இலக்கு வைக்கப்படுகின்றதான பௌதிக மற்றும் நிதியியல்சார் இலக்குகளுக்கு ஏதுவாக கைத்தொழில் அபிவிருத்திச் சபைக்கான கூட்டாண்மை மூலோபாயத் திட்டமொன்றைத் தயாரித்தலும் ஒவ்வொரு கிளைகளுக்குமான வருடாந்த மூலோபாயச் செயற்றிட்டத்திற்கு ஏற்ப முன்னேற்றத்தை மேற்பார்வை செய்தலும் மதிப்பீடு செய்தலும் திட்டமிடல் பிரிவின் மீது சாட்டப்பட்டுள்ள பொறுப்புக்களாகும். மேலும், இப்பிரிவினால் நிரல் அமைச்சுக்குத் தேவையான முகாமைத்துவத் தகவல்களை வழங்குதல் மற்றும் கைத்தொழில் அபிவிருத்திச் சபையுடன் தொடர்புடைய ஏனைய பிரிவுகளுக்குத் தேவையான செயலாற்றுகை மதிப்பிடல்களை வழங்குவதும் மேற்கொள்ளப்படுகின்றது.

கைத்தொழில் அபிவிருத்திச் சபையின் ஏனைய பிரிவுகளின் பணிகளுக்கு வசதிகளை வழங்கும் பொருட்டுப் பின்வரும் துணைச் செயற்பாடுகளும் இப்பிரிவின் மீது சாட்டப்பட்டுள்ளன.

- கைத்தொழில் அபிவிருத்திச் சபையின் 1969ஆம் ஆண்டின் 36ஆம் இலக்கக் கைத்தொழில் அபிவிருத்திச் சட்டத்தின் கட்டாயக் குறிக்கோள்களுக்கு அமைவாகக் கொள்கைகளையும் மூலோபாயங்களையும் பற்றிய வழிகாட்டல்களை உருவாக்குதல்
- தாபனத்தின் பாதீடு மற்றும் ஒட்டுமொத்தச் செயற்றிட்டத்திற்கு அமைவாக மூலதன மற்றும் மீண்டெழும் செலவினத் தேவைகளைத் தயாரிப்பதற்கு வசதிகளை வழங்குதல்
- தொழில் முயற்சி/ கைத்தொழில் மதிப்பீடுகளை நடாத்துவதற்கு வசதிகளை வழங்குதல், கைத்தொழில்/ பொருளாதாரம் சார்ந்த புள்ளி விபரங்களை இற்றைப்படுத்துதல் மற்றும்

சம்பந்தப்பட்ட துறைசார் அபிவிருத்தித் திட்டங்களைத் தயாரிப்பதற்கு ஒத்துழைப்பு வழங்குதல்

- வெளிநாட்டு நிதியங்களை வழங்குவதற்காக அபிவிருத்திக் கருத்திட்ட முன்மொழிவுகள் மற்றும் எண்ணக்கருப் பத்திரங்களைத் தயாரித்தல்
- தற்போதுள்ள கைத்தொழில் சார்ந்த கொள்கை வகுத்தற் குழுக்களுக்குக் கைத்தொழில் அபிவிருத்திச் சபை பங்களிப்பு வழங்குவதை உறுதிப்படுத்துதலும் தேவையான சந்தர்ப்பங்களில் கொள்கைப் பத்திரங்களைத் தயாரித்தலும்
- வருடாந்தச் செயற்றிட்டம் சம்பந்தமாக மாதாந்த, காலாண்டு மற்றும் ஓராண்டு முன்னேற்ற அறிக்கைகளைத் தயாரித்தல்

கைத்தொழில் அபிவிருத்திச் சபை பிரதேச செயலகப் பிரிவுகளுக்கு இணைக்கப்பட்டுள்ள அபிவிருத்தி உத்தியோகத்தர்களின் ஒத்துழைப்புடன் நாடளாவிய ரீதியில் அமைந்துள்ள சிறிய மற்றும் நடுத்தர அளவிலான கைத்தொழில்கள் பற்றித் தகவல்களைச் சேகரித்தது

**2016.12.31ஆம் திகதியில் முன்னேற்றம்**

| மாவட்டம் | பரிசீலனைக்கு உட்படுத்தப்பட்டுள்ள சி.ந.கைத்தொழில்களின் எண்ணிக்கை | பதிற் செயற்பாடு காட்டிய மொத்த சி.ந. கைத்தொழில்களின் எண்ணிக்கை | தரவத் தொகுதிக்குள் உள்ளடக்கப்பட்ட சி.ந. கைத்தொழில்களின் எண்ணிக்கை | தரவத் தொகுதிக்குள் உள்ளடக்கப்பட வேண்டிய சி.ந. கைத்தொழில்களின் எண்ணிக்கை |
|---|---|---|---|---|
| குருநாகல் | 850 | 492 | 204 | 288 |
| கண்டி | 800 | 230 | 202 | 28 |
| களுத்துறை | 1,000 | 344 | 194 | 150 |
| மாத்தளை | 500 | 167 | 155 | 12 |
| காலி | 690 | 209 | 139 | 70 |
| இரத்தினபுரி | 500 | 133 | 116 | 17 |
| கேகாலை | 600 | 134 | 104 | 30 |
| கம்பஹா | 1,250 | 250 | 99 | 151 |
| யாழ்ப்பாணம் | 400 | 285 | 99 | 186 |
| கொழும்பு | 1,030 | 205 | 95 | 110 |
| அநுராதபுரம் | 300 | 96 | 94 | 2 |
| பொலன்னறுவை | 200 | 126 | 76 | 50 |

| | | | | |
|---|---|---|---|---|
| திருகோணமலை | 300 | 99 | 74 | 25 |
| பதுளை | 600 | 88 | 62 | 26 |
| மாத்தறை | 600 | 89 | 59 | 30 |
| மொனராகலை | 600 | 80 | 55 | 25 |
| அம்பாறை | 350 | 52 | 52 | |
| முல்லைத்தீவு | 200 | 100 | 48 | 52 |
| மட்டக்களப்பு | 200 | 55 | 45 | 10 |
| புத்தளம் | 400 | 200 | 45 | 155 |
| நுவரெலியா | 450 | 75 | 41 | 34 |
| மன்னார் | 150 | 33 | 33 | 0 |
| வவுனியா | 248 | 66 | 33 | 33 |
| கிளிநொச்சி | 150 | 66 | 31 | 35 |
| அம்பாந்தோட்டை | 500 | 51 | 18 | 33 |
| **மொத்தம்** | **12,868** | **3,725** | **2,173** | **1,552** |

## 4.4 சந்தைப்படுத்தற் பிரிவு (MD)

நாடளாவிய ரீதியில் உள்ள நுண், சிறிய மற்றும் நடுத்தர அளவிலான தொழில் முயற்சியாளர்கள், கைத்தொழிலாளர்கள் அத்துடன் சுய தொழில்களில் ஈடுபட்டுள்ளவர்கள் போன்றவர்களினால் உற்பத்தி செய்யப்படுகின்ற பொருட்களைச் சந்தைப்படுத்துவதற்கு ஏதுவான செயற்பாடுகளை உள்வாங்குகின்ற சந்தைப்படுத்தற் பிரிவு கைத்தொழில் அபிவிருத்திச் சபையின் மிகவும் முக்கியமான சேவைப் பிரிவுகளில் ஒன்றாகும். இப்பிரிவு நீண்டகாலத் தொடர்புகள் வாயிலாகச் சம்பந்தப்பட்ட உற்பத்திகளின் வர்த்தக நன்மதிப்பினைக் கட்டியெழுப்பி உள்நாட்டுக் கைத்தொழிலாளர்களுக்கு எதிர்காலச் சந்தையுடன் தொடர்புகளைக் கட்டியெழுப்புவதற்கு உதவி வழங்குகின்றது. இதற்கு மேலதிகமாகச் சந்தைப்படுத்தற் பிரிவு உள்நாட்டுக் கைத்தொழிலாளர்களின் கைத்தொழில்களை இலக்கு வைத்த சேவைகளை வழங்குவதை மேம்படுத்துவதற்காக ஏனைய துறைகளுக்கும் ஒட்டுமொத்தமாகக் கைத்தொழில் அபிவிருத்திச் சபைக்கும் ஒத்துழைப்பு வழங்குகின்றது.

கைத்தொழில் அபிவிருத்திச் சபையின் மேற் கட்டமைப்புச் செயன்முறையின் கீழ் அச்சு மற்றும் வெளியீட்டுப் பிரிவும் சந்தைப்படுத்தற் பிரிவுடன் ஒன்றிணைக்கப்பட்டுள்ளது.

*சந்தைப்படுத்தற் பிரிவுக்குச் சாட்டப்பட்டுள்ள பணிகள்*

- கைத்தொழில் கண்காட்சிகளை ஒழுங்கு செய்தல் மற்றும் நடாத்துதல்/ தேசியக் கண்காட்சி மற்றும் சந்தைக் கண்காட்சிகளில் பங்கேற்றல்

- நாடளாவிய ரீதியில் உள்ள தொிவு செய்யப்பட்ட நுண், சிறிய மற்றும் நடுத்தர அளவிலான தொழில் முயற்சியாளர்கள்/ கைத்தொழிலாளர்கள் அத்துடன் சுய தொழில்களில் ஈடுபட்டுள்ளவர்களுக்கான தேசிய விருது வழங்கும் வைபங்களை ஒழுங்கு செய்தல்
- லக்கம் மற்றும் லக்னிபயும் வர்த்தக நிலையங்களில் சந்தைப்படுத்தல் வசதிகளை வழங்குதல்
- துணை ஒப்பந்தப் பரிமாற்றங்களுக்கான வசதிகளை வழங்குதல்
- வார்ப்பு வேலை, சிறு பொறியியல் வேலை, கொல்லன் வேலை, ஏனைய உலோக வார்ப்பு மற்றும் கைவினைக் கைத்தொழில்களில் ஈடுபட்டுள்ள கைத்தொழிலாளர்களுக்குச் சலுகை விலைகளின் கீழ் மூலப் பொருட்கள்/ கழிவுப் பொருட்களை வழங்குதல்
- கைத்தொழில்/ நுண், சிறிய மற்றும் நடுத்தர அளவிலான தொழில் முயற்சியினை ஊக்குவித்தல் மற்றும் அபிவிருத்தி செய்தல் ஆகியவற்றுக்குச் சந்தைப்படுத்தல் உதவி மற்றும் மதியுரை சேவைகளை வழங்குதல்

**இப்பிரிவினால் வழங்கப்படும் ஏனைய சேவைகளும் சேவைப் பிரிவுகளும்**

**லக்கம் சந்தைப்படுத்தல் நிலையம் –** நாடளாவிய ரீதியில் உள்ள நடுத்தர அளவிலான கைத்தொழிலாளர்கள் மற்றும் சுய தொழில்களில் ஈடுபட்டுள்ளவர்களின் உற்பத்திகளின் விளைத்திறனை மேம்படுத்துவதற்கும் சந்தைப்படுத்தலை மேம்படுத்துவதற்கும் நோக்கம் கொண்டதாகச் சந்தைப்படுத்தல் நிலையத்தினால் அவ்வாறான உற்பத்திகளுக்கான கண்காட்சி மற்றும் சந்தைப்படுத்தல் வசதிகள் வழங்கப்படுகின்றன. சிறிய மற்றும் நடுத்தர அளவிலான உற்பத்தியாளர்களினால் உற்பத்தி செய்யப்படுகின்ற கிராக்கியுள்ள (கேள்விகளைக் கொண்ட) பொருட்களை இனங்கண்டு, அவற்றை ஊக்குவித்தல் மற்றும் போட்டி விலையின் கீழ் அவற்றினை ஒரே இடத்தில் விற்பனை செய்வதற்கான சந்தர்ப்பங்களை வழங்குதல் “லக்கம்” சந்தைப்படுத்தல் நிலையத்தின் நோக்கமாகும். இலங்கையில் பாரம்பரிய உற்பத்தித் துறைகளில் விளைத்திறனை மேம்படுத்துவதை நோக்காகக் கொண்டு “லக்கம்” சின்னத்தின் கீழ் விற்பனை செய்யப்படுகின்ற பாரம்பரிய உற்பத்திகளுக்கு உள்நாட்டிலும் சர்வதேச சந்தையிலும் வாய்ப்பினைப் பெற்றுக்கொடுக்கும் பொருட்டு அவ்வுற்பத்திகளுக்கான கண்காட்சி மற்றும் விற்பனை வசதிகள் வழங்கப்படுகின்றன.
கடந்த 3 தசாப்தங்களாக நாடளாவிய ரீதியில் உள்ள சிறிய மற்றும் நடுத்தர அளவிலான கைத்தொழிலாளர்களுக்குச் சந்தையில் பிரவேசிப்பதற்கும் சந்தைக்குள் அவர்களின் இருப்பினை நிலைப்படுத்துவதற்கும் கைத்தொழில் அபிவிருத்திச் சபையின் லக்கம் சந்தைப்படுத்தல் நிலையத்தினால் சேவைகள் வழங்கப்பட்டுள்ளன. அவ்வாறான உற்பத்திகள் பின்வரும் வகுதிகளின் கீழ் வகைப்படுத்தப்பட முடியும்.

- பாரம்பரிய தயாரிப்பு முறைகளுக்கேற்ப தயாரிக்கப்பட்ட உணவு உற்பத்திகள்
- பாரம்பரிய ஔடத உற்பத்திகள்
- சிறிய மற்றும் நடுத்தர அளவிலான கைத்தொழில்களுக்கான இயந்திர உபகரணங்கள்
- கைத்தறி மற்றும் பாரம்பரிய ஆடைகள் மற்றும்
- கைப்பணிப் பொருட்கள் அலங்காரப் பொருட்கள்

- **துணை ஒப்பந்தப் பரிமாற்றம் (SCX) –** உலக வங்கி நிதியத்தின் கீழ் தாபிக்கப்பட்ட சந்தைப்படுத்தற் பிரிவின் கீழ் உள்ள துணை ஒப்பந்தப் பரிமாற்றம் 1982ஆம் ஆண்டு முதல் நடைமுறைப்படுத்தப்படுகின்றது. இது கைத்ததொழில் அபிவிருத்திச் சபையினால் உற்பத்தி செய்யப்படுகின்ற பொருட்களை வழங்குவதில் ஈடுபட்டுள்ள அரச மற்றும் அரச சார்பற்ற நிறுவனங்களிடமிருந்து அனுப்பற் கட்டளைகளைப் பெற்றுக்கொள்ளும் பொருட்டு கைத்தொழிலாளர்கள்/ சேவை வழங்குனர்கள் சார்பில் கேட்பு விலையைச் சமர்ப்பிக்கின்றது.

  மரம்/ MDE/ உருக்கு ஆகியவற்றினால் ஆன அலுவலகக் கதிரைகள், சாய்வு நாற்காலிகள், தோலினால் தயாரிக்கப்பட்ட சப்பாத்துகள், செருப்புகள், பைகள், இறப்பர் சார்ந்த துணைப்பாகங்கள், ரீசேட், தொப்பி, புத்தகப் பைகள், காகிதாதிகள், அலுமினியம் கதவுகள், பெயர்ப் பலகைகள், தடுப்புச் சுவர்கள், மகிபோட், வெண் பலகைகள், தும்புத் தடிகள், தூரிகைகள், ஆண்கள் மற்றும் பெண்களுக்கான குடைகள், திரைச் சீலைகள், விசேட பிரிவுகளுக்காகத் தாபிக்கப்பட இருக்கின்ற தரவுக் களஞ்சியங்கள், பலகைகள், ஆடைகள், உணவு, ஆயுர்வேத உற்பத்திகள், இயந்திர உபகரணங்கள், தோலினால் ஆன பொருட்கள், பித்தளைப் பொருட்கள், நிலைக் கண்ணாடி, பீங்கான் களி மற்றும் மூங்கில்கள், தேங்காய்ச் சிரட்டைகள், சிப்பிகளினால் தயாரிக்கப்பட்ட அலங்காரப் பொருட்கள் போன்றவை.

- **உலோகக் கழிவுக் கருத்திட்டம் –** கைத்தொழில் அபிவிருத்திச் சபையின் சந்தைப்படுத்தற் பிரிவினால் இரும்பு கலந்த மற்றம் இரும்புக் கலவையில்லாத உலோகக் கழிவுகள் மற்றும் ஏனைய சம்பந்தப்பட்ட பொருட்களை அரச நிறுவனங்களிடமிருந்து கொள்வனவு செய்து அப்பொருட்களைக் கைத்தொழில் அபிவிருத்திச் சபையில் பதிவு செய்துகொண்டுள்ள சிறு பொறியியல் துறையைச் சார்ந்த கைத்தொழிலாளர்களுக்கு உத்தியோகத்தர்களினால் நிருவகிக்கப்படுகின்ற சலுகை விலையின் கீழ் மூலப் பொருட்களாக விநியோகிக்கப்படுகின்றது.

- **கண்காட்சிகள் –** கைத்தொழில் அபிவிருத்திச் சபை நுண், சிறிய மற்றும் நடுத்தர அளவிலான தொழில் முயற்சியாளர்களுக்கு மாவட்ட மற்றும் மாகாண மட்டத்தில் கண்காட்சிகளை ஒழுங்கு செய்கின்றது. மாவட்ட மற்றம் மாகாண மட்டத்திலான கண்காட்சிகளை நடாத்திய பின்னர் நுண், சிறிய மற்றும் நடுத்தர அளவிலான துறைகளிலிருந்து நாடளாவிய ரீதியில் சிறந்த தொழில் முயற்சியாளர்களைத் தொிவு செய்து கொள்வதற்காகத் தேசிய மட்டத்தில் வருடாந்தக் கண்காட்சிகளையும் வர்த்தகக் கூடங்களையும் நடாத்துகின்றது. இக்கண்காட்சியின் ஊடாகத் தொழில் வாய்ப்புக்கள் உருவாக்கப்படுவதற்கும் சிறிய கைத்தொழில்களை ஆரம்பிப்பதற்கும் வசதிகள் வழங்கப்படுகின்றன.

மேலும், கைத்தொழில் அபிவிருத்திச் சபை வெளித் தரப்புக்களினால் ஒழுங்கு செய்யப்படுகின்ற கைத்தொழில் கண்காட்சிகளில் பங்கேற்று, அக்கண்காட்சிகளில் கலந்துகொள்ளும் கைத்தொழிலாளர்களுடனும் தொடர்புகளைக் கட்டியெழுப்பிக் கொள்கின்றது.

### அட்டவணை 4.4.1 – சந்தைப்படுத்தற் பிரிவின் செயலாற்றுகை - 2015

| செயலாற்றுகை | லக்கம் விற்பனை நிலையம் | துணை ஒப்பந்தங்களை வழங்குதல் | கழிவு உலோகக் கருத்திட்டம் | மொத்தம் (ரூ.மில்.) |
|---|---|---|---|---|
| விற்பனைப் பெறுமதி (ரூ.மில்.) | 10.70 | 7.86 | 43.16 | 61.72 |
| வருமானம் (ரூ.மில்.) | 2.09 | 0.472 | 20.55 | 23.11 |
| அனுப்பற் கட்டளைகளை விநியோகித்தல் | | 33 | | |
| கொள்வனவு செய்யப்பட்ட அளவு (மெ.தொ) | | | 758 | |
| விநியோகிக்கப்பட்ட அளவு (மெ.தொ) | | | 706 | |
| வசதிகள் வழங்கப்பட்ட கைத்தொழிலாளர்களின் எண்ணிக்கை | 40 | 19 | 723 | |



## 4.5 கைத்தொழிற் பேட்டைப் பிரிவு

கைத்தொழிற் பேட்டை என்பது கைத்தொழில் அபிவிருத்திச் சபையின் கைத்தொழிற் பேட்டைப் பிரிவினால் உள்நாட்டுக் கைத்தொழிலாளர்களுக்குக் கைத்தொழில்களை ஆரம்பிப்பதற்குத் தேவையான கட்டி முடிக்கப்பட்ட கட்டிடங்களையும்/ காணித் துண்டுகளையும் கைத்தொழில் வசதிகளையும் நீண்டகாலக் குத்தகையின் அடிப்படையில் பெற்றுக் கொடுக்கின்ற ஓர் இடமாகும். கைத்தொழில் அபிவிருத்திச் சபையினால் பேணப்படுகினற் கைத்தொழிற் பேட்டைகள் உள்நாட்டுச் சிறிய அளவிலான கைத்தொழில்களை மேம்படுத்துவதற்காக முன்னேற்றுவதற்கான பயனுறுதி வாய்ந்ததொரு சாதனமாகப் பயன்படுத்தப்பட்டுள்ளதுடன் அவ்வாறான கைத்தொழிலாளர்களுக்குத் தங்களுடைய தொழில் முயற்சிகளை மேம்படுத்துவதற்கும் விரிவாக்குவதற்கும் மிகவும் பெறுமதிவாய்ந்த பல வசதிகள் கிடைக்கின்றன. மேலும், இக்கைத்தொழிற் பேட்டைகள் கைத்தொழிலை ஊக்குவித்துத் தொலை தூரப் பிரதேசங்களிலுள்ள கைத்தொழிலாளர்களை ஊக்குவிக்கும் பொருட்டுக் கைத்தொழிற் செயற்பாடுகளைப் பரவலாக்குவதற்கு மிகவும் பயனுறுதி வாய்ந்ததொரு சாதனமாக மாறியுள்ளன.

கைத்தொழிற் பேட்டை எண்ணக்கரு 1960ஆம் ஆண்டில் இலங்கைக்கு அறிமுகப்படுத்தப்பட்டதுடன் சிறிய மற்றும் நடுத்தர அளவிலான கைத்தொழில்கள் தேசியக் கைத்தொழிற் தேவைகளுடன் ஒருங்கிணைந்து செயற்படல் இதன் பிரதான குறிக்கோளாக அமைந்தது. கைத்தொழில் அபிவிருத்திச் சபை விசேடமாகச் சிறந்த கைத்தொழிற் சூழல்கள் உள்ள பிரதேசங்களில் அமைக்கப்பட்ட போதியளவு உட்கட்டமைப்பு வசதிகளுடன் கூடிய காணிகள் மற்றும் கட்டி முடிக்கப்பட்ட கட்டிடங்களைக் கைத்தொழிலாளர்களுக்கு வழங்கியுள்ளது. ஆகவே, கைத்தொழில் உட்கட்டமைப்பு வசதிகளை வழங்கும் போது கொழும்பு மற்றும் அதனை அண்டிய பிரதேசங்களுக்கும் தூரப் பிரதேசங்களில் உள்ள மாவட்டங்களும் இடையில் பெருமளவு சமனிலையற்ற தன்மை காணப்படுவதால் பிராந்திய மட்டத்தில் கைத்தொழில் ஆக்கத்தை மேலும் ஊக்குவித்துக் கைத்தொழில் அபிவிருத்திச் செயற்பாடுகளை நாடளாவிய ரீதியில் ஏற்படுத்துவதற்குக் கைத்தொழில் அபிவிருத்திச் சபை எதிர்பார்க்கின்றது.

உயர்ந்தளவிலான பொருளாதார ஆற்றல்களைக் கொண்ட பிரதேசங்களில் அமைக்கப்பட்டுள்ள இவ்வனைத்துக் கைத்தொழிற் பேட்டைகளும் பழக் கைத்தொழிற்சாலைகளைக் கொண்டு இயங்குவதுடன் தற்போது ஏக்கல, பல்லேகல, ஹொரண, பன்னல, பானலுவ போன்ற பிரதேசங்களில் பொருத்தமான இடங்களில் கைத்தொழிற் பேட்டைகளை நிறுவி, அக்கைத்தொழிற் பேட்டைகளுக்கு உள்வாரியான வீதிகள், தொலைத் தொடர்பு வசதிகள், நீர் வழங்கல், மழை நீர் வழிந்தோடுவதற்கான வடிகான் தொகுதிகள், முக்கலை மின்சாரம், வீதிகளுக்கான ஒளியூட்டல், பாதுகாப்பு மற்றும் அஞ்சல் அலுவல்கள் போன்ற உட்கட்டமைப்பு வசதிகள் வழங்கப்பட்டுள்ளன.

தற்போதுள்ள கைத்தொழிற் பேட்டைகளில் உட்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்துவதற்கும் புதிதாகக் கைத்தொழிலை ஆரம்பிப்பதற்கும் தனியார் துறையினரை ஊக்குவித்துக் கவர்ந்திழுத்துக் கொள்வதற்கும் தமது தொழில் முயற்சிகளை விரிவாக்குவதற்கும் தற்போதுள்ள கைத்தொழில்களுக்கு வசதிகளை வழங்கவதற்கும் 2015/2016 காலகட்டத்தில் கைத்தொழில் அபிவிருத்திச் சபை மேலும் பல நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளது.

# கைத்தொழில் பேட்கைகள் காணப்படும் இடங்கள்



**கைத்தொழிற் பேட்டைப் பிரிவுக்குச் சாட்டப்பட்டுள்ள பணிகள்**

- கைத்தொழிற் பேட்டைகளை ஆரம்பிப்பதற்குப் பொருத்தமான இடங்களை இனங்காண்பதற்காக ஆரம்பக்கட்ட ஆய்வுகளை மேற்கொள்ளுதல்
- சம்பந்தப்பட்ட நிறுவனங்களிடமிருந்து தேவையான நிதி மற்றும் அங்கீகாரத்தைப் பெற்றுக் கொள்வதற்குக் கருத்திட்ட முன்மொழிவினைத் தயாரித்தல்
- உத்தேச அல்லது ஏற்கெனவே உள்ள கைத்தொழிற் பேட்டைகளில் நிர்மாணப் பணிகளை மேற்கொள்ளுதல்
- வெற்றிடமாக நிலவுகின்ற காணிகள் மற்றும் கட்டிடங்களுக்கான புதிய கைத்தொழிலாளர்களைத் தெரிவு செய்து கொள்ளுதல்
- ஏற்கெனவே உள்ள கைத்தொழிற் பேட்டைகளைப் பராமரித்தல்
- காணிகளை ஒதுக்குவதற்கான கடிதங்களை விநியோகித்தல் மற்றும் குத்தகைக் காரர்களுடன் குத்தகை ஒப்பந்தத்தினைக் கைச்சாத்திடுதல்
- வாடகைகளை வசூலித்துக் கொள்ளுதல் மற்றும் நாளாந்தப் பராமரிப்புப் பணிகளை மேற்பார்வை செய்தல்
- இணங்கியுள்ள ஒப்பந்த நிபந்தனைகளை மீறியுள்ள கைத்தொழிலாளர்களுக்கு எதிராக நடவடிக்கைகளை மேற்கொள்ளுதல்
- கைத்தொழில் அபிவிருத்திச் சபையின் ஏனைய பிரிவுகள் மற்றும் ஏனைய நிறுவனங்களுடன் இணைந்து கைத்தொழிலாளர்களுக்குத் தேவையான உதவிகளை வழங்குதல்
- கைத்தொழில் அபிவிருத்திச் சபையின் ஏனைய பிரிவுகளினால் ஒழுங்கு செய்யப்படுகின்ற வருடாந்தக் கண்காட்சிகள், போட்டிகள் மற்றும் செயலமர்வுகளுக்குப் பங்களிப்பு வழங்குதல்

2016ஆம் ஆண்டிற்குள் கைத்தொழிற் பேட்டைப் பிரிவு கைத்தொழில் அபிவிருத்திச் சபையின் கீழுள்ள 18 கைத்தொழிற் பேட்டைகளுக்கிடையில் பல்லேகல, பானலுவ, கலிகமுவ மற்றம் புசல்ல ஆகிய கைத்தொழிற் பேட்டைகளின் உள்வாரியான வீதிகளை அமைத்தல், பாதுகாப்பு வேலிகளை அமைத்தல், மழைநீர் வழிந்தோடுவதற்கான வடிகான் தொகுதிகளை அமைத்தல் போன்ற தற்போதுள்ள உட்கட்டமைப்பு வசதிகளை நவீன மயப்படுத்துவதற்கும் மேம்படுத்துவதற்குமான பணிகளுக்கு நிரல் அமைச்சினூடாகத் திறைசேரியிலிருந்து பெற்றுக் கொண்ட ரூபாய் 60 மில்லியனுக்கு மேற்பட்ட பணத் தொகையினைச் செலவிட்டுள்ளது.

இதற்கு மேலதிகமாக "துரித அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டம் - 2016" இன் கீழ் கைத்தொழிற் பேட்டைகளின் உட்கட்டமைப்பு வசதிகளை நவீன மயப்படுத்துதல், பராமரித்தல் மற்றும் முன்னேற்றுதல் போன்றவற்றுக்காகக் கைத்தொழில் மற்றம் வாணிப அலுவல்கள் அமைச்சு இலங்கைக் கைத்தொழில் அபிவிருத்திச் சபையின் கைத்தொழிற் பேட்டைப் பிரிவிற்கு ரூபாய் 250 மில்லியன் பணத் தொகையை வழங்கியுள்ளது. நிர்மாணப் பணிகள் பெரும்பாலும் அரச நிர்மாண நிறுவனங்களின் உதவியுடன் மேற்கொள்ளப்பட்டதுடன் அவ்வாறான கருத்திட்டங்களில் பெரும்பாலானவை வெற்றிகரமாகப் பூர்த்தி செய்யப்பட்டுள்ளன.

## 2016ஆம் ஆண்டில் கைத்தொழிற் பேட்டைகளில் மேற்கொள்ளப்பட்ட அபிவிருத்திப் பணிகள்

| தொ.இல. | செயற்பாடு | கைத்தொழிற் பேட்டையின் பெயர் | பணத்தொகை (ரூ.) |
|---|---|---|---|
| 01 | உள்ளக வீதிகள் மற்றும் வடிகான்களை அமைத்தல் | கலுடாவெல | 39,000,000.00 |
| 02 | • மின்மாற்றியொன்றைப் பொருத்துதல்<br>• இரண்டாம் கட்டத்தின் அபிவிருத்திப் பணிகள் | பன்னல | 2,750,000.00<br>76,670,000.00 |
| 03 | உள்ளக வீதிகளைக் காப்பற் செய்தல் மற்றும் வீதிகளை நிர்மாணித்தல் | ஹொரண | 11,0,000.00 |
| 04 | உள்ளக வீதிகளைக் காப்பற் செய்தல் மற்றும் பாதுகாப்பு வேலிகளை அமைத்தல் | பல்லேகல | 35,710,000.00 |
| 05 | உள்ளக வீதிகளை அமைத்தல், மலசல கூடம் மற்றும் பிரதான வாயிலைப் புதுப்பித்தல் | கொட்டகல | 4,000,000.00 |
| 06 | உள்ளக வீதிகள் மற்றும் வடிகான்களை அமைத்தல் | புசல்ல | 5,750,000.00 |
| 07 | உள்ளக வீதிகளை அமைத்தல் | பூந்தோட்டம் | 12,000,000.00 |
| 08 | • உள்ளக வீதிகளைக் காப்பற் செய்தல்<br>• மலக்கழிவுப் பகுதியின் எஞ்சிய பகுதிகளை நிர்மாணித்தல் | ஏகல | 31,000,000.00<br>4,600,000.00 |
| 09 | • மின்மாற்றியொன்றைப் பொருத்துதல்<br>• இரண்டாம் கட்டத்தின் அபிவிருத்திப் பணிகள் | மிகிந்தலை | 2,760,000.00<br>7,600.000.00 |
| 10 | காணிகளைத் துப்பரவு செய்தல் மற்றும் பாதுகாப்பு வேலிகளை அமைத்தல் | நீகம்பஹ | 5,130,000.00 |
| 11 | உள்வாரியான வீதிகள், வடிகான்கள் மற்றும் பாதுகாப்பு வேலிகளை அமைத்தல் | புத்தள | 22,130,000.00 |
| | **மொத்தம்** | | **249,210,000.00** |

### கைத்தொழில் அலகுகளுக்குக் கைத்தொழிலாளர்களைத் தெரிவு செய்தல்

புதிதாகக் கைத்தொழில்களை ஆரம்பிப்பதற்கு எதிர்பார்க்கின்ற தொழில் முயற்சியாளர்கள் மற்றும் தற்போது கைத்தொழில் அபிவிருத்திச் சபையின் கைத்தொழிற் பேட்டைகளில் கைத்தொழில்களைப் பேணி வருகின்ற, அவ்வாறான கைத்தொழில்களை மேலும் உருவாக்குவதற்குத் திட்டமிட்டுள்ள கைத்தொழிலாளர்கள் கைத்தொழிற் பேட்டைகளில் எஞ்சியிருக்கின்ற காணித்துண்டுகளைப் பெற்றுக் கொள்வதற்கு ஊக்குவிக்கப்படும். இதன்படி காணிகளைப் பெற்றுக்கொள்ள விண்ணப்பிக்கின்ற கைத்தொழிலாளர்கள் உத்தியோகத்தர் குழுவொன்றினால் மதிப்பீட்டுக்கு உட்படுத்தப்படுகின்றனர். இவ்வாண்டிற்குள் அவ்வாறான தெரிவு செய்யப்பட்ட கைத்தொழிலாளர்கள் பற்றிய விபரங்களின் சுருக்கம் பின்வரும் அட்டவணியல் காட்டப்பட்டுள்ளது.

**ஒதுக்கப்பட்ட கைத்தொழில் அளவுகள் மற்றும் உத்தேச முதலீடு மற்றும் உத்தேசத் தொழில் வாய்ப்புக்களின் எண்ணிக்கை - 2016**

| இல. | கைத்தொழிற் பேட்டை | கைத்தொழிலின் உற்பத்திப் பொருட்கள் | உத்தேச முதலீடு (ரூ.மில்.) | உத்தேசத் தொழில் வாய்ப்புக்களின் எண்ணிக்கை |
|---|---|---|---|---|
| 1 | கலுடாவல | மரத் தளபாடங்கள் | 10 | 33 |
| 2 | | Mca தூளாக்குதல் | 12 | 13 |
| 3 | பன்னல | சிறு பொறியியல் | 2 | 10 |
| 4 | | தீப்பெட்டிகள் | 22.2 | 50 |
| 5 | | பொதியிடல் பொருட்கள் | 14 | 10 |
| 6 | | தேங்காய் எண்ணெய் | 8.8 | 21 |
| 7 | | தும்பு சார்ந்த உற்பத்தி | 15 | 18 |
| 8 | | றேடியேற்றர்கள் | 60 | 15 |
| 9 | | உருக்கு சார்ந்த உற்பத்திகள் | 119 | 16 |
| 10 | ஏகல | ஆடை | 38 | 25 |
| 11 | பல்லேகல | வாகனங்களின் வாகனப் பகுதிகளை ஒன்றிணைத்துப் பொருத்துதல் | 90.8 | 28 |
| 12 | | கூரைத் தகடுகள் | 34 | 47 |
| 13 | | பிளாஸ்டிக் சார் உற்பத்திகள் | 35 | 20 |
| 14 | | பிளாஸ்டிக் சார் உற்பத்திகள் | 90.8 | 28 |
| 15 | | பால் சார் உற்பத்திகள் | 25 | 25 |
| 16 | | விவசாய உபகரணங்கள் | 7.7 | 20 |
| 17 | வவுனியா | மீள் நிரப்பப்பட்ட ரயர் | 3 | 15 |
| 18 | பானலுவ | பொலித்தீன் | 4 | 18 |
| 19 | | இறப்பர் சார்ந்த உற்பத்திகள் | 2.9 | 20 |
| 20 | | இறப்பர் சார்ந்த உற்பத்திகள் | 7.3 | 12 |
| 21 | ஹொரண | சுத்திகரிப்புப் பொருட்கள் | 4 | 10 |
| 22 | மிகிந்தலை | கருங்கல் சார்ந்த உற்பத்திகள் | 14.1 | 20 |
| 23 | புசெல்ல | தேயிலைப் பொதியிடல் கைத்தொழில் | 18 | 10 |
| 24 | லுனுவில | தும்பு சார்ந்த உற்பத்திகள் | 7 | 10 |
| **மொத்தம்** | | | **644.6** | **494** |

### 2016ஆம் ஆண்டில் கைத்தொழிற் பேட்டைகளில் ஆரம்பிக்கப்பட்ட கைத்தொழில்கள், முதலீடு, தொழில் வாய்ப்புக்களின் எண்ணிக்கை மற்றும் உற்பத்தி

| தொ. இல. | கைத்தொழிற் பேட்டை | உற்பத்தி செய்யப்படுகின்ற பொருள் | தொழில் வாய்ப்புக்களின் எண்ணிக்கை | முதலீடு (ரூ.மில்.) |
|---|---|---|---|---|
| 1 | கலுடாவல | மரத் தளபாடங்கள் | 5 | 4.7 |
| 2 | பன்னல | சிறு பொறியியல் | 10 | 2 |
| 3 | ஏகல | பொதியிடல் பொருட்கள் | 20 | 10.1 |
| 4 | | பொதியிடல் பொருட்கள் | 15 | 12 |
| 5 | பல்லேகல | எரிபொருள் | 29 | 10 |
| 6 | | கூரைத் தகடுகள் | 10 | 22 |
| 7 | | பிளாஸ்டிக் சார் உற்பத்திகள் | 22 | 3.9 |
| 8 | | பிளாஸ்டிக் சார் உற்பத்திகள் | 12 | 32.2 |
| 9 | | தீப்பெட்டிகள் | 80 | 66.8 |
| 10 | | உணவு சார் உற்பத்திகள் | 11 | 2.5 |
| 11 | | பிளாஸ்டிக் சார் உற்பத்திகள் | 24 | 11 |
| 12 | வவுனியா | மீள் நிரப்பப்பட்ட ரயர் | 7 | 1.5 |
| 13 | பானலுவ | பொதியிடல் பொருட்கள் | 31 | 25 |
| 14 | | பொலித்தீன் | 15 | 4 |
| 15 | ஹொரண | பிளாஸ்டிக் மற்றும் இறப்பர் உற்பத்தி | 75 | 150 |
| **மொத்தம்** | | | **366** | **357.7** |

**குத்தகை ஒப்பந்தங்களைக் கைச்சாத்திடுதல்**

கைத்தொழிலாளர்களைத் தெரிவு செய்த பின்னர் கைத்தொழில்களுக்கான காணித் துண்டுகளை ஒதுக்கிக் கொடுக்கும் பணிகள் நடைமுறைப்படுத்தப்படும். கைத்தொழில் அபிவிருத்திச் சபையினால் அக்கைத்தொழில்களின் செயலாற்றுகை ஆராய்ந்தறியப்பட்டு அதனடிப்படையில் 30 வருட காலத்திற்குக் குத்தகை ஒப்பந்தங்கள் கைச்சாத்திடப்படுகின்றன. இதற்கு மேலதிகமாக ஏற்கெனவே உள்ள கைத்தொழில்களில் தொழில் முயற்சிப் பணிகளை நடைமுறைப்படுத்துவதில் மீளாய்வு செய்து மேலும் 30 வருடங்களுக்குக் குத்தகை ஒப்பந்தங்கள் புதுப்பிக்கப்படுகின்றன. 2016ஆம் ஆண்டில் அவ்வாறான சம்பந்தப்பட்ட கைத்தொழிலாளர்களது 19 குத்தகை ஒப்பந்தங்கள் கைச்சாத்திடப்பட்டதுடன் அதன் மூலம் 0.25 மில்லியன் ரூபாய் பணத்தொகை ஈட்டப்பட்டுள்ளது.

**வாடகை வருமானத்தை வசூலித்துக் கொள்ளுதல்**

2016 ஆம் ஆண்டில் மாதாந்த / வருடாந்த வாடகை, நீர்க் கட்டணம், நிலுவைத் தொகை போன்றவற்றை வசூலித்துக் கொள்வதற்கும் குத்தகைக்கு வழங்கப்பட்டுள்ள காணிகள் மற்றும் கட்டிடங்களுக்கான வருமானத்தை மாற்றுவதனூடாக அறவிட்டுக் கொள்ளப்பட்ட பணத்தொகை ரூபாய் 65.7 மில்லியனாக இருந்ததுடன் வாடகை பெறுனர்களின் செலவுறுதிச்சீட்டில் காணப்படும் மொத்த வருமானத்தில் நூற்றுக்குத் தொண்ணூறு வீதத்திற்கு அண்மித்த ஒரு தொகையாகும். குத்தகைக் காரர்களிடமிருந்து மீளச் செலுத்தும் பணத்துக்கு 3 வருட கால வைப்பீட்டு வடிவில் அறவிடப்படுகின்ற பணத் தொகைக்காக சுழற்சி நிதியமொன்று பேணிவரப்படுகின்றது. 2016ஆம் ஆண்டு நிறைவு பெறுகின்ற பொழுது இச்சுழற்சி நிதியத்தில் திரண்டிருந்த பணத்தொகை 7.6 மில்லியன் ரூபாயாகும்.

## 4.6 இறப்பர் உற்பத்தி அபிவிருத்தி மற்றும் சேவைகள் நிலையம்

இலங்கையில் இறப்பர் சார்ந்த உற்பத்திகளுக்கு உதவி வழங்கும் பொருட்டு 1980ஆம் ஆண்டு உலக வங்கியின் உதவியின் கீழ் இறப்பர் உற்பத்தி அபிவிருத்தி மற்றும் சேவைகள் நிலையம் பாலியகொடையில் நிறுவப்பட்டது. இறப்பர் சார்ந்த உற்பத்திகளை மேற்கொள்கின்ற சுமார் 200 கைத்தொழிலாளர்கள் நீண்டகாலமாக இந்நிலையத்தில் நிரந்தர சேவை பெறுனர்களாக இருந்ததுடன் அவர்கள் உற்பத்தி அபிவிருத்தி மற்றும் ஆராய்ச்சி வசதிகள், விரிவாக்கம் மற்றும் மதியுரை சேவைகள், கொள்வனவாளர்களின் வேண்டுகோளுக்கிணங்க இயற்கை மற்றும் செயற்கை இறப்பர் கழிவுகள் மற்றும் இரசாயனப் பொருட்கள் அத்துடன் ஏனைய பதனிடல்களுக்குத் தேவையான பொருட்களைச் சில்லறையாக விற்பனை செய்தல் போன்ற சேவைகளைப் பெற்றுக் கொள்கின்றனர்.

இந்நிலையத்தில் 2016ஆம் ஆண்டின் செயலாற்றுகை பின்வருமாறு அமைந்திருந்தது.

### நிலையத்தினால் வழங்கப்படும் சேவைகள்

| சேவை | | அளவீட்டுக் குறிகாட்டி | எண்ணிக்கை |
|---|---|---|---|
| அ) | தொழில்நுட்பத்தை வழங்குதல் | சேவை பெறுனர்களின் எண்ணிக்கை | 23 |
| ஆ) | பரிசோதனை வசதிகள் (ஏற்றுமதிச் சந்தைக்கான இறப்பர் சார்ந்த பொருட்களை உற்பத்தி செய்கின்ற கைத்தொழிலாளர்களுக்கு வழங்குகப்பட்ட ஆராய்ச்சி வசதிகள் இதில் உள்ளடங்குகின்றன) | வேலைகளின் எண்ணிக்கை | 131 |
| இ) | துணை ஒப்பந்த வாய்ப்புகள் | வேலைகளின் எண்ணிக்கை | 12 |
| ஈ) | உற்பத்தி அபிவிருத்தி மற்றும் பல்வகைப்படுத்தல் | வேலைகளின் எண்ணிக்கை | 26 |
| உ) | தொழில்நுட்ப மதியுரை சேவைகள் | எண்ணிக்கை | 46 |

**அபிவிருத்திச் செய்பாடுகள்:**

2016ஆம் ஆண்டு மேற்கொள்ளப்பட்ட வடிவமைத்தல் மற்றும் விருத்தி செய்தல், தரத்தினை உயர்த்துதல் மற்றும் உற்பத்தி விருத்தி செய்தல் பணிகளின் பொழிப்புப் பின்வருமாறு காட்டப்படலாம்.

| அ) | **கலவைகளை வடிவமைத்தல் மற்றும் விருத்தி செய்தல்** | | |
|---|---|---|---|
| | **நிறைவேற்றப்பட்ட விசேட உற்பத்தி வேலைகள்** | **அளவு** | **பெறுமதி (ரூ)** |
| i | டிபியுசஸ் | 2 அலகுகள் | 1,100,000.00 |
| ii | வக்கியும் பிறேக் கோஸ் தெமட்டகொட | 200 அலகுகள் | |
| iii | பிறேக் சிலிண்டர் பூட் தெமட்டகொட | 50 அலகுகள் | |
| iv | ஒனன் கமின்ஸ் ஜெனேற்றருக்கான மௌன்டிங் சூஸ் | 16 அலகுகள் | |
| v | ரயர் ரீட் | 80 கி.கிராம் | |
| vi | பிரஸ்ஸர் சுவிச் டயப்றம்ஸ் தெமட்டகொட | 100 அலகுகள் | |
| vii | கியர் பொக்ஸ் கப்லிங் | 8 அலகுகள் | |
| viii | கழிவு நீர்க் குளாய்களுக்கான சீலிங் றிங் கடவத்தை | 60 கி.கிராம் | |
| ix | றாம் கதவுகளுக்கான இறப்பர் பீடிங் | 200 அடி | |
| x | ரயர் றொட் முனைக்கான புஸ் | 200 அலகுகள் | |

| ஆ) | **தரத்தினை மேம்படுத்துவதற்கான செயற்பாடுகள்** | |
|---|---|---|
| | **விசேட உற்பத்திகள்** | **எண்ணிக்கை** |
| i | ரயர் ரீட் | 70 |
| ii | கெட்டியான ரயர் | 05 |
| iii | Rubber Beadings Fenders | 03 |
| iv | றபர் பீடிங்ஸ் பென்டர்ஸ் | 10 |
| v | எண்ணெய்த் தடுப்பு சேப்டி சூஸ் | 01 |
| vi | எக்சசைசஸ் றபர் பான்ட் | 07 |
| vii | றபர் மௌன்ட் | 06 |

| இ) | **சி.ந.கை. மேற்கொள்ளப்பட்ட செயன்முறை அபிவிருத்தி** |
|---|---|
| i | நியோப்ரின் றபர் சீல் |
| ii | றபர் "ஓ" றிங் |
| iii | செசி மௌன்ட் |
| iv | றபர் சக்கர் |
| v | ஈபீடீஎம் சீல் |
| vi | றபர் கோஸ் |
| vii | காஸ்கட்டுக்கான றபர் றிங் |
| viii | தராசு மௌன்ட் |
| ix | எயா சீல் நொப் |
| x | வைப்ரேசன் றபர் கிளிப் |
| xi | றீகிளைம் றபர் கொம்பவுன்ட் |
| xii | கெட் கப் சீல் வெளசர் |

இந்த நிலையத்தினால் புதிய கைத்தொழிலாளர்களை ஊக்குவிப்பதற்காகவும் தற்போதுள்ள கைத்தொழிலாளர்களினால் உற்பத்தி செய்யப்படுகின்ற உற்பத்திகளின் தரத்தை மேம்படுத்துவதற்காகவும் உலர்ந்த இறப்பர் மற்றும் இறப்பர் பால் சார்ந்த உற்பத்திகள் பற்றி 23 தொழில்நுட்பச் செய்முறை விளக்க நிகழ்ச்சித் திட்டங்கள் நடாத்தப்பட்டுள்ளன.

மேலும், இலங்கை பிளாஸ்டிக் மற்றும் இறப்பர் நிறுவனத்தின் உதவியுடன் இறப்பர் தொழில்நுட்ப டிப்ளோமா பாடநெறியைக் கற்கின்ற மாணவர்களுக்காக இரசாயனக்கூட செய்முறை விளக்க வகுப்புக்கள் நடாத்தப்பட்டுள்ளன.

இந்நிலையம் இவ்வருடத்திற்குரிய இலக்குகளை ஈடேற்றிக் கொண்டு சிறந்த முன்னேற்றத்தை அடைந்து கொண்டுள்ளதுடன் இவ்வருடத்துக்குள் தொழில்நுட்ப மற்றும் வர்த்தக நடவடிக்கைகளின் மூலம் ஈட்டிக்கொண்ட வற் வரி மற்றும் தேசத்தைக் கட்டியெழுப்பும் வரி தவிர்ந்த வருமானமாக 20.5 மில்லியன் ரூபாயினை ஈட்டிக்கொண்டுள்ளது.

**பொருட்கள் விற்பனை மற்றும் சந்தைப்படுத்தல் - 2016**

| | **அளவு** | **விற்பனைப் பெறுமதி ரூபாய்** | **மொத்தம் ரூபாய்** |
|---|---|---|---|
| இறப்பர் கலவை விற்பனை – கி.கிராம் | 29,802.46 | 13,931,715.68 | |
| மீள் அரைத்தல் உள்ளிட்ட அரைத்தல் கட்டணம் – கி.கிராம் | 15,789.10 | 304,205.19 | |
| கலவை செய்யப்பட்ட இறப்பர் பால் (எல்3) - கலன்கள் | 2,069.07 | 2,492,306.98 | |
| மையநீக்கம் செய்யப்பட்ட இறப்பர் பால் ( சி. லற்றக்ஸ்) - கலன்கள் | 565.00 | 568,896.74 | |
| இரசாயனப் பொருட்கள் - கி.கிராம் | 2,127.19 | 600,630.73 | |
| கெம்லொக் – லீற்றர்கள் | 28.15 | 311,853.85 | |
| பொலித்தீன் - கி.கிராம் | 300.15 | 101,931.30 | |
| பிரிகை - கி.கிராம் | 596.30 | 256,012.70 | |
| | | | 18,512,039.90 |
| **சேவைகள்** | | | |
| **i. விரிவாக்கம் மற்றும் மதியுரை சேவைகள்** | | 1,104,214.91 | |
| **ii. தரக்கட்டுப்பாடு மற்றும் இரசாயன ஆய்வுகூடப் பரிசோதனைகள்** | | 808,763.06 | |
| **iii. உற்பத்தி அபிவிருத்தி** | | 90,153.10 | 1,986,585.47 |
| **மொத்தம்** | | | **20,498,625.37** |
| **தேசத்தைக் கட்டியெழுப்பும் வரி 2%** | | | 433,871.14 |
| **வற் வரி 15%** | | | 2,286,141.49 |
| **வரியுடன் கூடிய மொத்த வருமானம்** | | | **23,218,638.00** |




## 4.7 பொறிறியல் பிரிவு (ED)

பொறியியல் துறையின் விடயப் பரப்பின் கீழ் நடைமுறைப்படுத்தப்படும் பிரிவுகள் மற்றும் நிலையங்கள் பின்வருமாறு:

அ) கட்டுபத்த தலைமை அலுவலகம் – பொறியியல் வேலைத்தளம், வார்ப்பு வேலைத்தளம், பரிசோதனை ஆய்வு கூடம், பொறியியல் அலுலகம் (தொழில்நுட்பத் தகவல் மற்றும் மதியுரை சேவைகள் மற்றும் மதிப்பீட்டு அறிக்கைகள் போன்றவை), சிவில் பொறியியல் மற்றும் மின் பொறியியல் ஆகிய துறைகள் இதற்குள் அடங்கும்.

ஆ) மின் முலாம் பூசும் நிலையம் (E.P.C.) - பேலியகொடை

இ) பொருத்தமான தொழில்நுட்ப ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி நிலையம் (A.T.R.D.C.) - பன்னல

ஈ) பொதுச் சேவைகள் நிலையம் (C.S.C.)- மாத்தறை

உ) பித்தளைப் பொருட்கள் சேவை நிலையம் – பமுனுவ

### இப்பிரிவினால் ஈடேற்றப்பட்ட செயற்பாடுகள்

அ) தற்போதுள்ள கைத்தொழிலாளர்களுக்கும் புதிய கைத்தொழிலாளர்களுக்கும்/ எதிர்காலக் கைத்தொழிலாளர்களுக்கும் மூலப்பொருட்கள் மற்றும் இயந்திர உபகரணங்களைத் தெரிவு செய்து கொள்ளும் போது திட்டமிடும்போது/ விருத்தி செய்யும்போது உதவிகளை வழங்குதலும் தொழில்நுட்ப/ நடைமுறை பற்றி அறிவினை வழங்குதலும்.

ஆ) வேண்டுகோள்களின் அடிப்படையில் கைத்தொழிலாளர்களுக்குப் பதனிடல், வார்ப்பு, உலோக முடிவாக்கம் சேவைகளை வழங்குதல்.

இ) சபைக்குச் சிவில் மற்றும் மென் பொறியியலாளர் துறைகளில் உள்வாரியான பழுது பார்த்தல், பராமரிப்பு/ மறுசீரமைப்பு மற்றும் நிர்மாணத் திட்டமிடல் அத்துடன் மேற்பார்வை போன்றவற்றிற்கு உதவி வழங்குதல் மற்றும் சபையின் வாகனப் பராமரிப்புத் தேவைகளின் போது தொழில்நுட்ப மற்றும் கண்காணிப்பு ஒத்துழைப்பினை வழங்குதல்.

ஈ) கைத்தொழில் மற்றும் வாணிப அமைச்சின் கண்காட்சி மற்றும் கருத்திட்டங்களுக்குச் சிவில் மற்றும் மென் பொறியியல் உதவிச் சேவைகளை வழங்குதல்.

உ) வேண்டுகோள்களின் அடிப்படையில் வார்ப்பு வேலைப் பிரிவிற்கான இயந்திர உபகரணங்கள், மதிப்பீட்டு அறிக்கைகள், விஞ்ஞான ஆய்வுகூட சேவைகள் போன்றவற்றை வழங்குதலும் பதனிடல் மற்றும் பொறியியல் கடைசல் சேவைகளை வழங்குதலும் இப்பிரிவினால் மேற்கொள்ளப்படும் ஏனைய செயற்பாடுகளாகும்.

ஊ) கைத்தொழில்களுக்குச் சிக்கனத்துடன் கூடிய இயந்திர உபகரண ஆரம்பக் கட்டமைப்பினைத் தயாரித்தல்.

## 2016 ஆம் ஆண்டின் செயலாற்றுகை

(I) ***கட்டணம் அறவிடப்படுகின்ற சேவைகள், மதிப்பீடுகள், வார்ப்பு வேலைகள், மின் முலாம் பூசும் இரசாயனக்கூடச் சேவைகள், உபகரணங்கள் மற்றும் பல்வேறு உருப்படிகளை விற்பனை செய்ததன் மூலம் கிடைத்த வருமானம்.***

பல்வேறு துறைகளினாலும் நிலையத்தினாலும் 2016ஆம் ஆண்டில் ஈடேற்றப்பட்ட வெளிவாரியான சேவைகளின் ஊடாக ஏற்றுக்கொள்ளப்பட்ட வருமானம் பின்வரும் அட்டவணையில் தரப்பட்டிருக்கின்றது.

**அட்டவணை: 2016ஆம் ஆண்டு ஈடேற்றப்பட்ட சேவைகளுக்காக வெளிவாரியாக ஈட்டிக்கொள்ளப்பட்ட வருமானம்**

| தொ. இல. | பிரிவு | மொத்த வருமானம் (ரூ.) (வற் வரி மற்றும் தேசத்தைக் கட்டியெழுப்பும் வரி தவிர்ந்த) |
|---|---|---|
| 1 | பொறியியல் வேலைத்தளம், தலைமை அலுவலகம், கட்டுபத்த, பொருத்தமான தொழில்நுட்பத்தை வழங்கும் நிலையம் மற்றும் பித்தளைப் பொருட்கள் நிலையம் | 1,239,833 |
| 2. | வார்ப்பு வேலைத்தளம், தலைமை அலுவலகம் | 6,771,443 |
| 3. | மதிப்பீட்டு அறிக்கைகள்- தலைமை அலுவலகம் | 2,726,931 |
| 5. | இயந்திரோபகரணங்கள் மற்றும் உபகரணங்களை உற்பத்தி செய்தல் மற்றும் விநியோகித்தல்/ விற்பனை செய்தல் | 15,326,874 |
| 6. | மின் முலாம் பூசும் நிலையம், பேலியகொடை | 1,927,791 |
| | கைத்தொழிலுக்குப் பொருத்தமான மூலப்பொருட்களை வழங்குதல் | 77,329 |
| 8. | மூலப்பொருட்கள், இரசாயனப் பொருட்கள் போன்றவற்றை வழங்குதல் | 409,614 |
| 9 | மதியுரை சேவைகளை வழங்குதல் | 32,617 |

| | | |
|---|---|---|
| 10 | இரசாயனக்கூடப் பரிசோதனை அறிக்கைகளை வழங்குதல் | 11,200 |
| 11 | தொழில் முயற்சியாளர்கள் மற்றும் தொழில்வாண்மையாளர்களுக்கான பயிற்சிகளை வழங்குதல் | 15,900 |
| 12 | தொழில்நுட்பத்தை வழங்கும் நிகழ்ச்சித் திட்டங்களை நடாத்துதல் | 29,000 |
| | **மொத்தம்** | **28,568,532** |

(II) ***உள்வாரியான சேவைகள்***

பல்வேறு துறைகளினால் வழங்கப்படுகின்ற உள்வாரியான பொறியியல் சேவைகளின் பெறுமதி சேவைகளின் கிரயத்தின் அடிப்படையில் பின்வருமாறு:

| தொ. இல. | பிரிவு | வழங்கப்பட்ட உள்வாரியான சேவைகளின் பெறுமதி (ரூ.) |
|---|---|---|
| 1 | வேலைத்தளம் – தலைமை அலுவலகம் | 9481 |
| 2 | வார்ப்பு வேலைத்தளம் – தலைமை அலுவலகம் | 1,093045 |
| 3 | சிவில் பொறியியல் சேவைகள் – தலைமை அலுவலகம் | 3049861 |
| 4 | மின் பொறியியல் சேவைகள் – தலைமை அலுவலகம் | 216660 |
| | **வழங்கப்பட்ட உள்வாரியான சேவைகளின் மொத்தப் பெறுமதி** | **4,369,047** |

**(III)** ***மதியுரை/ விரிவாக்கற் சேவைகள்:***

**மதியுரை சேவைகள்:**

2016ஆம் ஆண்டில் கைத்தொழிலாளர்களுக்கு வடிவமைப்பு மற்றும் பதனிடல் பற்றிய தொழில்நுட்ப/ நடைமுறைத் தகவல்களையும் ஆலோசனைகளையும் வழங்கும் 21 மதியுரை சேவைகள் நடாத்தப்பட்டன.

(IV) ***பொறித் தொகுதிகள்/ உபகரணங்கள்/ செயன்முறை விருத்தி***

2016ஆம் ஆண்டில் ஏகலயில் அமைந்துள்ள பொருத்தமான தொழில்நுட்ப மற்றும் ஆராய்ச்சி அபிவிருத்தி நிலையத்தில் கூட்டுப்பசளை பலரைசர் இயந்திரமொன்று புதிதாக வடிவமைக்கப்பட்டுத் தயாரிக்கப்பட்டது. திவிநெகும நிகழ்ச்சித் திட்டம் மற்றும் பிரதேச செயலக அலுவலகத்திற்காக மின்னியக்க வனைதல் இயந்திரங்கள் 264இற்கும் மேற்பட்ட தொகையொன்று உற்பத்தி செய்யப்பட்டது.



**கூட்டுப்பசளை பலரைசர் இயந்திரம்**

## 4.8 தொழில் முயற்சி அபிவிருத்தி மற்றும் மதியுரை சேவைகள் நிலையம் (CEDACS)

புடவை மற்றும் கிராமியக் கைத்தொழில் அபிவிருத்தி அமைச்சினால் 1989ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 15ஆம் திகதி விசேட பயிற்சிப் பிரிவாகத் தொழில் முயற்சி அபிவிருத்தி மற்றும் மதியுரை சேவைகள் நிலையைம் தாபிக்கப்பட்டது. இந்நிலையம் பயிற்சிப் பிரிவு, நூலகம் மற்றும் தகவல்கள் பிரிவு, தகவல் தொழில்நுட்பப் பிரிவு மற்றும் அச்சுப் பிரிவு ஆகிய 4 பிரிவுகளைக் கொண்டது. முகாமைத்துவத் திறன்களை மேம்படுத்திக் கொள்வதற்குத் தொழில் முயற்சி அபிவிருத்தி தொடர்பாக நாடளாவிய ரீதியிலுள்ள தொழில் முயற்சியாளர்களுக்குப் பல்வேறு பயிற்சிகளை வழங்குதலும் பயிற்சிப் பிரிவின் பிரதான பணியாகும்.

சிறிய மற்றும் நடுத்தர அளவிலான கைத்தொழில்களை முன்னேற்றி அவற்றை மேம்படுத்துதல், அபிவிருத்தி செய்தல் ஆகியவற்றின் பொருட்டு நூலகம் அத்துடன் தகவல் பிரிவினூடாக நூலக வசதிகளும் கைத்தொழில் தகவல்களும் வழங்கப்பட்டன. இப்பிரிவின் கீழுள்ள தகவல் தொழில்நுட்பப் பிரிவு சபைக்குள் வலையமைப்பு மற்றம் தகவல் வசதிகளை வழங்கி, இணையத் தளத்தை இற்றைப்படுத்தி விருத்தி செய்கின்றது. அச்சுப் பிரிவினால் அறிக்கைகள், கைநூல்கள், கையேடுகள் போன்றவை உள்ளிட்ட தேவையான அனைத்து ஆவணங்களையும் அச்சிடுவதற்கான பணிகள் மேற்கொள்ளப்படுகின்றன.

**தொழில் முயற்சி அபிவிருத்தி மற்றம் மதியுரை சேவை நிலையத்தின் குறிக்கோள்கள்**

- புதிய தொழில் முயற்சிக் கலாசாரமொன்றை உருவாக்குதல்
- ஏற்கெனவே உள்ள கைத்தொழில்களை விரிவாக்குவதற்காகப் புதிய முகாமைத்துவ மூலோபாயங்களை அறிமுகப்படுத்துதல்.
- பயிற்சி பெறுனர்களைப் பயிற்றுவித்தல் (தொழில் முயற்சி அபிவிருத்தி மற்றும் முகாமைத்துவ மதியுரை)

- உள்நாட்டுக் கைத்தொழிலாளர்களுக்குத் தொழில்நுட்ப அறிவு மற்றும் தொழில் முயற்சி அனுபவங்களை வழங்குதல்
- காலத்திற்குப் பொருத்தமானதும் முக்கியத்துவம் வாய்ந்ததுமான தொழில் முயற்சிகளைப் பற்றியும் கைத்தொழில் துறைகள் பற்றியும் சிறிய மற்றும் நடுத்தர அளவிலான தொழில் முயற்சியாளர்கள் மற்றும் எதிர்காலத் தொழில் முயற்சியாளர்களுக்கு விழிப்புணர்வூட்டுதல்
- மதியுரை சேவைகள் மற்றும் கைத்தொழில் தகவல்களை வழங்குதல்

**செயற்றிட்டத்தை நடைமுறைப்படுத்தியதன் முன்னேற்றம் - 2016**

| நிறுவனத்தின் குறிக்கோள்களை ஈடேற்றிக் கொள்வதற்காக நிறைவேற்றப்பட்ட செயற்பாடுகள் | அளவுச் சுட்டி | அடைவு | வருமானம் (ரூ.) |
|---|---|---|---|
| தொழில் முயற்சி அபிவிருத்தி மற்றும் விளைத்திறனை மேம்படுத்துதல் பற்றிய பயிற்சி நிகழ்ச்சித் திட்டம் | நிகழ்ச்சித் திட்டங்களின் எண்ணிக்கை | 07 | 394,500 |
| | பங்கேற்றவர்களின் எண்ணிக்கை | 170 | |
| பாடநெறி அபிவிருத்தி | பாட விதானங்களின் எண்ணிக்கை | 07 | - |
| வர்த்தக மற்றும் தொழில்நுட்பப் பயிற்சிகளை வழங்குதல் | நிகழ்ச்சித் திட்டங்களின் எண்ணிக்கை | 15 | 1,047,340 |
| | பங்கேற்றவர்களின் எண்ணிக்கை | 300 | |
| மதியுரை மற்றும் ஆலோசனைகள் | வழங்கப்பட்ட சேவைகளின் எண்ணிக்கை | 50 | - |
| நூலகத் திரட்டினை விருத்தி செய்தல் | நூலகப் புத்தகங்களின் எண்ணிக்கை | 1077 | |
| தரவுக் களஞ்சியத்தைப் பேணி வருதல் (இடைப் போக்கிலுள்ள/ இயந்திர உபகரண/ நூல் பெயர்ப் பட்டியல்) | பதிவுகளின் எண்ணிக்கை | 3121 | |
| இணையத்தின் வாயிலாகச் சேவை வழங்குனர்களைப் பதிவு செய்தல் | சேவை வழங்குனர்களின் எண்ணிக்கை | 2700 | |
| **கைத்தொழில் தகவல்களை விநியோகித்தல்**<br>சேவை பெறுனர்களிடமிருந்து கிடைத்த கோரிக்கைகளை ஈடேற்றுதல் | சேவை வழங்குனர்களின் எண்ணிக்கை | 1322 | **352,624** |
| **வெளியீடுகளை ஆக்குதல்**<br>புதிதாகக் கிடைத்த வெளியீடுகள் | புதிதாகக் கிடைத்த வெளியீடுகளின் எண்ணிக்கை | 12 | |
| செய்திச் சஞ்சிகைகள் | செய்திச் சஞ்சிகைகளின் எண்ணிக்கை | 4 | |

| | | | |
|---|---|---|---|
| காலத்திற்கு ஏற்ற உள்ளடக்கங்கள் | உள்ளடக்கங்களின் எண்ணிக்கை | 12 | |
| பதிய உற்பத்திக் கோப்புகள் | உற்பத்திக் கோப்புகளின் எண்ணிக்கை | 12 | |
| **கைத்தொழில் தகவல்களுக்காகக் கைத்தொழில் அபிவிருத்திச் சபையின் இணையத்தினூடாக இலத்திரனியல் பிரச்சாரம்** | | | |
| புதிதாகக் கிடைத்த வெளியீடுகள் | புதிதாகக் கிடைத்த வெளியீடுகளின் எண்ணிக்கை | 04 | |
| செய்திச் சஞ்சிகைகள் | செய்திச் சஞ்சிகைகளின் எண்ணிக்கை | 12 | |
| காலத்திற்கு ஏற்ற உள்ளடக்கங்கள் | உள்ளடக்கங்களின் எண்ணிக்கை | 12 | |
| **இணையப் பக்கங்களைத் தயாரித்தல் மற்றும் இற்றைப் படுத்துதல்** | | | |
| புதிய இணையத்தளப் பக்கங்களின் எண்ணிக்கை | உள்ளடக்கப் பக்கங்களின் எண்ணிக்கை | 64 | |
| இற்றைப்படுத்தப்பட்ட இணையத்தளப் பக்கங்களின் எண்ணிக்கை | ஆவணங்களின் எண்ணிக்கை | 130 | |

# 4.9 தொழில்நுட்ப சேவைப் பிரிவு (TSD)

இலங்கையிலுள்ள கைத்தொழில் சமுதாயத்தின் தொழில்நுட்பத் தேவைகளைத் தொழில்நுட்ப சேவைப் பிரிவு பூர்த்தி செய்து தரும். தொழில்நுட்ப சேவைப் பிரிவு கைத்தொழில் அபிவிருத்திச் சபையின் பிரதான பிரிவுகளில் ஒன்றாகும். கைத்தொழிலாளர்களுக்குத் தொழில்நுட்ப உதவியினை வழங்குதல் தொழில்நுட்ப சேவைப் பிரிவின் அடிப்படை நோக்காகும். இதற்கு மேலதிகமாக ஏற்கெனவே உள்ள தொழில் முயற்சிகளை விரிவாக்குதல், நவீன மயப்படுத்துதல், பல்வகைமைப்படுத்துதல் மற்றும் தரத்தினையும் விளைத்திறனையும் முன்னேற்றுதல் போன்றவற்றுக்குத் தேவையான தொழில்நுட்ப உதவியினை வழங்குவதும் இப்பிரிவின் ஏனைய குறிக்கோள்களாகும். தொழில்நுட்ப சேவைப் பிரிவினால் வழங்கப்படுகின்ற சேவைகள் உணவு, இரசாயனப் பொருட்கள், எண்ணெய் மற்றும் நார்கள், கட்டிடப் பொருட்கள், கணணித் தொழில்நுட்பம் போன்ற 5 உப பிரிவுகள் ஊடாக மேற்கொள்ளப்படுகின்றது. தொழில்நுட்ப உதவியினை வழங்குதல் பிரதானமாக முறையான முறையில் திட்டமிடப்பட்ட நடைமுறை சார்ந்த விடயமொன்றைக் கொண்ட தொழில்நுட்பத்தை வழங்கும் செயலமர்வுகள் ஊடாக மேற்கொள்ளப்படுகின்றது.

➢ **சேவை வழங்குனர்களின் தேவைக்கேற்ப பயிற்சி நிகழ்ச்சித் திட்டங்களை நாடத்துதல்**

**தேசியப் பசுமை அறிக்கையிடல் முறைமைகள் பற்றி விழிப்புணர்வூட்டும் அமர்வு**

இலங்கைக் கைத்தொழில் அபிவிருத்திச் சபையின் தொழில்நுட்ப சேவைப் பிரிவு மகாவலி அபிவிருத்தி மற்றும் சுற்றாடல் அமைச்சுடன் இணைந்து உற்பத்தித் துறையிலுள்ள கைத்தொழிலாளர்களுக்கான "தேசியப் பசுமை அறிக்கையிடல் முறைமைக்குள் பதிவு செய்து கொள்வதற்கும் விழிப்புணர்வூட்டுவதற்குமான அமர்வு" பற்றிய செயலமர்வு 2010 ஆகஸ்ட் 31ஆம் திகதி இராஜகிரியவில் அமைந்துள்ள இலங்கை மத்திய வங்கியின் கேட்போர் கூடத்தில் வெற்றிகரமாக நடாத்தப்பட்டது.

கைத்தொழில் அபிவிருத்திச் சபை கைத்தொழிலாளர்களினால் சமர்ப்பிக்கப்படுகின்ற பசுமை அறிக்கைகளை உறுதி செய்வதற்கும் அவற்றை ஆராய்ந்து பார்ப்பதற்கும் ஆற்றலைக் கொண்ட வெளி நிறுவங்களில் ஒன்றாகும். இந்நிகழ்ச்சித் திட்டத்தில் 45 கைத்தொழிலாளர்கள் பங்கேற்றதோடு தேசியப் பசுமை அறிக்கையிடல் முறைமையினை நடைமுறைப்படுத்துவதற்கு 28 கம்பனிகள் தங்களைப் பதிவு செய்து கொண்டன. மேலும், இந்நிகழ்ச்சித் திட்டத்தினூடாகக் கைத்தொழில் அபிவிருத்திச் சபையின் பிராந்திய அலுவலக உத்தியோகத்தர்களுக்கு விழிப்புணர்வும் வழங்கப்பட்டது.

இந்த அமர்வில் நிலைபேறான நுகர்வு மற்றும் உற்பத்தி அணுகுமுறை ஒன்றைப் பின்பற்றுவதற்கான சந்தர்ப்பங்கள், நிலைபேறான நுகர்வு மற்றும் உற்பத்தி அணுகுமுறைக்கான தனியார் துறையின் பணி, பூச்சியக் கழிவு எண்ணக்கரு, சுற்றாடல் பாதுகாப்பு உரிமங்களின் முக்கியத்துவம், தேசியப் பசுமை அறிக்கையிடலுக்கான வழிகாட்டுதல்கள் ஆகிய துறைகள் உள்வாங்கப்பட்டன.

➢ **பாடசாலை ஆசிரியர்களுக்கான பயிற்சி நிகழ்ச்சித் திட்டம்**

பிலியந்தலைக் கல்வி வலயத்திலுள்ள 32 ஆசிரியர்களைக் கொண்ட குழு ஒன்றுக்கு 2016 நவம்பர் 28ஆம் திகதி இப்பயிற்சி நிகழ்ச்சித் திட்டம் நடாத்தப்பட்டது.

➢ **கைத்தொழிற் சான்றிதழ்ப் பாட நெறிக்கான பயிற்சி நிகழ்ச்சித் திட்டம்**

**"கணணி வன்பொருள் மற்றும் வலையமைப்பு" சான்றிதழ்ப் பாடநெறி**

இளம் தொழில் முயற்சியாளர்களுக்கான கணணி வன்பொருள் மற்றும் வலையமைப்புப் பற்றிய 3 சான்றிதழ்ப் பாடநெறிகள் 2016ஆம் ஆண்டில் நடத்தி முடிக்கப்பட்டன.



**படம் 4.9.1 - கணணி வன்பொருள் ஆய்வுகூடம்**

➢ **“கைகளினால் தயாரிக்கப்படுகின்ற கடதாசித் தொழில்நுட்பம்” பற்றிய சான்றிதழ்ப் பாடநெறி**

அமைச்சின் மாத்தறை உதவிப் பணிப்பாளரின் அலுவலகத்தினால் முன்வைக்கப்பட்ட ஒரு வேண்டுகோளுக்கிணங்க யட்டியணையில் அமைந்துள்ள கைகளினால் மேற்கொள்ளப்படுகின்ற கடதாசித் தொழிற்சாலை ஒன்றின் ஊழியர்களுக்கு கைகளினாலான கடதாசித் தொழில்நுட்பம் பற்றிய சான்றிதழ்ப் பாட நெறியொன்று 2016 யூன் 20ஆம் திகதி முதல் 24ஆம் திகதி வரையிலும் 2016 யூன் 27ஆம் திகதி முதல் ஜூலை 1ஆம் திகதி வரையிலும் நடாத்தப்பட்டது.

➢ **உற்பத்தி அபிவிருத்தி பற்றிய ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்திப் பணிகள்**

இயற்கைச் சீனிப் பதிலீடு மற்றும் வல்லாரை மாவினைப் பயன்படுத்தித் தாவரச் சாற்றிலான நுளம்புகளை விரட்டியடிக்கும் ஜெலிக் கட்டிகளை உற்பத்தி செய்வதற்கான விஞ்ஞானகூடப் பரீட்சார்த்த நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன.

➢ **தொழில்நுட்பத்தை வழங்கும் செயலமர்வு மற்றும் செயன்முறை விளக்க நிகழ்ச்சித் திட்டங்களை நடாத்தும் செயலமர்வுகள்**

உணவு, இரசாயனப் பொருட்கள், எண்ணெய் மற்றும் நார் மற்றும் கட்டிடப் பொருட்கள் ஆகிய துணைப் பிரிவுகளுக்கான தொழில்நுட்பத்தை வழங்கும் 87 செயலமர்வுகள் நடாத்தப்பட்டதுடன் இந்நிகழ்ச்சித் திட்டங்களில் 1914 தொழில் முயற்சியாளர்கள் பங்கேற்றனர்.



**படம் 4.9.2 - தொழில்நுட்பத்தை வழங்கும் செயலமர்வுகள்**

**செயன்முறை நிகழ்ச்சித் திட்டம்**

குழுவொன்றுக்கு 15 தொழில் முயற்சியாளர்கள் வீதம் உள்ளடக்கப்பட்டு 5 தொழில்நுட்பத்தை வழங்கும் செயன்முறை நிகழ்ச்சித் திட்டங்கள் நடத்தப்பட்டன.

**விசேட மதியுரை சேவைகளை வழங்குதல்**

இவ்வருடத்திற்குள் தனியார் தொழில் முயற்சியாளர்களுக்கான விசேட மதியுரை சேவைகள் வழங்கப்பட்டன. இதற்கு மேலதிகமாகக் கைத்தொழில் துறையின் நிபுணர் ஒருவரினால் பின்வரும் தொழில்நுட்பங்களை வழங்கும் ஒரு நாள் செயலமர்வு நடாத்தப்பட்டது.

- உடனடிக் கேக் கலவை
- உடனத் தோசை மற்றும் வடைக் கலவை
- உடனடி அப்பக் கலவை

2016ஆம் ஆண்டில் இப்பிரிவினால் ஈட்டப்பட்ட வருமானம்

| இல. | செயற்பாடு | வருமானம் (ரூ.) |
|---|---|---|
| 01 | தொழில்நுட்பத்தை வழங்கும் செயலமர்வு | 4,815,585.00 |
| 02 | உற்பத்தி மாதிரிகள் | 33,500.00 |
| 03 | விசேட மதியுரை சேவைகள் | 5,500.00 |
| 04 | சான்றிதழ்ப் பாடநெறி | 708,600.00 |
| 05 | போரோன் திறன் விற்பனை | 33,250.00 |
| 06 | பசுமை அறிக்கைகளை உறுதிப்படுத்துதல் | 6,000.00 |
| | **மொத்த வருமானம்** | **5,602,435.00** |



## 4.10 தோல் பொருள் உற்பத்தி மற்றும் பாதணி அபிவிருத்தி நிலையம் (CDLPF)

இலங்கையில் தோற் பொருள் உற்பத்தி மற்றும் பாதணிக் கைத்தொழில் துறையை விருத்தி செய்வதற்காக 1998ஆம் ஆண்டில் தோல் பொருள் உற்பத்தி மற்றும் பாதணி அபிவிருத்தி நிலையம் தாபிக்கப்பட்டது. இந்நிலையத்தினால் கட்டுப்பத்தவில் அமைந்துள்ள அதன் தலைமை நிலையத்திலும் வாரியபொல மற்றும் விதாரன்தெனிய ஆகிய நகரங்களிலுள்ள பிராந்திய நிலையங்களிலும் குறுங்கால மற்றும் நீண்டகாலப் பாடநெறிகளை நடாத்துதல், ஊழியர்களைப் பயிற்றுவித்தல், பொருத்தமான தொழில்நுட்பத் தகவல்களை வழங்குதல், பாதணி மற்றும் தோற்பொருள் உற்பத்திக்குத் தேவையான வசதிகளை வழங்குதல் போன்ற சேவைகள் வழங்கப்படுகின்றன.

**இந்நிலையத்தினால் வழங்கப்படுகின்ற சேவைகள் பின்வருமாறு**:

- பாதணி தொடர்பான தொழில்நுட்பத்தை வழங்கும் செயலமர்வுகளை நடாத்துதல்
- தோல் பொருட்கள் தொடர்பான தொழில்நுட்பத்தை வழங்கும் செயலமர்வுகளை நடாத்துதல்
- பாதணி வடிவமைத்தல் மற்றும் அலங்காரம்
- புதிய உற்பத்தி மற்றும் உற்பத்தி விருத்தி தொடர்பான புத்தாக்கக் கருத்துக்கள் மற்றும் தகவல்களை வழங்குதல்
- வர்த்தக மற்றும் இயந்திர உபகரணத் தகவல்களை வழங்குதல்
- அடிப்படை இடர்நிலைகளைக் குறைத்துக் கொள்வதற்கான சலுகை விலையின் கீழ் சேவைகளை வழங்குதல்
- கைத்தொழிலுக்குப் பயிற்றப்பட்ட ஊழியத்தை வழங்குதல்
- பயிற்றப்பட்ட மற்றும் திறன் அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டங்களை நடத்துதல்:
    - வடிவமைத்தல் மற்றும் அலங்காரம்
    - பாதணிகளின் மேற் பாகம்
    - தோல் வெட்டுதல்
    - மகளிர் பாதணி உற்பத்தி
    - ஆண்கள் பாதணி உற்பத்தி
    - தோல் பொருட்கள் உற்பத்தி

**நிலையத்தினால் பின்வரும் வசதிகளைப் பெற்றுக்கொள்ள முடியும்.**

- தோல் வெட்டும் இயந்திரம்
- பிளக்கும் இயந்திரம்
- தோல் வார்களை வெட்டும் இயந்திரம்
- வடிவங்களை வெட்டும் இயந்திரம்
- அமுக்கக் கருவி மற்றும் திரவங்களைத் தெளிக்கும் அறை
- மெருகூட்டல் மற்றும் முடிவாக்கல் இயந்திரங்கள்
- பாதணிகளின் அடித்தோலை அழுத்தும் இயந்திரம்
- செயற்படுத்தல் இயந்திரம்

## இந்தப் பிரிவினால் நடைமுறைப்படுத்தப்படுகின்ற விசேட செயற்பாடுகள்

அரச மற்றும் அரச சார்பற்ற அமைப்புக்களின் நிதி வழங்குதலின் கீழ் பின்வரும் மாவட்டங்களில் பாதணி மற்றும் தோற் பொருள் உற்பத்தி தொடர்பிலான தொழில்நுட்பத்தை வழங்கும் நிகழ்ச்சித் திட்டங்கள் நடாத்தப்பட்டன. அம்பாறை, அநுராதபுரம், பதுளை, காலி, அம்பாந்தோட்டை, யாழ்ப்பாணம், மாத்தறை, மட்டக்களப்பு, பொலன்னறுவை மற்றும் வவுனியா ஆகிய இடங்களில் இவை நடாத்தப்பட்டன. இப்பயிற்சி நிகழ்ச்சித் திட்டங்களில் பெரும்பாலானவை பிராந்திய அபிவிருத்திப் பிரிவின் ஒருங்கிணைப்பின் கீழ் நடாத்தப்பட்டன.

1. அரச மற்றும் அரச சார்பற்ற நிறுவனங்களின் நிதியுதவியின் கீழ் நாடளாவிய ரீதியிலுள்ள 311 தொழில் முயற்சியாளர்களுக்காகப் பணியாளர்களின் ஆற்றலை முன்னேற்றுதல் மற்றும் சுய தொழில் கருத்திட்டங்களை ஆரம்பிப்பதற்கான 15 நிகழ்ச்சித் திட்டங்கள் நடாத்தப்பட்டதுடன் அதனூடாக ரூபாய் 2,184,638 வருமானமாக ஈட்டிக்கொள்ளப்பட்டது.
2. பாதணி உற்பத்தித் தொழிலில் ஈடுபடுகின்ற 94 தொழில் முயற்சியாளர்களுக்குப் பாதணிகளை வடிவமைத்தல் மற்றும் அலங்கரித்தல் மற்றும் உற்பத்தித் தரத்தினை மேம்படுத்துதல் போன்றவற்றுக்காக வேண்டுகோள்களின் அடிப்படையில் 7 பயிற்சி நிகழ்ச்சிகள் நடாத்தப்பட்டன. இந்நிகழ்ச்சிகளின் ஊடாக பாதணி உற்பத்தித் துறையில் புதிய வடிவமைப்பினைத் தயாரிப்பதற்கும் பாதணிகளை உருவாக்குவதற்கும் தொழில்நுட்பத் திறன்களுடன் கூடிய உயர்ந்த தேர்ச்சியினைக் கொண்ட 32 வடிவமைப்புக் கலைஞர்களை உருவாக்குவதற்கு இப்பிரிவிற்கு ஆற்றல் கிட்டியதுடன் இந்நிகழ்ச்சித் திட்டத்தின் ஊடாக பெற்றுக்கொள்ளப்பட்ட வருமானம் 539,000 ரூபாய் ஆகும்

   பாதணி உற்பத்தித் துறையில் 85 கைத்தொழிலாளர்களுக்குப் பாதணி மற்றும் தோற் பொருள் தொடர்பிலான 10 நிகழ்ச்சித் திட்டங்கள் நடாத்தப்பட்டதுடன் அக்கைத்தொழிலாளர்களின் அறிவினை மேம்படுத்தும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன.
3. கைத்தொழில் மற்றும் வாணிப அமைச்சு, பொருளாதார அபிவிருத்தி பற்றிய தேசியக் குழு, இலங்கை ஏற்றுமதி அபிவிருத்திச் சபை, தேசியப் பயிலுனர் மற்றும் தொழில்நுட்பப் பயிற்சி அதிகார சபை, இலங்கைத் தரக்கட்டுப்பாட்டு நிறுவனம் ஆகியவற்றுடன் இணைந்து பல்வேறு குழுக்களின் கொள்கை வகுக்கும் செயன்முறையில் பங்கேற்றுச் சபையின் பங்களிப்பு வழங்கப்பட்டுள்ளது. இவ்வாலோசனைக் குழுவினால் இந்நாட்டுப் பாதணிகள் மற்றும் தோற் பொருட்கள் உற்பத்தித் துறையின் அபிவிருத்திக்காக முன்மொழிவுகள் சமர்ப்பிக்கப்பட்டுள்ளன.
4. பல்வேறு அரச நிறுவனங்களின் பாதணிகள் மற்றும் தோற் பொருட்கள் தேவைகளுக்கேற்ப கொள்வனவுகளின் போது அவற்றுக்கான தொழில்நுட்ப மதிப்பீட்டுக் குழுக்களில் பங்கேற்றல்.
5. கல்வி அமைச்சினால் நடாத்தப்படுகின்ற பாடசாலை மாணவர்களுக்குப் பாதணிகளை நன்கொடையாக வழங்கும் தேசிய நிகழ்ச்சித் திட்டச் செயன்முறையின் போது தொழில்நுட்பப் பிரிவினால் ஒத்துழைப்பு வழங்கப்பட்டுள்ளது.

6. கட்புல மற்றும் அரங்கேற்றக் கலைப் பல்கலைக்கழகம் மற்றும் மொரட்டுவப் பல்கலைக்கழகம் ஆகியவற்றில் வடிவமைப்புக் கலையினைக் கற்கும் பல்கலைக்கழக மாணவர்களின் அனுபவத்துடன் கூடிய நடைமுறை ரீதியிலான கருத்திட்டங்களை மேற்கொள்வதற்கு அப்பிள்ளைகளுக்குத் தேவையான வசதிகள் வழங்கப்பட்டன. இது இளம் பட்டதாரிகளை இத்துறைக்கு ஈர்த்துக் கொள்வதற்கு உந்துசக்தியாக அமைந்திருக்கின்றது.

7. கைத்தொழில் அபிவிருத்திச் சபையின் கீழ்ப் பயிற்சி பெற்றுப் பாதணிக் கைத்தொழிலை ஆரம்பிப்பதற்கு ஆர்வமுடன் உள்ள தொழில் முயற்சியாளர்களின் அடிப்படை இடர்களைக் குறைத்துக் கொள்வதற்குச் சில வசதிகள் வழங்கப்பட்டுள்ளன. அவ்வாறு வசதிகள் வழங்குதல் தொழில் முயற்சியாளர்களின் ஆரம்பக் கட்ட முதலீட்டில் ஏற்படக்கூடிய இடர் நிலையைக் குறைத்துக் கொள்வதற்கும் சந்தைப்படுத்துவதற்கும் உற்பத்தியினை விருத்தி செய்வதற்கும் உதவியாக அமைகின்றது.

8. இலங்கையிலுள்ள பாதணி மற்றும் தோற் பொருள் உற்பத்தியாளர்கள் மற்றும் பயிற்சி நிறுவனம் பற்றிய தரவுத் தளமொன்றைப் பேணி வருதல்.

9. வெங்களோசெட்டிக்குளம் பிரதேச செயலாளர் பிரிவின் நிதியுதவியின் கீழ் வவுனியா மற்றும் மன்னார் ஆகிய மாவட்டங்களில் பனை மற்றும் இயற்கைத் தோல் கலவையுடன் கூடிய பைகளை உற்பத்தி செய்தல் பற்றிய நிகழ்ச்சி ஒன்று நடாத்தப்பட்டது. உல்லாசப் பிரயாணிகளை ஈர்த்துக் கொள்வதற்குப் பொருட்களை உற்பத்தி செய்தல் மற்றும் அவற்றின் தரத்தினை மேம்படுத்துதல் இப்பயிற்சி நிகழ்ச்சியின் பிரதான நோக்கமாகும்.

10. சேவையிலிருந்து ஓய்வு பெறுவதற்கு அண்மித்துள்ள இலங்கை இராணுவப் படையைச் சேர்ந்த இராணுவ வீரர்களுக்கான செயலமர்வுகள் மற்றும் கள விஜயங்கள் ஒழுங்கு செய்யப்பட்டன. இந்நிகழ்ச்சியின் அடிப்படை நோக்கங்கள் பின்வருமாறு.

    (அ) அவ்வாறான இராணுவ உத்தியோகத்தர்களின் தொழில்சார் திறனை மேம்படுத்துதல்

    (ஆ) பாதணி மற்றும் தோற் பொருள் உற்பத்திக் கைத்தொழிலில் தொழில் வாய்ப்புக்களை வழங்குதல்

    (இ) அவர்களின் மாதாந்த வருமானத்தைப் பெருக்குதல்

    (ஈ) அவர்களின் தொழில் முயற்சிகளை ஆரம்பிப்பதற்கு அவர்களை ஊக்கப்படுத்துதல்

11. யாழ்ப்பாண மாவட்டச் செயலகத்தின் நிதியுதவியின் கீழ் வாதிரிப் பாதணிக் கிராமத்தின் தொழில் முயற்சியாளர்களை விருத்தி செய்யும் நிகழ்ச்சித் திட்டம் நடாத்தப்பட்டதுடன் வவுனியா தொழிற் பயிற்சி அதிகார சபை மாணவர்களுக்கு கள விஜயங்களை மேற்கொள்வதற்கான வசதிகளும் வழங்கப்பட்டன.

12. அம்பாறை மாவட்த்தில் விசேட உதவிகளைப் பெறுகின்ற பிரசைகளுக்காக பாதணி உற்பத்தி பற்றிய பயிற்சி நிகழ்ச்சி ஒன்று நடாத்தப்பட்டது. அவர்களின் சமூக நிலையை மேம்படுத்துதல் இந்நிகழ்ச்சியின் அடிப்படை நோக்கமாகும்.

13. ரூபாய் 5.0 மில்லியன் நிதித் தொகையினை முதலீடு செய்து அம்பாறை மாவட்டத்தில் அபியா கூட்டுக் கம்பனி எனும் கையுறை உற்பத்திக் கருத்திட்டத்தை நடைமுறைப்படுத்துவதற்கு உதவி வழங்கப்பட்டது. இக்கருத்திட்டத்தின் கீழ் 117 பயனாளிகளுக்குப் பயிற்சி வழங்கப்பட்டதுடன் கைத்தொழில் அபிவிருத்திச் சபையின் நிதி வழங்கலின் கீழ் வீடுகளிலிருந்து கொண்டே துணை ஒப்பந்தங்களை ஆரம்பிக்கப்பதற்குத் தேவையான 117 தையல் இயந்திரங்களை வழங்குவதற்குத் திட்டமிடப்பட்டது.

14. 2016ஆம் ஆண்டு இந்நிலையத்தினால் ஈட்டிக்கொள்ளப்பட்ட மொத்த வருமானம் ரூபாய் 5,259,810 ஆகும்.



# நிதிக் கூற்றுகள்

- விரிவான நிதி நிலைமை பற்றிய கூற்று
- விரிவான வருமானக் கூற்று
- உரிமைப் பங்கிலான மாற்றம் பற்றிய கூற்று
- காசுப் பாய்வுக் கூற்று
- முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளும் ஏனைய தெளிவு படுத்தல் தகவல்களும்

# இலங்கை கைத்தொழில் அபிவிருத்தி அதிகாரசபை

## 2016 டிசெம்பர் 31 ஆம் திகதியில் நிதியியல் நிலவரம் பற்றிய விரிவான கூற்று

(அனைத்தும் இலங்கை ரூபாய்களில் காட்டப்பட்டுள்ளது)

| சொத்துக்கள் | குறிப்பு | 2016 | 2015 |
|---|---|---|---|
| **நடைமுறையல்லாத சொத்துக்கள்** | | | |
| ஆதனங்கள், இயந்திரத்தொகுதிகள் மற்றும் உபகரணங்கள் | 14 | 1,350,056,061 | 1,297,336,805 |
| நடைபெற்றுவரும் மூலதனசார் வேலைகள் | | 19,280,725 | 18,321,826 |
| நிலையான வைப்புகள் | 15 | 54,003,793 | 25,000 |
| | | 1,423,340,579 | 1,315,683,630 |
| **நடைமுறை சொத்துக்கள்** | | | |
| பொருட்பதிவேடுகள் (இருப்புகள் மற்றும் நடைபெற்றுவரும்வேலைகள்) | 16 | 30,900,030 | 34,375,687 |
| வியாபாரம் மற்றும் ஏனைய வருமதியானவை (கடன்பட்டோர்) | 17 | 26,035,847 | 33,568,714 |
| ஏனைய நடைமுறை சொத்துக்கள் | 18 | 77,333,136 | 84,877,704 |
| முன்கொடுப்பனவுகள் | 19 | 8,860,797 | 16,272,206 |
| விசேட கருத்திட்டத்திற்கான கொடைகள் | 20 | - | 36,509,324 |
| காசு மற்றும் காசுக்கு சமமாவைகள் | 21 | 194,895,214 | 95,662,065 |
| | | 338,025,024 | 301,265,699 |
| **மொத்த சொத்துக்கள்** | | 1,761,365,603 | 1,616,949,329 |
| **உரிமைப்பங்குகள் மற்றும் பொறுப்புகள்** | | | |
| **மூலதனமும் ஒதுக்கங்களும்** | | | |
| தேறிய அரச கொடைகள் | 22 | 282,787,422 | 277,910,082 |
| முலதன ஒதுக்கங்கள் | | 6,243,013 | 6,243,013 |
| மாற்றப்பட்ட சொத்துக்களின் பெறுமதி | 23 | 13,447,061 | 13,447,061 |
| நிலையானசொத்துக்களின் மீள்கணிப்பு மீதான மிகை | 24 | 961,817,782 | 999,334,417 |
| ஏனைய அரச கொடைகள் | 25 | 357,657,514 | 165,498,934 |
| | | 1,621,952,792 | 1,462,433,506 |
| அரச கொடைகள் | | 1,930,291,117 | 1,930,291,117 |
| ஒட்டுமொத்த நட்டம் | 26 | (2,154,331,321) | (2,175,923,391) |
| | | (224,040,204) | (245,632,274) |
| மொத்த உரிமைப்புங்குகள் | | 1,397,912,588 | 1,216,801,232 |
| **நடைமுறையல்லாத பொறுப்புகள்** | | | |
| பணிக்கொடைக்கான ஒதுக்கீடுகள் | 27 | 137,072,925 | 155,623,529 |
| விசேட கருத்திட்டத்திற்கான கொடைகள் | 28 | 20,863,915 | 71,715,838 |
| கூட்டுத்தாபனத்திற்கு கிடைக்கவேண்டியவைகள் | 29 | 12,939,579 | 32,348,955 |
| | | 170,876,419 | 259,688,322 |
| **நடைமுறைப் பொறுப்புக்கள்** | | | |
| அரசிற்குசெலுத்வேண்டியவைகள் | 30 | 83,814 | 80,114 |
| கூட்டுத்தாபனத்திற்கு கிடைக்கவேண்டியவைகள் | 31 | 27,097,701 | 26,130,935 |
| வங்கிக் கடன் மீதி | 21 | 42,376,612 | 1,146,939 |
| ஒதுக்கீடுகளும் அட்டுறுசெலவுகளும் | 32 | 123,018,469 | 113,101,787 |
| | | 192,576,596 | 140,459,775 |
| | | 1,761,365,603 | 1,616,949,329 |

**பணிப்பாளர் (நிதி) - A.W.G. குருகே**

**"பக்கம் இல 05 முதல் 12வரையிலான கணக்கீட்டுக்கொளகைகளும் பக்கம் இல 13 முதல் 22 வரையிலான குறிப்புகள் இக்கூற்று முழமைமைடைவதற்கு தேவையான பகுதியாகும். இந்த நிதிக்கூற்றனை தயாரித்தல் மற்றும் சமர்ப்பித்தலின் பொறுப்பு பணிப்பாளர் சபையை சாரும்.**

**மஹிந்த ஜினசேன** — **தலைவர்**

ஷாமின் பெரேரா — **பணிப்பாளர் சபை உறுப்பினர்**

# இலங்கை கைத்தொழில் அபிவிருத்தி அதிகாரசபை

2016 டிசெம்பர் 31 ஆம் திகதியுடன் நிறைவுபெறும் ஆண்டுக்கான விரிவான வருமானக் கூற்று

**(அனைத்து பணத் தொகையும் இலங்கை ரூபாவில் தரப்பட்டுள்ளது)**

| | குறிப்பு | 2016 | 2015 |
| கிரயம் | 767,716,095 | - | 457,488,060 | (0) | - | 228,842,382 | 0 |
| மீள்மதிப்பீடு மீள்மதிப்பீடு | - | - | - | 45,671,000 | 1,213,500 | - | 5,657,000 |
| திரண்ட தேய்மானம் | (4,348,408) | - | (46,765,844) | - | - | (228,842,385) | - |
| **தேறிய புத்தகத் தொகை** | **763,367,687** | **-** | **410,722,216** | **45,671,000** | **1,213,500** | **(3)** | **5,657,000** |
| **2016 டிசம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டு** | | | | | | | |
| தொடக்க தேறிய புத்தக பெறுமதி/ மீள்மதிப்பிடப்பட்ட தொகை | 763,367,687 | - | 410,722,216 | 45,671,000 | 1,213,500 | (3) | 5,657,000 |
| முன்னைய ஆண்டின் சீராக்கங்கள் (கிரயம்) | - | - | 7,751,162 | (592,480) | - | - | 717,994 |
| முன்னைய ஆண்டிற்கான சீராக்கங்கள் (திரண்ட தேய்மானம்) | - | (4,835,176) | (105,649) | - | - | - | (2,560) |
| முன்னைய ஆண்டின் சீராக்கங்களின் பின்னர் தேறிய புத்தக தொடக்க பெறுமதி | 763,367,687 | (4,835,176) | 418,367,728 | 45,078,520 | 1,213,500 | (3) | 6,372,434 |
| சேர்ந்தவைகள் | - | 50,850,394 | 1,008,999 | 9,922,229 | - | - | 6,536,106 |
| அகற்றப்பட்டவை | - | - | - | - | - | - | (22,568) |
| தேய்மானக் கட்டணம் (குறிப்பு 9) | - | (3,967,742) | (5,188,500) | (2,427,088) | (191,737) | - | (2,459,037) |
| மீள்மதிப்பீட்டு தேய்மானம் | - | (2,287,500) | (6,444,924) | - | - | - | - |
| அகற்றப்பட்ட சொத்துக்களுக்கான திரண்ட தேய்மானம் | - | - | | - | - | - | 2,257 |
| **இறுதி தேறிய புத்தகத் தொகை** | **763,367,687** | **39,759,977** | **407,743,302** | **52,573,661** | **1,021,763** | **(3)** | **10,429,191** |
| **2016 டிசெம்பர் 31 இல் உள்ளவாறு** | | | | | | | |
| கிரயம் | 767,716,095 | 50,850,394 | 466,248,221 | 55,000,749 | 1,213,500 | 228,842,382 | 12,888,531 |
| திரண்ட தேய்மானம் | (4,348,408) | (11,090,418) | (58,504,918) | (2,427,088) | (191,737) | (228,842,385) | (2,459,340) |
| **தேறிய புத்தகத் தொகை** | **763,367,687** | **39,759,977** | **407,743,302** | **52,573,661** | **1,021,763** | **(3)** | **10,429,191** |

(அனைத்து பணத் தொகையும் இலங்கை ரூபாவில் தரப்பட்டுள்ளது)

14 31/12/2016 திகதியில் உள்ளவாறு ஆதனம், இயந்திரத்தொகுதிகள் மற்றும் உபகரணங்கள்

| | ஆய்வுகூட உபகரணம் | பயணப் பைகள் | தளபாடம் பொருத்திகள் | சைக்கிள் கிரயம் | கருவிகளும் உதிரிப்பாகங்களும் | நூலகப் புத்தகங்கள் | PABX சேவைகள் | பயன்பாட்டு சேவைகள் |
|---|---|---|---|---|---|---|---|---|
| **2015 டிசெம்பர் 31 ஆம் திகதியுடன் முடிவடைந்த ஆண்டு** | | | | | | | | |
| தேறிய புத்தக தொடக்கப் பெறுமதி | 259,285 | 37,094 | 4,902,969 | 60,103 | 219,796 | 1,695,231 | 1,043,960 | 1,364,795 |
| முன்னைய ஆண்டுக்கான சீராக்கங்கள் | - | - | - | - | - | (500,369) | 2,000 | - |
| முன்னைய ஆண்டுக்கான சீராக்கங்களின் பின்னர் தேறிய புத்தக தொடக்கப் பெறுமதி | 259,285 | 37,094 | 4,902,969 | 60,103 | 219,796 | 1,194,862 | 1,045,960 | 1,364,795 |
| குறித்த காலத்தில் சேர்ந்தவைகள் | 2,706,555 | 36,200 | 1,482,326 | 13,063 | 761,173 | 168,463 | 94,000 | - |
| அகற்றப்பட்டவை | - | - | - | (17,425) | - | - | - | - |
| தேய்மானக் கட்டணம் (குறிப்பு 9) | (275,328) | (20,781) | (1,124,472) | (10,762) | (177,272) | (820,223) | (279,484) | (327,848) |
| சொத்து மீள்மதிப்பீட்டு கணக்கிற்கு மாற்றப்பட்ட தேறிய புத்தகப் பெறுமதி | (2,690,512) | - | (5,260,823) | (62,404) | (803,698) | - | - | - |
| அகற்றப்பட்ட சொத்துக்களுக்கான திரண்ட தேய்மானம் | - | - | - | 17,425 | - | - | - | - |
| மீள்மதிப்பீடு | - | - | 5,456,750 | 250,000 | - | - | - | - |
| **இறுதி தேறிய புத்க்கத் தொகை** | **-** | **52,513** | **5,456,750** | **250,000** | **-** | **543,102** | **860,476** | **1,036,947** |
| **2015 டிசெம்பர் 31 இல் உள்ளவாறு** | - | | | | | | | |
| கிரயம் கிரயம் | - | 1,271,005 | (0) | - | - | 12,196,081 | 4,308,731 | 15,864,011 |
| மீள்மதிப்பீடு மீள்மதிப்பீடு | - | - | 5,456,750 | 250,000 | - | - | - | - |
| திரண்ட தேய்மானம் | - | (1,218,492) | - | - | - | (11,652,979) | (3,448,255) | (14,827,064) |
| **தேறிய புத்தகத் தொகை** | **-** | **52,513** | **5,456,750** | **250,000** | **-** | **543,102** | **860,476** | **1,036,947** |
| **2016 டிசம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டு** | | | | | | | | |
| தொடக்க தேறிய புத்தக பெறுமதி/ மீள்மதிப்பிடப்பட்ட தொகை | - | 52,513 | 5,456,750 | 250,000 | - | 543,102 | 860,476 | 1,036,947 |
| முன்னைய ஆண்டின் சீராக்கங்கள் (கிரயம்) | - | - | - | - | - | 3,500 | - | 91,367 |
| முன்னைய ஆண்டிற்கான சீராக்கங்கள் (திரண்ட தேய்மானம்) | - | - | - | - | 929,373 | (875) | 2,000 | (9,821) |
| முன்னைய ஆண்டின் சீராக்கங்களின் பின்னர் தேறிய புத்தக தொடக்க பொறுமதி | - | 52,513 | 5,456,750 | 250,000 | 929,373 | 545,727 | 862,476 | 1,118,493 |
| சேர்ந்தவைகள் | 6,055,545 | 22,800 | 2,407,130 | - | 876,769 | 697,667 | - | 5,845,151 |
| அகற்றப்பட்டவை | | (2,400) | (274,700) | - | - | - | - | - |
| தேய்மானக் கட்டணம் (குறிப்பு 9) | (816,319) | (24,660) | (1,217,424) | (9,724) | (562,065) | (290,072) | (271,109) | (356,875) |
| மீள்மதிப்பீட்டு தேய்மானம் | - | - | - | - | - | - | - | - |
| அகற்றப்பட்ட சொத்துக்களுக்கான திரண்ட தேய்மானம் | - | 993 | - | - | - | - | - | - |
| **இறுதி தேறிய புத்க்கத் தொகை** | **5,239,226** | **49,246** | **6,371,756** | **240,276** | **1,244,077** | **953,322** | **591,367** | **6,606,768** |
| **2016 டிசெம்பர் 31 இல் உள்ளவாறு** | | | | | | | | |
| கிரயம் | 6,055,545 | 1,291,405 | 7,589,180 | 250,000 | 1,806,142 | 12,897,248 | 4,308,731 | 21,800,528 |
| திரண்ட தேய்மானம் | (816,319) | (1,242,159) | (1,217,424) | (9,724) | (562,065) | (11,943,926) | (3,717,364) | (15,193,760) |
| **தேறிய புத்தகத் தொகை** | **5,239,226** | **49,246** | **6,371,756** | **240,276** | **1,244,077** | **953,322** | **591,367** | **6,606,768** |

## கைத்தொழில் அபிவிருத்தி சபை

## நிதிக்கூற்றுகளுக்கான குறிப்புகள் (தொடர்ச்சி)

(அனைத்து பணத் தொகையும் இலங்கை ரூபாவில் தரப்பட்டுள்ளது)

14 31/12/2016 திகதியில் உள்ளவாறு ஆதனம், இயந்திரத்தொகுதிகள் மற்றும் உபகரணங்கள்

| | பலவின சொத்துக்கள் | கணனி தொடர்பாடல் உபகணரங்கள் | கணனி மென்பாகம் | மோட்டார் வாகனங்கள் | மொத்தம் |
|---|---|---|---|---|---|
| **2015 டிசெம்பர் 31 ஆம் திகதியுடன் முடிவடைந்த ஆண்டு** | | | | | |
| தேறிய புத்தக தொடக்கப் பெறுமதி | 1,743,674 | 9,796,306 | (0) | 39,550,000 | **1,183,148,184** |
| முன்னைய ஆண்டுக்கான சீராக்கங்கள் | 10,524 | (3,210) | - | - | **2,129,307** |
| முன்னைய ஆண்டுக்கான சீராக்கங்களின் பின்னர் தேறிய புத்தக தொடக்கப் பெறுமதி | 1,754,198 | 9,793,096 | (0) | 39,550,000 | **1,185,277,491** |
| குறித்த காலத்தில் சேர்ந்தவைகள் | 1,542,646 | 4,987,409 | - | - | **98,634,320** |
| அகற்றப்பட்டவை | - | (7,088,832) | - | - | **(10,694,019)** |
| தேய்மானக் கட்டணம் (குறிப்பு 9) | (355,843) | (3,845,927) | - | (7,910,000) | **(32,771,415)** |
| சொத்து மீள்மதிப்பீட்டு கணக்கிற்கு மாற்றப்பட்ட தேறிய புத்தகப் பெறுமதி | (2,941,001) | (10,934,577) | 0 | (20,324,000) | **(63,241,457)** |
| அகற்றப்பட்ட சொத்துக்களுக்கான திரண்ட தேய்மானம் | - | 7,088,832 | - | - | **10,694,019** |
| மீள்மதிப்பீடு | 1,702,205 | 7,487,409 | - | 42,000,000 | **109,437,864** |
| **இறுதி தேறிய புத்தகத் தொகை** | **1,702,205** | **7,487,409** | **-** | **53,316,000** | **1,297,336,805** |
| **2015 டிசெம்பர் 31 இல் உள்ளவாறு** | | | | | |
| கிரயம் கிரயம் | (0) | (0) | 987,850 | 14,154,501 | **1,502,828,716** |
| மீள்மதிப்பீடு மீள்மதிப்பீடு | 1,702,205 | 7,487,409 | - | 42,000,000 | **109,437,864** |
| திரண்ட தேய்மானம் | - | (0) | (987,850) | (2,838,500) | **(314,929,777)** |
| **தேறிய புத்தகத் தொகை** | **1,702,205** | **7,487,409** | **-** | **53,316,001** | **1,297,336,805** |
| **2016 டிசம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டு** | | | | | |
| தொடக்க தேறிய புத்தக பெறுமதி/ மீள்மதிப்பிடப்பட்ட தொகை | 1,702,205 | 7,487,409 | - | 53,316,001 | **1,297,336,805** |
| முன்னைய ஆண்டின் சீராக்கங்கள் (கிரயம்) | (1,134,974) | - | - | - | **6,836,568** |
| முன்னைய ஆண்டிற்கான சீராக்கங்கள் (திரண்ட தேய்மானம்) | - | (62,489) | - | (13,920,000) | **(18,005,196)** |
| முன்னைய ஆண்டின் சீராக்கங்களின் பின்னர் தேறிய புத்தக தொடக்க பொறுமதி | 567,231 | 7,424,920 | - | 39,396,001 | **1,286,168,174** |
| சேர்ந்தவைகள் | 335,460 | 11,779,375 | 1,008,801 | - | **97,346,425** |
| அகற்றப்பட்டவை | - | - | - | - | **(299,668)** |
| தேய்மானக் கட்டணம் (குறிப்பு 9) | (216,307) | (3,912,971) | (78,066) | (2,440,000) | **(24,429,696)** |
| மீள்மதிப்பீட்டு தேய்மானம் | - | - | - | - | **(8,732,424)** |
| அகற்றப்பட்ட சொத்துக்களுக்கான திரண்ட தேய்மானம் | - | - | - | - | **3,249** |
| **இறுதி தேறிய புத்தகத் தொகை** | **686,384** | **15,291,324** | **930,735** | **36,956,001** | **1,350,056,060** |
| **2016 டிசெம்பர் 31 இல் உள்ளவாறு** | | | | | |
| கிரயம் | 902,691 | 19,179,534 | 1,996,651 | 56,154,501 | **1,716,992,028** |
| திரண்ட தேய்மானம் | (216,307) | (3,888,210) | (1,065,916) | (19,198,500) | **(366,935,968)** |
| **தேறிய புத்தகத் தொகை** | **686,384** | **15,291,324** | **930,735** | **36,956,001** | **1,350,056,060** |

## இலங்கை கைத்தொழில் அபிவிருத்தி சபை
### நிதிக்கூற்றுக்கான குறிப்புகள் (தொடர்ச்சி)

| 15 | நிலையான வைப்புக்கள் | 2016 | 2015 |
|---|---|---|---|
| | இலங்கை வங்கி -இதம கிளை | 50,025,000 | 25,000 |
| | வருமதியாகவுள்ள நிரந்தர வைப்புக்கான வட்டி | 3,978,793 | - |
| | | **54,003,793** | **25,000** |

| 16 | இருப்பு மற்றும் நடப்பிலுள்ள வேலை | 2016 | 2015 |
|---|---|---|---|
| | எந்திரவியல் மூலப்பொருட்கள் - (தலைமை அலுவலகம்) | 868,765 | 1,054,434 |
| | அச்சு மூலப்பொருட்கள் | 171,729 | 140,668 |
| | எழுதுகருவிகள் | 2,036,129 | 1,890,847 |
| | வேறு மூலப்பொருட்கள் | 2,281,915 | 2,233,136 |
| | கிராம அபிவிருத்தி கருத்திட்ட கையிருப்பு | 11,278,520 | 7,621,843 |
| | துணை களஞ்சியம் - வார்ப்பு வேலைத்தளம் | 3,870,395 | 2,329,633 |
| | துணை களஞ்சியம் - இறப்பர் | 4,218,673 | 4,843,280 |
| | துணை களஞ்சியம் தோற்பொருள் | 352,323 | 144,616 |
| | துணை களஞ்சியம் - சீ.எஸ் சீ.- மாத்தறை | 158,009 | 107,580 |
| | துணை களஞ்சியம் - மின் உலோகமுலாம்பூசல் நிலையம் | 1,258,138 | 947,855 |
| | துணை களஞ்சியம் - ATRDC பன்னல | 892,962 | 1,052,936 |
| | துணை களஞ்சியம் - திவநெகும | 17,000 | 138,555 |
| | துணை களஞ்சியம் - கித்துள் அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டம் | 272,527 | 5,837,942 |
| | பித்ளை நிலையம் - பிலிமத்தலாவ | 129,582 | 178,367 |
| | நடைபெற்றுக்கொண்டிருக்குவேலை - நேரடிப்பொருட்கள் (தலைமை அலு | 1,411,614 | 335,496 |
| | நடைபெற்றுக்கொண்டிருக்குவேலை - நேரடி ஊழியம் | 383,379 | 63,636 |
| | நடைபெற்றுக்கொண்டிருக்குவேலை -பொதுமேந்தலை | 285,120 | 30,418 |
| | நடைபெற்றுக்கொண்டிருக்குவேலை - தொழிற்சலை மேந்தலை | 198,652 | 14,387 |
| | இரும்பல்லாத உலோகக் கழிவு | 3,863,155 | 8,458,614 |
| | அசையா கையிருப்புக்களின் சேதங்களுக்கான ஒதுக்கீடுகள் | (1,584,236) | (1,584,236) |
| | காலாவதியான கையிருப்புக்களின் சேதங்களுக்கான ஒதுக்கீடுகள் | (1,464,321) | (1,464,321) |
| | | **30,900,030** | **34,375,687** |

| 17 | வியாபார மற்றும் ஏனைய வருமதிகள் | 2016 | 2015 |
|---|---|---|---|
| | பலவின கடன்கொடுத்தோர் -தலைமை அலுவலகம் | 264,713 | 264,713 |
| | பலவின கடன்கொடுத்தோர் -தோலபொருள் | 18,270 | 18,270 |
| | பலவின கடன்கொடுத்தோர் -எந்திரவியல் | 604,611 | 604,611 |
| | பலவின கடன்கொடுத்தோர் -எந்திரவியல் வேலைத்தளம் | 19,881,863 | 18,327,913 |
| | பலவின கடன்கொடுத்தோர் -இறப்பர் பிரிவு | 1,612,460 | 1,919,979 |
| | பலவின கடன்கொடுத்தோர் - ATRDC பன்னல | 1,843,934 | 2,147,128 |
| | பலவின் கடன்கொடுத்தோர் - மின் மூலாம்பூசல் நிலையம் | 73,272 | 73,272 |
| | பலவின கடன்கொடுத்தோர் -அச்சு | 374,061 | 374,061 |
| | பலவின கடன்கொடுத்தோர் -மின் | 701,826 | 701,826 |
| | பலவின கடன்கொடுத்தோர் - வார்ப்பு வேலைத்தளம் | 4,739,535 | 4,399,365 |
| | பலவின கடன்கொடுத்தோர் -சிவில் | 2,155,803 | 2,155,803 |
| | பலவின கடன்கொடுத்தோர் -லக்நிபயும் | 42,120 | 42,120 |
| | பலவின கடன்கொடுத்தோர் -C.S.C -மாத்றை | 346,492 | 346,492 |
| | பலவின கடன்கொடுத்தோர் - C.S.C. அநுராதபுரம் | 15,025 | 15,025 |
| | கடனகொடுத்தோர் - மீள அனுப்பிய கசோலைகள் | 209,398 | 209,398 |
| | குத்தகைதாரர் கடன்கொடுத்தோர் | 33,227,904 | 34,342,809 |
| | பலவின கடன்கொடுத்தோர் | 406,707 | 406,707 |
| | | 66,517,993 | 66,349,491 |
| | கழிக்க: அறிவிட முடியா மற்றும் | (40,482,147) | (32,780,778) |
| | | **26,035,847** | **33,568,714** |

# கைத்தொழில் அபிவிருத்தி சபை

## நிதிக்கூற்றுக்கான குறிப்புகள் (தொடர்ச்சி)

### 18 ஏனைய நடைமுறைச் சொத்துக்கள்

| | 2016 | 2015 |
|---|---|---|
| பண்டிகை முற்பணம் | 364,800 | 376,600 |
| மோட்டார்சைக்கிள் கடன் | 333,748 | 803,735 |
| துவிச்சக்கர வண்டிக் கண்டி | 129,254 | 225,254 |
| இடர் கடன் | 39,320,914 | 38,759,161 |
| கழிக்க - தாமத பணியாட்டொகுதி கிரயம் | (37,226,305) | (37,226,305) |
| தயாரிக்கப்பட்ட பணியாளர் கிரயம் ( IFRS சீராக்கங்கள்) | 37,226,305 | 37,226,305 |
| விசேட முற்பணப் புத்தகம் | 11,500 | 12,700 |
| ஏனைய திணைக்களங்களிலிருந்து வருமதியானவை | 421,933 | 454,978 |
| துணை ஒப்பந்த பரிமாற்றம் | 863,057 | 863,057 |
| ஆற்றல் விருத்தி | - | 1,456,826 |
| பிடித்துவைத்தல் வரி | 2,016,777 | 1,679,828 |
| பண்டங்கள்,சேவைகள் வரி ( G S T ) | - | 1,424,654 |
| வருமதியான வற்வரி | 28,944,779 | 25,476,691 |
| உலோகமல்லாத - வற்வரி | - | 10,741,854 |
| கித்துள் - சநதைப்படுத்தல் | 281,675 | 281,675 |
| உலோகமல்லாத கட்டுப்பாட்டுக் கணக்கு | 742,661 | 742,661 |
| லக்கம் கடன்கொடுத்தோர் | - | 1,407,159 |
| பொருளாதார சேவைக் கட்டணம் | 170,872 | 170,872 |
| அமைச்சலிருந்து வருமதியானவை | 3,731,167 | - |
| | **77,333,136** | **84,877,704** |

### 19 வைப்பீடுகளும் முற்கொடுப்பனவுகளும்

| | 2016 | 2015 |
|---|---|---|
| காப்பு வைப்பீடுகள் | 241,132 | 229,428 |
| முனகொடுப்பனவுகள் | 13,293,753 | 19,211,842 |
| முன்கொடுப்பனவு இழப்பீடுகளுக்கான ஒதுக்கீடுகள் | (7,226,319) | (7,226,319) |
| முன்கொடுப்பனவுகள் முற்பணம் - (தலைமை அலுவலகம்) | 192,206 | 192,206 |
| பணியாட்டொகுதிக்கான முற்பணம் - தலைமை அலுவலகம் | 871,275 | 1,203,306 |
| முன்கொடுப்பனவு முற்பணம் இழப்பீட்டுக்கான ஒதுக்கீடுகள் | (560,073) | (560,073) |
| பணியாளர்களுக்கான எரிபொருள் முற்பணம் - தலைமை அலுவலகம் | 292,312 | 261,882 |
| முன்கொடுப்பனவு முற்பணம் இழப்பீட்டுக்கான ஒதுக்கீடுகள் | (235,612) | (235,612) |
| வருமதியாகவுள்ள ஏனைய வைப்புகள் | 1,576,503 | 3,004,926 |
| பிரயாண முற்கொடுப்பனவு (வெளிநாட்டு) | 190,620 | 190,620 |
| முன்கூட்டி செலுத்தப்பட்ட வாடகை | 225,000 | - |
| | **8,860,797** | **16,272,206** |

### 20 விடேச கருத்திட்டங்களுக்கான கொடைகள்

| | 2016 | 2015 |
|---|---|---|
| சேவை நிலையம் மற்றும் கையிருப்புகளை விநியோகித்தல் | - | 15,540,765 |
| கெஸ்பர கருத்திட்டம் - அமைச்சு | - | 16,872,541 |
| திவிநெகும கருத்திட்டம் =குடிசைக்கைத்தொழலில் | - | 4,096,018 |
| **விசேட கருத்திட்டங்களுக்கான செலவுகள்** | **-** | **36,509,324** |

# கைத்தொழில் அபிவிருத்தி சபை

## நிதிக்கூற்றுக்கான குறிப்புகள் (தொடர்ச்சி)

### 21 காசு மற்றும் வங்கி மீதிகள்

| | கணக்குக் குறியீடுகள் | கணக்கு இலக்கம் | 2016 | 2015 |
|---|---|---|---|---|
| | வங்கிக் கணக்கு - லக்நிபயும் -பொலனறுவை | | 11,605 | 11,605 |
| 185065 | திவநெகும கருத்திட்டம் - குடிசைக் கைத்தொழில் | 71889197 | - | (24,863) |
| 185200 | நடைமுறைக் கணக்கு -- IRDP | 00022667-9 | 2,076 | 2,076 |
| 185080 | நடைமுறைக் கணக்கு - துணை ஒப்பந்தம் - சநதைப்படுத்தல் | 683133 | - | 2,015,143 |
| 185040 | நடைமுறைக் கணக்கு- இடர் கடன் | 683218 | - | 596,657 |
| 185010 | நடைமுறைக் கணக்கு - இடம -மொரட்டுவ | 682974 | (40,960,624) | 2,112,336 |
| 185110 | நடைமுறைக் கணக்கு - பேலியகொட- RPD&SC | 4064199 | 967,295 | 4,349,059 |
| 185020 | நடைமுறைக் கணக்கு - மூலதன கொடை வங்கிக் கணக்கு | 683231 | (1,415,987) | (1,122,076) |
| 185030 | வங்கி மீதி - எத்திரவியல் பிரிவு | 683144 | 516,176 | 5,638,052 |
| 185050 | வங்கி மீதி - REAP | 1118722801 | - | 15,697 |
| 185180 | வங்கி மீதி - கிராம அபிவிருத்தி கருத்திட்டம் | 4204245 | 5,248,932 | 218,749 |
| 185070 | வங்கி மீதி - உலோகம் அல்லாத | 682519 | 321,639 | 20,069,523 |
| 185060 | வங்கி மீதி - பிராந்திய பிரிவு (கித்துள்) | 683237 | 32,971,946 | 1,490,134 |
| 185412 | BOC - "இடம" கழிவுக் கருத்திட்டத்தின் சேமிப்புக் கணக்கு | 7271240 | 187,240 | 179,891 |
| 185090 | நடைமுறைக் கணக்கு - மக்கள் வங்கி | 100153657035 | 48,610,950 | 10,000 |
| 185415 | நடைமுறைக் கணக்கு - லக்கம் விற்பனை நிலையம் | 7153282 | 1,127,322 | 487,938 |
| 185015 | நடைமுறைக் கணக்கு - விடுவிக்கப்பட்ட பற்று வரி | 70034730 | 2,368,416 | 609,643 |
| 185125 | மாவட்ட அலுவலகம் - வங்கிக் கணக்கு | 74791255 | 307,717 | 1,195,770 |
| 185413 | சேமிப்புக் கணக்கு - CESS நிதியம் | 9123868 | 1,525,279 | 11,528,630 |
| 185025 | சேமிப்புக் கணக்கு - மூலதன நிதியம் | 71648764 | - | 29,178,407 |
| 185135 | சேமிப்புக் கணக்கு -பேட்டை வைப்பீடு | 71582414 | - | 4,771,419 |
| | குறுங்கால வைப்புகள் | | 100,013,581 | 11,104,111 |
| | வருமதியான குறுங்கால வைப்பீடு வட்டி | | 646,305 | - |
| | முற்பணம் கணக்கு | | 4,669 | 15,524 |
| | விசேட முற்பணம் - காசாளர் | | 23,379 | 23,379 |
| | வழியிடைப் பணம் | | 28,148 | 25,783 |
| | வழியிடைப் பணம் -உலோக கழிவு கருத்திட்டம் | | 12,540 | 12,540 |
| | | | **152,518,603** | **94,515,126** |
| | வரவு மீதி | | 194,895,214 | 95,662,065 |
| | கடன் மீதி | | (42,376,612) | (1,146,939) |
| | **காசு மற்றும் காசுக்கு சம்மாவைகள்** | | **152,518,603** | **94,515,126** |

### 22 தேறிய அரச பங்களிப்புகள்

| | 2016 | 2015 |
|---|---|---|
| அரச மூலதன கொடைகள் | 277,910,082 | 278,694,719 |
| ஆண்டில் பெறப்பட்ட கொடைகள் | 45,000,000 | 45,000,000 |
| மூலதன கொடை மாற்றம் | (40,122,661) | (45,784,637) |
| | **282,787,422** | **277,910,082** |

### 23 மாற்றப்பட்ட சொத்துக்களின் பெறுமதி

| | 2016 | 2015 |
|---|---|---|
| 1969 இற்கு முன்னர் கை.அ.ச | 4,403,441 | 4,403,441 |
| கைத்தொழில் பேட்டை கூட்டுத்தாபனம் | 9,043,620 | 9,043,620 |
| | **13,447,061** | **13,447,061** |

### 24 நிரந்த்த சொத்துக்களின் மீள்மதிப்பீட்டு மிகை

| | 2016 | 2015 |
|---|---|---|
| மு/கொ மீதி | 999,334,417 | 953,138,009 |
| மீள்மதிப்பீட்டு மிகை | (37,516,635) | 46,196,408 |
| | **961,817,782** | **999,334,417** |

| 25 | ஏனைய அரச கொடைகள் | 2016 | 2015 |
|---|---|---|---|
| | பக்மில் (களி இயந்திரம்)கொடைகள் | - | 29,250 |
| | செஸ் வரி | 10,500,000 | 10,500,000 |
| | Sirap நிதியம் - கட்டிடங்கள் | 25,388,919 | 26,236,185 |
| | பேலியாகொட இறப்பர் ஆராய்ச்சி மற்றும் உற்பத்தி விருத்தி நிலையத்தின் | | |
| | இன்ஜெக்ஷன் மோல்டிங் இயந்திரத்திற்கான கொடை | 9,318,027 | - |
| | அமைச்சு நிதியம் அச்சுவேலி | 22,834,039 | 16,932,430 |
| | அமைச்சு நிதியம் கைத்தொழில் பேட்டை | 260,126,686 | 101,801,068 |
| | உலோகம் அல்லாத | 10,000,000 | 10,000,000 |
| | T.S.D ஆய்வுக்கூடத்திற்கான அமைச்சு நிதியம் | 4,489,843 | - |
| | ரொபோட் ஆர்ம் - அமைச்சு நிதியம் | 15,000,000 | - |
| | | **357,657,514** | **165,498,934** |

| 26 | ஏனைய அரச கொடைகள் | 2016 | 2015 |
|---|---|---|---|
| | மீதி | 1,930,291,117 | 1,930,291,117 |
| | திரண்ட நட்டம் | (2,175,923,391) | (2,136,683,921) |
| | சீராக்கங்கள் | 23,258,430 | (17,407,674) |
| | முன்கொண்டுசெல்லப்பட்ட பற்றாக்குறை | (1,666,359) | (21,831,796) |
| | திரண்ட நட்டங்கள் | (2,154,331,321) | (2,175,923,391) |
| | | (224,040,204) | (245,632,274) |

**27 ஓய்வூதிய நன்மைக் கடப்பாடுகள்**

நிதியியல் நிலவரம் பற்றிய கூற்றில் இனங்காணப்பட்டதொகைகள் பின்வருமாறு தீர்மானிக்கப்படுகின்றன.

| | 2016 | 2015 |
|---|---|---|
| நிதியளிக்கப்படாத கடப்பாடுகளுக்கான நடப்பு பெறும்மதி | 137,072,925 | 155,623,529 |
| **நிதியியல் நிலவரம் பற்றிய கூற்றின் பொறுப்புகள்** | **137,072,925** | **155,623,529** |

ஆண்டில் விளக்கமளிக்கப்படாத கடப்பாடுகளின் அசைவு பின்வருமாறு:

| | 2016 | 2015 |
|---|---|---|
| சனவரி 01 ஆம் திகதியில் | 155,623,529 | 100,395,508 |
| நடப்பு சேவைக் கிரயம் | 8,045,317 | 9,896,983 |
| வட்டிக் கிரயம் | 10,798,742 | 6,639,630 |
| சேவைக்கு பின்னரான நன்மை கடப்பாடு மீது ஆயுட்கால நட்டம்/(இலாபம்) | (28,873,913) | 49,090,907 |
| | **145,593,675** | **166,023,028** |
| செலுத்தப்பட்ட நனமைகள் | (8,520,751) | (10,399,498) |
| **மார்ச்சு 31 ஆம் திகதியில்** | **137,072,925** | **155,623,529** |

பயன்படுத்தப்பட்ட முதன்மை ஆயுட்கால எடுகோல்கள் பின்வருமாறு

| | 2016 | 2015 |
|---|---|---|
| கழிவு விகிதம் | 7.00% | 5.00% |
| எதிர்கால சம்பள அதிகரிப்பு | 5.00% | 7.00% |
| பணியாளர்களின் பரள்வு விகிதம் | 4.06% | 4.91% |
| ஓய்வபெறும் வயது | 60 | 60 |

| 28 | விசேட கருத்திட்டங்களுக்கான கொடைகள் | 2016 | 2015 |
|---|---|---|---|
| | சுனாமி | - | 1,540,899 |
| | கிராம அபிவிருத்தி கருத்திட்டம் | 20,726,052 | 52,800,966 |
| | கித்துள் விருத்தி கருத்திட்டம் | - | 10,536,151 |
| | அமைச்சு நிதியம் திவநெகும | - | 6,699,960 |
| | இஞ்சி கொள்வனவு - யாழ்ப்பாணம் | 137,863 | 137,863 |
| | | **20,863,915** | **71,715,838** |

| | | | 2016 | 2015 |
|---|---|---|---|---|
| **29** | **சபைகளுக்குக்கும் கூட்டுத்தாபனங்களுக்குமான நிலுவைகள்** | | **2016** | **2015** |
| | ஊ.சே.நி செலுத்தப்படவேண்டிய நிலுவை | | 12,939,579 | 32,348,955 |
| | | | **12,939,579** | **32,348,955** |

| | | | | |
|---|---|---|---|---|
| **30** | **அரசாங்கத்திற்கு செலுத்தப்படவேண்டிய** | | **2016** | **2015** |
| | உள்நாட்டு இறைவரி ஆணையாளர் | | 28,879 | 28,879 |
| | உள்நாட்டு இறைவரி ஆணையாளர் முத்திரைக் கட்டணம் | | 54,935 | 51,235 |
| | | | **83,814** | **80,114** |

| | | | | |
|---|---|---|---|---|
| **31** | **சபைகள் மற்றும் கூட்டுத்தாபனத்திற்கு செலுத்தப்படவேண்டிய** | | **2016** | **2015** |
| | இலஙகை மத்திய வங்கி ஊசே.நி | | 3,988,778 | 3,138,778 |
| | ஊ.ந.பொ நிதியத்திற்கு செலுத்தப்படவேண்டிய நிலுவை | 19,409,376 | - | - |
| | முன்கூட்டியே செலுத்தப்பட்ட 2 தவணைக் கட்டணங்கள் | (3,234,896) | 16,174,480 | 16,174,480 |
| | ஊ.ந.பொ நிதியத்திற்கு செலுத்தப்படவேண்டிய நிலுவை | | 6,389,567 | 6,389,567 |
| | ஊழியர் நம்பிக்கை பொறுப்பு நிதியம் | | 544,877 | 428,110 |
| | | | **27,097,701** | **26,130,935** |

**32 வியாபார, ஏனைய கடனகொடுத்தோர்,ஒதுக்கம் மற்றும் அட்டுறுசெலவினங்கள்**

| | 2016 | 2015 |
|---|---|---|
| லுனுவில தொழில்பேட்டை வைப்பீடு | 1,458,835 | 1,458,835 |
| ஊழியர் நனகொடை | 8,695 | 8,695 |
| துணை ஒப்பந்த பரிமாற்றங்கள் | 25,639 | 25,639 |
| தேசத்தைக் கட்டியெழுப்பும் வரி 2% | 3,338,717 | 3,165,169 |
| பணியாளர்களிடமிருந்து கழித்வைகள் -செலுத்தக்கூடிய | 11,207 | (1,203) |
| ஈட்டும்போது செலுத்தவேண்டிவைகள் | 106,779 | 79,307 |
| தேர்தல் ஆணையாளர் | 54,446 | 54,446 |
| பலவின கடன்கொடுத்தோர் | 3,072,949 | 3,072,949 |
| ஏனைய கடன்கொடுத்தோர் | 40,883 | - |
| பலவின கடன்கொடுத்தோர் -தலைமைக் காரியாலயம் | 1,925,374 | 6,762,741 |
| பலவின கடன்கொடுத்தோர் -உலோகமல்லாத | 124,787 | 641,048 |
| இடைநிறுத்தப்பட்டுள்ள வைப்பீடுகள் | 1,093,683 | 1,113,704 |
| செலுத்தப்பவேண்டிய சம்பளங்கள் | (12,590) | 1,991 |
| லக்நிபயும் சநதைப்படுத்தல், கணகாட்சி நிலையம் | 89,753 | 92,398 |
| வேலைகள் அடிப்படையிலான முற்பணம் | 3,614,812 | 1,863,108 |
| மீளச்செலுத்தப்படவேண்டிய கேள்விப்பத்திர வைப்பீடு | 32,320 | 937,239 |
| காப்பு வைப்பீடு | 241,132 | 229,428 |
| மீளச்செலுத்தப்பவேண்டிய வைப்பீடு | 49,272,098 | 42,123,248 |
| பௌத்த சங்கம் கட்டுப்பாட்டுக் கணக்கு | 4,230 | 4,230 |
| சிக்கனச் சங்க கட்டுப்பாட்டுக் கணக்கு | 36,510 | 36,510 |
| ஏனைய திணைக்கள கட்டுப்பாட்டு கணக்கு | 69,221 | 61,061 |
| செலுத்தப்பவேண்டிய கட்டுப்பாட்டுக் கணக்கு -தலைமை அலுவலகம் | 2,376 | 2,379 |
| தொழிற்சங்க கட்டுப்பாட்டு கணக்கு | 4,979 | 4,529 |
| காப்புறுதி கட்டுப்பாட்டுக் கணக்கு | 1,178,882 | 994,798 |
| வாடிக்கையாளர்களுக்கு மிகையாக செலுத்தல் | 2,734,019 | 2,077,120 |
| மருத்துவ திட்டம் | 2,816,609 | 608,491 |
| தொழில் பிணக்குகளுக்கான ஒதுக்கீடுகள் | 4,747,407 | 4,406,389 |
| துணை ஒப்பந்த விவசாய உபகரணங்கள் | 2,202,546 | 2,421,515 |
| அட்டுறுசெலவினங்கள் | 39,261,285 | 38,925,438 |
| லக்கம் கடனாளிகள் | 3,433,936 | 1,930,587 |
| செலுத்தப்படற்பாலான வருமானம் - கண்காட்சி | 2,026,951 | - |
| | **123,018,469** | **113,101,787** |

# சபையின் கருத்துரைகள் மீதான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை

විගණකාධිපති දෙපාර්තමේන්තුව
கணக்காய்வாளர் தலைமை அதிபதி திணைக்களம்
AUDITOR GENERAL'S DEPARTMENT

මගේ අංකය
எனது இல.
My No. ஐஎம்யு / ஏ / ஐடிபி / 1 / 16 / 59

ඔබේ අංකය
உமது இல.
Your No.

දිනය
திகதி
Date 2018 ஏப்ரல் 11

தலைவர்,
இலங்கை கைத்தொழில் அபிவிருத்திச் சபை

**இலங்கை கைத்தொழில் அபிவிருத்திச் சபையின் 2016 டிசம்பர் 31 ஆம் திகதியுடன் முடிவடைகின்ற வருடத்திற்கான நிதிக்கூற்றுக்கள் தொடர்பான 1971 ஆம் ஆண்டின் 38 ஆம் இலக்க நிதிச் சட்டத்தின் 14 (2) (சீ) பிரிவின் பிரகாரம் கணக்காய்வாளர் அதிபதியின் அறிக்கை**

இலங்கை கைத்தொழில் அபிவிருத்திச் சபையின் 2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான விரிவான வருமானக்கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளினதும் ஏனைய விளக்கத் தகவல்களினதும் பொழிப்புக்களையும் உள்ளடக்கிய 2016 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் 13(1) ஆம் பிரிவு மற்றும் 1969 இன் 36 ஆம் இலக்க கைத்தொழில் அபிவிருத்தி அதிகாரச்சட்டத்தின் 38(1) ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டது. நிதி அதிகாரச்சட்டத்தின் 14(2)(சீ) பிரிவின் பிரகாரம் சபையின் ஆண்டறிக்கையுடன் பிரசுரிக்கப்பட வேண்டும் என நான் கருதும் எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன. நிதி அதிகாரச் சட்டத்தின் 13(7)(ஏ) பிரிவின் பிரகாரம் விரிவான அறிக்கையொன்று சபையின் தலைவருக்கு 2017 நவம்பர் 02 ஆம் திகதி வழங்கப்பட்டது.

**1.2 நிதிக்கூற்றுக்களுக்கான முகாமைத்துவத்தின் பொறுப்பு**

இந் நிதிக்கூற்றுக்களை இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க தயாரித்து நியாயமாகச் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானது என முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

**1.3 கணக்காய்வாளரின் பொறுப்பு**

எனது கணக்காய்வின் அடிப்படையில் இந்நிதிக்கூற்றுக்களின் மீது அபிப்பிராயம் தெரிவிப்பது எனது பொறுப்பாகும். அதியுயர் கணக்காய்வு நிறுவனங்களின் சர்வதேச நியமங்களுக்கு ஒத்ததாக (ஐஎஸ்எஸ்ஏஐ 1000 – 1810) இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு இணங்க எனது கணக்காய்வை நான் மேற்கொண்டேன். ஒழுக்கநெறி வேண்டுதல்களுடன் நான் இணங்கி நடப்பதையும் நிதிக்கூற்றுக்கள் பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்றவையா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதற்கு கணக்காய்வு திட்டமிட்டு மேற்கொள்ளப்படுவதையும் இந்நியமங்கள் வேண்டுகின்றன.

நிதிக்கூற்றுக்களிலுள்ள தொகைகள் மற்றும் வெளிப்படுத்தல்களிற்கு ஆதாரமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்வதற்கான செயற்பாட்டு நடைமுறைகள் கணக்காய்விற்கு உள்ளடக்கப்பட்டுள்ளது. மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் மதிப்பீட்டினை உள்ளடக்கும்

අංක 306/72, පොල්දූව පාර, බත්තරමුල්ල, ශ්‍රී ලංකාව, - இல. 306/72, பொல்துவ வீதி, பத்தரமுல்லை, இலங்கை. - No. 306/72, Polduwa Road, Battaramulla, Sri Lanka
+94-11-2887028-34 +94-11-2887223 ag@auditorgeneral.gov.lk www.auditorgeneral.gov.lk

கணக்காய்வாளரின் தீர்மானம் மீது தெரிவுசெய்யப்பட்ட நடைமுறைகள் தங்கியுள்ளது. அந்த ஆபத்தினை மதிப்பீடு செய்கையில் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைக்கும் வகையில் சபையின் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் நியாயமாகச் சமர்ப்பித்தலுக்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளை கணக்காய்வாளர் கருத்தில் கொள்கின்றாரேயன்றி சபையின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் வினைத்திறனின் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல. முகாமைத்துவத்தால் பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தமான தன்மையையும் முகாமைத்துவத்தால் மேற்கொண்ட கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையையும் மதிப்பாய்வு செய்தல் அத்துடன் நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தலினை மதிப்பாய்வு செய்தல் என்பவற்றினையும் கணக்காய்வு உள்ளடக்கியுள்ளது. 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் 13 ஆம் பிரிவின் (3) மற்றும் (4) ஆம் உப பிரிவுகள் கணக்காய்வின் நோக்கெல்லையையும் அளவையும் நிர்ணயிப்பதற்கான தற்றுணிபு அதிகாரத்தினை கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு வழங்குகின்றன.

எனது கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படையினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

## 1.4 முனைப்பழியுள்ள கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

## 2. நிதிக்கூற்றுக்கள்

## 2.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கத்தினைத் தவிர்த்து இலங்கை கைத்தொழில் அபிவிருத்திச் சபையின் 2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

## 2.2 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

### 2.2.1 இலங்கை கணக்கீட்டு நியமம்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

**(அ) இலங்கை கணக்கீட்டு நியமம் 02**

I. "நவபிம களஞ்சயசாலை வளாகத்தில்" (Yard) களஞ்சியப்படுத்தப்பட்டிருந்த 1,500 கிலோ கிராம் எடையுள்ள கழிவுப் பொருட்களின் பெறுமதியினை மதிப்பீடு செய்து நிதிக் கூற்றுக்களில் சீராக்கல் செய்வதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

II. மெதுவாக நகரக்கூடிய மற்றும் காலாவதியான இருப்புக்களுக்காக ரூபா 3,048,557 தொகையான ஒதுக்கம் 2013 ஆம் வருடம் முதல் எவ்வித மீளாய்வுமின்றி முன் கொண்டுவரப்பட்டிருந்தது.

(ஆ) **இலங்கை கணக்கீட்டு நியமம் இலக்கம் 11**

ஐந்து நிர்மானக் கருத்திட்டங்களுக்கு முற்பணமாக வழங்கப்பட்ட ரூபா 15,617,194 முழுத் தொகையினையும் நடந்துகொண்டிருக்கும் வேலையாக கணக்குகளில் பதியப்பட்டிருந்தது.

(இ) **இலங்கை கணக்கீட்டு நியமம் இலக்கம் 20**

மீளாய்வு ஆண்டின் ஆரம்பத்தில் இருந்த ரூபா 277,910,082 தொகையான மூலதன அளிப்புக்களின் மீதிகள் உற்பத்தி செய்யப்பட்ட சொத்துக்களின் வருடாந்தத் தேய்வினை அடிப்படையாகக் கொண்டு (க்ரமக்ஷய) தவனையடிப்படையில்) சீராக்கல் செய்வதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை என்பதுடன் 2016 ஆம் ஆண்டில் பெற்றுக்கொள்ளப்பட்ட ரூபா 45,000,000 ஆன மூலதன அளிப்புக்களில் மீண்டெழும் தன்மையிலான செலவினமான ரூபா 2,486,663 மாத்திரம் வருமானமாக கணக்குகளில பதிவு செய்யப்படவேண்டும் என்பதுடன் ரூபா 37,635,995 ஆன மூலதனச் செலவினங்களிற்காக (க்ரமக்ஷய தவனையடிப்படையில்) சீராக்கல் செய்ய வேண்டியிருந்தும் ரூபா 40,122,660 தொகை மொத்த மூலதன செலவினம் வருமானமாக கணக்குகளில் பதியப்பட்டிருந்தது.

### 2.2.2 கணக்கீட்டுக் கொள்கைகள்

கணக்கீட்டுக் கொள்கையொன்றை அறிமுகப்படுத்தும்போது அது நிதி நிலைமையினை வெளிப்படையாக மற்றும் நியாயமாக காட்டுவதற்கு உதவுமொன்றாக இருத்தல் வேண்டும். அவ்வாறிருந்தும் கடன் பட்டோர்களுக்கான ஐயக் கடன்களை ஒதுக்கும்போது கடன் பட்டோரகளிடமிருந்து கிடைக்க வேண்டிய கடன்களுக்காக 05 வருடங்கள் வரையில் ஒவ்வொரு வருடத்திற்கும் 10% ஒதுக்கீடும் மற்றும் 05 வருடங்கள் பூர்த்தியடைந்ததும் 100% ஒதுக்கீடொன்றை மேற்கொண்டதன் காரணமாக கடந்த வருடத்துடன் ஒப்பிடுகையில் மீளாய்வு ஆண்டினுல் ரூபா 3,573,133 மேலதிக ஐயக்கடன் ஒதுக்கீடொன்று மேற்கொள்ளப்பட்டிருந்தது.

### 2.2.3 கணக்கீட்டுக் குறைபாடுகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) பல வருடங்களாக கொடைகளாகக் கிடைக்கப்பெற்ற பெறுமதி குறிப்பிடப்படாத இருப்பு உருப்படிகளில் பெறுமதியைக் கணக்கிட்டு கணக்குகளில் பதிவதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

(ஆ) மறுமதிப்பீட்டுப் பெறுமதி ரூபா 67,437,864 தொகையான 07 நிலையான சொத்துக்களை வருடாந்த தேய்மானச் செலவின் அடிப்படையில் கணக்கிட்டதன் காரணமாக ஆண்டின் தேய்மானம் ரூபா 1,333,284 இனால் மேலதிகமாகக் காட்டப்பட்டிருந்தது.

(இ) பிரதான அலுவுலகம்,மாவட்ட அலுவலகங்கள மற்றும் நிலையங்களை நடாத்துகின்ற 37 ஏக்கர் அளவிலான மொத்தக் காணிகளின உரித்து சட்டரீதியாக கையேற்கப்படாமல் இருந்ததுடன் அதன் பெறுமதியை மதிப்பீடு செய்து கண்க்குகளில் பதியும் நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை

(ஈ) கடந்த வருடத்தில் ரூபா 2,032,627 வருமானத் தன்மையிலான செலவினங்கள் அவ்வருடத்தின் இலாபங்களுக்கு எதிராக பதிவளித்தலுக்குப் பதிலாக ஏனைய

நடைமுறைச் சொத்துக்களின் கீழ் பதிவுசெய்யப்பட்டிருந்ததன் காரணமாக நடைமுறைச் சொத்துக்கள் அவ்வளவுகளில் மேலதிகமாகக் காட்டப்பட்டிருந்தது.

### 2.2.4 விளக்கமளிக்கப்படாத வேறுபாடுகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 2016 திசெம்பர் 31 ஆம் திகதியில் உள்ளவாரான கைத்தொழிலாளர்களிடமிருந்து அறவிடப்படவேண்டிய மொத்த நிலுவைத் தொகை கைத்தொழில் குடியேற்றப் பிரிவின் அறிக்கைகள் மற்றும் நிதிக்கூற்றுக்களுடன் ஒப்பிடுகையில் ரூபா 16,268,718 தொகையான வேறுபாடொன்று அவதானிக்கப்பட்டது.

(ஆ) மீளாய்வு ஆண்டின் திசெம்பர் 31 ஆம் திகதிக்கு காணி மற்றும் காணி மேம்படுத்தல் கணக்கு ஏடுகளின் மீதிகள் முறையே ரூபா 676,552,750 மற்றும் ரூபா 141,320,244 ஆகக் காணப்பட்டாலும் நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் குறித்த மீதிகள் முறையே ரூபா 767,367,687 மற்றும் ரூபா 50,156,899 ஆகக் கானப்பட்டதனால் முறையே ரூபா 90,814,937 மற்றும் ரூபா 91,163,345 தொகைகள் சரிசெய்யப்படாமை அவதானிக்கப்பட்டது.

### 2.2.5 கணக்காய்விற்கான சான்றுகளின்மை

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 2014 மற்றும் 2015 ஆம் வருடங்களில் சபையின் சொத்துக்களுக்கான மீள்மதிப்பீட்டு நடவடிக்கைகள் சபையில் சேவையில் ஈடுபட்டுள்ள ஆதன மதிப்பீடு தொடர்பாக தொழில்சார் தகைமையுடைய உத்தியோகத்தர் ஒருவரால் மேற்கொள்ளப்பட்டிருந்தன. 2016 திசம்பர் 31 ஆம் திகதிக்கு மீள்மதிப்பீடு செய்யப்பட்ட சொத்துக்களின் அட்டவனை மற்றும் ஒவ்வோர் சொத்துக்களின் மீள்மதிப்பீட்டுப் பெறுமதி தொடர்பான தகவல்கள் 2017 ஒக்டோபர் 30 ஆம் திகதி ஆகும் வரையில் கணக்காய்விற்கு சமர்ப்பிப்பதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

(ஆ). 05 வருடங்கள் கடந்த பல்வேறுபட்ட கடன் கொடுத்தோர்களின் மீதிகளில் உள்ளடக்கப்பட்டுள்ள ரூபா 3,072,949 தொகையான மீதி தொடர்பாக விவரமான அட்டவனையொன்று கணக்காய்விற்கு முன்வைக்கப்பட்டிருக்கவில்லை.

## 2.3 பெறவேண்டிய மற்றும் செலுத்தவேண்டிய கணக்குகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) மீளாய்வு ஆண்டின் இறுதிக்கு வர்த்தக மற்றும் ஏனைய கிடைக்கவேண்டிய மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 66,517,993 ஆகக் கானப்பட்டதுடன், அதில் 05 வருடங்கள் கடந்த மீதி ரூபா 39,436,868 மற்றும் 05 வருடங்கள் கடந்த ரூபா 28,955,811 கடன் கொடுத்தோர்களின் மீதிகளை தீர்ப்பதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

(ஆ) 2014 ஆம் ஆண்டு தொடக்கம் அறவிடப்படாமல் கானப்படுகின்ற ஊழியர் கடன் மீதி ரூபா 743,533 ஆகக் கானப்பட்டது.

(இ) முன் கொடுப்பனவுகள் மற்றும் ஊழியர்களுக்கு வழங்கப்பட்ட ரூபா 14,457,340 முற்பண மீதிகளில் ரூபா 8,022,004 மீதி 2014 ஆம் ஆண்டு தொடக்கம் ஒதுக்கீடொன்றாக குறைத்துக் காட்டப்பட்டிருந்தது.

(ஈ) 2009 ஆம் ஆண்டு முதல் 2015 ஆம் ஆண்டு வரை சேதமடைந்த இரும்புகளின் கொள்வனவின்போது வழங்குனர்களுக்காக செழுத்தப்பட்ட ரூபா 4,317,934 முற்பணத் தொகை 2017 திசெம்பர் 31 ஆம் திகதி வரையில் தீர்க்கப்படாதிருந்தது.

(உ) 12 கைத்தொழில் குடியேற்றங்களில் தாபிக்கப்பட்டிருந்த 228 கைத்தொழில்களுக்கு கைத்தொழிலாளர்களிடம் வாடகையாக 2016 திசெம்பர் 31 ஆம் திகதிக்கு அறவிடவேண்டிய ரூபா 16,058,303 தொகை அறவிடப்பட்டிருக்கவில்லை.

## 2.4 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மாணங்களுடன் இணங்காமை

பின்வரும் சட்டங்கள் மற்றும் பிரமாணங்களுக்கு இணங்காமைகள் அவதானிக்கப்பட்டன.

| சட்டங்கள்,விதிகள்,பிரமாணங்களுடனான தொடர்பு | இணங்காமைகள் |
|---|---|
| இலங்கை சனநாயக சோஷலிச குடியரசின் நிதிப்பிரமானக் கோவை | |
| (i) நிதிப் பிரமாணங்கள் 571(2) | 02 வருடங்கள் கடந்த ரூபா 2,767,275 தொகையான மீளச் செழுத்தவேண்டிய வைப்பு மீதிகள் தொடர்பாக நிதிப்பிரமாணங்களுக்கு ஏற்ப நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை |
| (ii) நிதிப் பிரமாணங்கள் 757 | 2016 ஆம் ஆண்டுடன் தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட பொருள் கணக்கெடுப்பிற்கு ஏற்ப அவதானிக்கப்பட்ட ரூபா ரூபா 395,754 மிகை மற்றும் ரூபா 332,028 குறைப் பெறுமதிகள் தொடர்பாக நிதிப்பிரமாணங்களுக்கேற்ப நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. |
| (iii) நிதிப் பிரமாணங்கள் 770 | 2015 ஆம் ஆண்டில் மேற்கொள்ளப்பட்ட பொருள் கணக்கெடுப்பின்போது உபயோகிக்க முடியாதவை என பெயர் குறிப்பிடப்பட்ட 38 பொருள் வகைகள் தொடர்பாக நிதிப்பிரமாணங்களுக்கேற்ப நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை |

## 3. நிதி மீளாய்வு

### 3.1 நிதி விளைவுகள்

மீளாய்வாண்டிற்காக சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் சபையின் நிதிசார் விளைவுகள் ரூபா 30,029,583 ஆன பற்றாக்குறையொன்று இருந்ததுடன், அதற்கு மறையொத்ததாக முன்னைய ஆண்டிற்கான மிகை ரூபா 27,259,111 ஆக இருந்தமையால் முன்னைய ஆண்டுடன் ஒப்பிடும் போது மீளாய்வாண்டிற்கான நிதிசார் விளைவுகளில் ரூபா 57,288,694 ஆன வீழ்ச்சி அவதானிக்கப்பட்டது. முன்னைய ஆண்டிற்கு ஒப்பாக மீண்டெழும் மானியங்கள் ரூபா 10,750,000 இனால் மற்றும் விற்பனை மற்றும் சேவைகள் வருமானம் ரூபா 44,720,265 இனால் குறைந்தமை மற்றும் நிருவாகச் செலவினங்கள் ரூபா 29,945,023 இனால் அதிகரித்தமை மேற்படி நிதி விளைவுகளிலான வீழ்ச்சி தொடர்பில் பிரதானமாக தாக்கமளித்திருந்தது.

மீளாய்வாண்டுடன் கடந்த மூன்று வருடங்களினதும் நிதி விளைவுகளை பகுத்தாராய்ந்து பார்க்கும் போது 2013 ஆம் ஆண்டின் போது ரூபா 84,728,727 தொகையாக இருந்த பற்றாக்குறை 2014 ஆம் ஆண்டளவில் மிகையாகி , 2015 ஆம் ஆண்டின் போது ரூபா 27,259,111 தொகையான மிகையொன்றாக வளர்ச்சியடைந்திருந்தும், மீளாய்வு ஆண்டினுல் அது ரூபா 30,029,583 பற்றாக்குறையாக வீழ்ச்சியடைந்திருந்தது. எவ்வாறெனினும், நிதி விளைவிற்கு ஊழியர் ஊதியம் மற்றும் நடைமுறையல்லா சொத்துக்களுக்கான பெறுமானத்தேய்வு ஆகியவற்றை மீள சீராக்கியதன் பின்னர் 2013 ஆம் ஆண்டில் ரூபா 68,532,050 தொகையான பங்களிப்பு தொடர்ச்சியாக அதிகரித்து 2016 ஆம் ஆண்டினுல் ரூபா 142,949,647 ஆக இருந்தது.

## 4. செயற்பாட்டு மீளாய்வு

### 4.1 செயலாற்றுகை

1969 இன் 36 ஆம் இலக்க கைத்தொழில் அபிவிருத்தி அதிகாரச்சட்டத்தின் கீழ் கூட்டிணைக்கப்பட்ட இலங்கை கைத்தொழில் அபிவிருத்தி சபையின் பிரதான நோக்கங்கள் கைத்தொழிலை ஊக்குவித்தல், மேம்படுத்தல் மற்றும் அபிவிருத்தி செய்தல் ஆக இருந்ததுடன், 19 கைத்தொழில் பேட்டைகள் மற்றும் 25 பிரதேச அலுவலகங்களும் உள்ளடங்கலான பொறியியல் தொழில்நுட்ப சேவைகள், சந்தைப்படுத்தல், இறப்பர் அபிவிருத்தி மற்றும் தோல் பொருட்களின் அபிவிருத்தி போன்ற துறைகளை உள்ளடக்கும் சபையின் செயலாற்றல் தொடர்பில் பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

**(அ) <u>விற்பணைப் பிரிவு</u>**

கழிவுப் பொருள் கருத்திட்டம், துணை ஒப்பந்தங்களைப் பெற்றுக்கொள்ளல்,கண்காட்சிகளை ஏற்பாடு செய்தல், லக்கம் மற்றும் லக் உற்பத்தி நிலையங்களில் விற்பணை வசதிகளை வழங்குதல், முயற்சியாளர்களுக்காக வரத்தக மற்றும் தொழில்நுட்ப நிகழ்ச்சிகளை நிகழ்ச்சித் திட்டங்களை நடாத்துதல் என்பவைகள் விற்பணைப்பிரிவின் பணிகளாகும்.

I. கழிவுப் பொருட்களின் விற்பனை வருமானம் விற்பணைப் பிரிவின் பிரதான வருமான வழியொன்றாகக் காணப்பட்டாலும் 2015 ஆம் ஆண்டில் ரூபா 103,970,263 ஆகக் காணப்பட்ட அவ்வருமானம் 2016 ஆம் ஆண்டில் ரூபா 43,044.099 ஆக ரூபா 60,926,164 இனால் 59% ஆகக் குறைந்திருந்தது. விற்பணை வருமானம் குறைந்திருந்தாலும், கழிவுப் பொருள் விற்பனை வருமானத்தின் வீதமொன்றாக 2015 ஆம் வருடத்துடன் ஒப்பிடுகையில் 59 வீதத்தினால் அதிகரித்திருந்தது.

II. "லக் உற்பத்திகள்" விற்பனை நிலையத்தின் முன்னேற்றத்திற்காக எவ்வித செயற்திட்டங்களும் செயற்பாட்டுத் திட்டத்தில் உற்படுத்தப்பட்டிருக்கவலைல்லை.இதன் காரணமாக "லக் உற்பததிகள்" நிலையத்திலிருந்து 2016 அம் வருடத்திற்காக பெற்றுக்கொள்ளப்பட்ட தரகுத் தொகை ஏறக்குறைய ரூபா 1,206 ஆக இருந்ததுடன், "லக் உற்பத்திகள்" விற்பனை நிலையம் 2017 ஏப்ரல் மாதம் முதல் மூடப்பட்டிருந்தது.

(ஆ) பிராந்திய அபிவிருத்திப் பிரிவு

இப்பிரிவினூடாக நுண், சிறிய மற்றும் நடுத்தர அளவிலான வியாபாரங்கள் மற்றும் கைத்தொழில்களை ஊக்கவித்தல், மேம்படுத்துதல் மற்றும் உயர்த்துதல் மற்றும் சர்வதேச சந்தையை மையமாக வைத்து 47 நடவடிக்கைகளை திட்டமிட்டிருந்தன. அதில் 6 நடவடிக்கைகளில் எவ்வித முன்னேற்றத்தையும் பெற்றிருக்கவில்லை என்பதுடன் மேலும் 25 செயற்பாடுகளின் முன்னேற்றம் 2 வீதம் முதல் 25 வீதம் வரை குறைந்த வேறுபாட்டெல்லையில் கானப்பட்டது.

## 4.2 முகாமைத்துவ செயற்பாடுகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்பட்டன.

(அ) கிராமங்களின் அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் தொழில் முயற்சியாளர்களுக்கு விநியோகிக்கும் நோக்கில் 2007 மற்றும் 2008 ஆம் ஆண்டுகளில் கொள்வனவு செய்யப்பட்ட ரூபா 7,417,960 பெறுமதியான இருப்பு மற்றும் மீளாய்வு ஆண்டில் நேரடி விநியோகத்திற்கு என கொள்வனவு செய்யப்பட்டிருந்த ரூபா 774,416 பெறுமதியான இருப்பும் கணக்காய்வுத் திகதியான 2017 திசம்பர் 04 ஆம் திகதியாகும் போதும் விநியோகிப்பதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

(ஆ) கைத்தொழில் குடியேற்றங்கள்

I. 1996 ஆம் ஆண்டு மற்றும் 2000 ஆண்டு தொடக்கம் 05 குடியேற்றங்களில் அனுமதியின்றிக் குடியேறியவர்கள் வசிப்பதன் காரணமாக 59 காணித் துண்டுகளில் கைத்தொழில்களை மேற்கொள்ள நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை என்பதுடன், 07 குடியேற்றங்களுடன் தொடர்பான 71 காணித் துண்டுகளை அபிவிருத்தி செய்து கைத்தொழிலாளர்களுக்கு வழங்க நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

II. பத்தேகம கைத்தொழில் குடியேற்றம் அமைந்துள்ள காணி, காணிச் சீர்திருத்த ஆணைக்குழுவிற்கு உரித்தான ஒரு காணி என்பதுடன் அதனைக் கையேற்பதற்காக 2007 ஆம் ஆண்டில் ரூபா 500,000 முற்பணமும் வரைபடங்களைத் தயாரித்தல் மற்றும் நில அளவை நடவடிக்கைகளுக்காக ரூபா 15,576 உம் 2007 ஒக்தோபர் 05 ஆம் திகதி செழுத்தப்பட்டிருந்தும் குறித்த காணி சபைக்கு கையேற்கப்படவில்லை. அவ்வாறே கையேற்கப்படாத கைத்தொழில் குடியேற்றங்களான 1 ஏக்கர், 2 ரூட், 0.5 பர்சஸ் அளவிலான பத்தேகம மற்றும் 10 ஏக்கர் 29.2 பர்சஸ் அளவிலான பெலிஅத்த கைத் தொழில் குடியேற்றங்களை சம்பந்தப்பட்ட விடயங்களுக்கு ஈடுபடுத்தாத காரணத்தினால் தற்போது அக்காணிகள் மணித குடியேற்றங்களாக மாரியிருக்கின்றன.

III. சபைக்கு உரித்தான காலி கரந்தெனிய கைத்தொழில் குடியேற்றத்தில் 2 ஏக்கர் 1 ரூட் 11.6 பர்சஸ் அளவிலான காணியில் கைத்தொழிலாளர்கள் கைத்தொழில்களை நடாத்துவதை நிறுத்தி வதிவிற்காக உபயோகித்திருந்தார்கள். இக்காணிகளை உரித்திற்கு கையளிக்கும் செயன்முறைக்கு முரனாக பணிப்பாளர் சபையின் தீர்மானமொன்றின் மேல் 2017 ஆகஸ்ட் 29 ஆம் திகதி கரந்தெணிய பிரதேச செயலாளருக்கு இக்காணியை கையளிப்பதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டிருந்தன.

4.3 **நிதி உபயோகம்**

பானமுவ கைத்தொழில் குடியேற்றத்திற்கு காணிகளை சுவீகரித்துக்கொள்வதற்காக 2016 செப்டெம்பர் மாதத்தில் அமைச்சிலிருந்து கிடைத்த 25 மில்லியன் தொகை 2017 செப்தெம்பர் ஆகும் வரையில் சமபந்தப்பட்ட விடயத்திற்கு உபயோகிக்காமல் நிலையான வைப்பொன்றில் முதலீடு செய்யப்பட்டிருந்தது.

4.4 **இனங்காணப்பட்ட நட்டங்கள்**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 2006 ஆம் ஆண்டு தொடக்கம் 2012 ஆம் ஆண்டு வரையில் ஊழியர் சேமலாப நிதி மற்றும் ஊழியர் நம்பிக்கைப் பொறுப்பு நிதியத்திற்கு பங்களிப்புத் தொகையை கணக்கீடு செய்யும்போது ஊழியர் ஊதியத்தில் உள்ளடங்கியுள்ள வாழ்க்கைச் செலவுக் கொடுப்பனவை கருத்தில் கொள்ளாததன் காரணமாக குறித்த காலத்திற்கு தண்டப்பணமாக ரூபா 6,469,791 தொகையை சபையினால் நிதியத்திற்கு செழுத்த வேண்டியேற்பட்டது.

(ஆ) வருடாந்த வாகண அனுமதிப்பத்திரக் கட்டனங்கள், பணிக்கொடை, மற்றும் ஆதன வரிக் கட்டனங்கள் போன்றவைகளை உரிய திகதிக்கு செழுத்தாததன் காரணமாக தண்டப்பணமாக ரூபா 43,257 செழுத்த வேண்டியேற்பட்டது.

4.5 **பயன்படுத்தப்படாத சொத்துக்கள்**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன

(அ) சபைக்கு உரித்தான மஹியங்கனை மியுனுகமவில் அமைந்துள்ள கட்டிடம் எவ்வித நடவடிக்கைகளுக்கும் உபயோகிக்காமல் கானப்படுவதோடு அதற்காக பாதுகாப்பு வசததிகளைப் பெற்றுக் கொள்வதற்காக மீளாய்வு ஆண்டினுல் ரூபா 714,248 செலவிடப்பட்டிருந்தது.

(ஆ) பாரம்பரியக் கைத்தொழில் மற்றும் சிறு முயற்சியான்மை அமைச்சின் கீழ் உற்பத்திக் கிராம அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டத்தை செயற்படுததுவதற்காக அமைச்சினால் நிர்மானிக்கப்பட்ட நாகஹமட நீலவபெத்த கட்டடத்தில் பழங்கள் சார்ந்த உற்பத்திகளை மேற்கொள்வதற்குத் தேவையான ரூபா 1,283,500 பெறுமதியான இயந்திராதிகள் சபையினால் வழங்கப்பட்டு 2012 மார்ச் மாதம் 06 ஆம் திகதி பொதுமக்களின் உபயோகத்திற்காக கையளிக்கப்பட்டிருந்தாலும், எவ்வித விணைதிறனான நடவடிக்கைகளுக்கும் ஈடுபடுத்தாமல் உபயோகமின்றிக் கானப்படுகின்றது.

4.6 **பெறுகைச் செயன்முறை**

(அ) ரூபா 9,318,026 பெறுமதியான “இறப்பர் இன்ஜெக்ஷன் மோல்டின்” இயந்திரத்தை கொள்வனவு செய்வதற்காக முதலாம் விலை கோரலின் போது சமர்ப்பிக்கப்பட்ட விலை மனுக்கள் கூடிய பெறுமதியாகக் கானப்பட்டமையினால் நிராகரிக்கப்பட்டிருந்தது. இரண்டாம் முறை விலை கோரலின் போது பெறுகை வழிகாட்டல் கோவையில் 7.8 மற்றும் 7.8.4 வழிகாட்டலுக்கு ஏற்ப விலைகோரல் முறியொன்றினை சமர்ப்பிக்காமை வெளியேற்றல் ஒன்றாக கருதப்பட வேண்டியிருந்தும் சபையின் பெயருக்கு எழுதப்பட்ட ரூபா 182,520 பெறுமதியான காசோலையொன்றின் நிலற்பிரதியொன்றை சமர்ப்பித்த வழங்குனரை வெற்றிகரமான விலைமனுதாரராக ஏற்று ஒப்பந்தம் வழங்கப்பட்டிருந்தது.

## 4.7 பதவியணியினர் நிர்வாகம்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) அங்கீகரிக்கப்பட்ட 725 பதவிகளில் மீளாய்வு ஆண்டின் திசெம்பர் 31 ஆம் திகதிக்கு சபையில் வெற்றிடமான பதவிகளின் எண்ணிக்கை 232 ஆக காணப்பட்டதுடன் அதில் 106 பதவிகள் நிறைவேற்று மட்டத்திலான பதவிகள் என்பதுடன் 126 பதவிகள் நிறைவேற்று மட்டத்தில அல்லாத பதவிகளாகும்.

(ஆ) ஆட்சேர்ப்பு முறைமைக்கு முரணாக 2015 டிசம்பர் 31 ஆம் திகதி முதல் 08 வியாபார மேம்பாட்டு உத்தியோகத்தர்களும், முகாமைத்துவ உதவியாளர் மூவரும் ஒப்பந்த அடிப்படையில் ஆட்சேர்ப்பு செய்யப்பட்டிருந்தனர். அவர்களின் ஒப்பந்தகாலம் 2016 மே மாதம் 31 ஆம் திகதியுடன் முடிவடைந்தாலும் சேவையை நிறைவு செய்யாமல் மறு அறிவித்தல் வரை சேவைக் காலம் நீடிப்பு செய்ப்பட்டிருந்தது

(இ) அங்கீகரிக்கப்பட்ட பதவியணியில் உள்ளடக்கப்படாத ஒருங்கிணைப்பாளர் பதவி ஒன்றிற்காக 2016 திசெம்பர் 20 ஆம் திகதி முதல் ஆளொருவரை ஆட்சேர்ப்பு செய்து மாதாந்தம் எரிபொருள் கொடுப்பனவு, சாரதி சமபளம், தொலைபேசிக் கட்டனம் உள்ளடங்கலாக ரூபா 83,069 செழுத்தப்பட்டிருந்ததுடன், மூன்று உசாவுனர்களை ஆட்சேர்ப்பு செய்து மாதாந்தம் ரூபா 168,800 கொடுப்பனவொன்று செழுத்தப்பட்டிருந்தது.

(ஈ) அங்கீகரிக்கப்பட்ட நிரந்தர ஊழியர் எண்ணிக்கையில் வெற்றிடங்களுக்காக அலுவலர்களை நியமிக்காமை காரணத்தினால் 13 அலுவலர்கள் பதில் கடமையாற்றல் அடிப்படையில் நியமனம் செய்து பதில் கடமை சம்பளமாக 2016 ஆம் ஆண்டில் ரூபா 830,546 தொகை செழுத்தப்பட்டிருந்தது. இவ்வலுவலர்களின் பதில் கடமையாற்றல் கால எல்லை 02 வருடத்திலிருந்து 10 வருட கால எல்லைக்ககு வியாபித்திருந்தது.

## 5. கணக்களிதகைமையும் நல்லாளுகையும்

## 5.1 நிதிக்கூற்றுக்களை சமர்ப்பித்தல்

2003 யூன் 02 ஆந் திகதிய PED/12 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் 6.5.1 ஆம் பந்தியின் பிரகாரம் வரைபு ஆண்டறிக்கை மற்றும் கணக்குகள் நிதியாண்டு முடிவடைந்து 60 நாட்களுக்குள் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு சமர்ப்பிக்கப்பட வேண்டிய போதிலும், மீளாய்வு ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2017 செப்டெம்பர் 25 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டிருந்தது.

## 5.2 பெறுகைகள் திட்டம்

அமைச்சு மற்றும் பொதுத்திறைசேரியினூடாக வழங்கப்படுகின்ற ஒதுக்கீடுகளுக்காக மாத்திரம் மீளாய்வு ஆண்டிற்கு பெறுகைத் திட்டமொன்று சமர்ப்பிக்கப்பட்டிருந்தது, சபையின் வருமானங்கள் மூலம் மேற்கொள்ளப்படுகின்ற பெறுகைகள் தொடர்பாக பெறுகைகள் திட்டமொன்று தயார்செய்யப்பட்டிருக்கவில்லை.

### 5.3 பாதீட்டுக் கட்டுப்பாடு

2003 யூன் 02 ஆந் திகதிய PED/12 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் 5.2.3 மற்றும் 5.2.4 பிரிவுகளின் பிரகாரம் மீளாய்வு ஆண்டிற்காக பாதீட்டு அறிக்கையொன்று தயாரிக்கப்பட்டிருக்கவில்லை

### 5.4 வருடாந்த அறிக்கைகளை சமர்ப்பித்தல்

2003 யூன் 02 ஆந் திகதிய PED/12 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் 6.5.3 பிரிவின் பிரகாரம் 2013,2014 மற்றும் 2015 ஆம் வருடங்களிற்கான வருடாந்த அறிக்கையை பாராளுமன்றத்தில் சமர்ப்பிப்பதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

## 6. முறைமைகளும் கட்டுப்பாடுகளும்

கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்ட முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டுக் குறைபாடுகள் அவ்வப்போது இலங்கை கைத்தொழில் அபிவிருத்தி சபையின் தலைவரது கவனத்திற்கு கொண்டுவரப்பட்டன. பின்வரும் கட்டுப்பாட்டு அம்சங்கள் தொடர்பாக விசேட அவதானம் தேவைப்படுகின்றது.

| | முறைமைகளும் கட்டுப்பாட்டுத் துறைகளும் | அவதானிப்புக்கள் |
|---|---|---|
| (அ) | நிதிக் கட்டுப்பாடு | (i) வங்கி இணக்கக்கூற்றுக்கள் தயாரிக்கும்போது நீண்ட தாமதம் கானப்படுகின்றமை<br>(ii) பல்வேறு பிரிவுகளில் நிதிக் கொடுக்கல் வாங்கல்கள் தொடர்பான ஆவணங்களை நிதிப்பிரிவிற்கு விணைதிறனுடன் சேகரிக்கப்படாமை<br>(iii) முற்பணங்களை வழங்கும்போது பணிகளுக்குத் தேவையான தொகையையும் விடக் கூடுதலாக முற்பணங்களை வழங்குதல்<br>(iv) சிறாப்பர் பிரிவில் நிதி பொறுப்பேற்றல் அலுவலக நேரத்தின் பின் மேற்கொள்ளுதல் மற்றும் காப்பகத்தில் வைப்புச் செய்தல் முறையாக மேற்கொள்ளப்படாமை |
| (ஆ) | காணிகளை குத்தகைக்கு வழங்குதல் | 09 கைத்தொழில் குடியேற்றங்களுடன் தொடர்பான 31 கட்டடங்களும் மற்றும் 57 காணித் துண்டுகளுக்கும் சட்டபூர்வமான குத்தகை ஒப்பந்தங்களில் கைச்சாத்திடாமை |

| | | | |
|---|---|---|---|
| (இ) | இருப்புக் கட்டுப்பாடு | (i) | மீதிகள் இல்லாத இருப்பு விடயங்களிற்காக இருப்பு ஏடுகளைப் பேனுதல். |
| | | (ii) | சேதமடைந்த இருப்புக்களை கணக்குகளிலிருந்து அகற்றுவதற்கு நடவடிக்கைகளை மேற்கொள்ளாமை |
| | | (iii) | சில இருப்பு விடயங்கள் தொடர்பாக பேரேட்டு அட்டைகள் மற்றும் "பின் காட்" அட்டை மீதிகளுக்கிடையல் அசாதாரண நிலைமை காணப்படுகின்றமை. |

ஒப்பம்./எச்.எம். காமினி விஜேசிங்ஹ
கணக்காய்வாளர் தலைமை அதிபதி

எச்.எம். காமினி விஜேசிங்ஹ,
கணக்காய்வாளர் அதிபதி